
# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 27 திங்கட்கிழமை (13.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 017

## பெருஞ் சத்தத்துடன் வானம் நோக்கி திடீரெனச் சீறி எழுந்தது வயல் நீர்

### நவாலியில் சம்பவம்; பீதியால் மக்கள் ஓட்டம்



படங்கள்: த. பிரதீபன்

நவாலி, டிசெ. 13

வயல் நிலத்தில் தேங்கி இருந்த மழை நீர் திடீரெனப் பெருஞ் சத்தத்துடன் வான் நோக்கி மின்னல் வேகத்தில் சுழன்று சுழன்று பாய்ந்தது. இதனைப் பார்த்த மக்கள் 'சுனாமி' அல்லது சூறாவளி ஏற்பட்டுவிட்டது என்று பதறி அடித்துக் கொண்டு ஓட்டம் எடுத்தனர்.

நவாலி மேற்குப் பகுதியில் நேற்று நண்பகல் நேரம் இந்த அச்சமூட்டும் சம்பவம் இடம்பெற்றது. இது மினிச் சூறாவளியாக இருக்கலாம் என வளிமண்டலவியல் அவதான நிலையப் பொறுப்பதிகாரி புஸ்பநாதன் தெரிவித்தார்.

நவாலி மேற்கு களையோடை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கும் (பிட்டி அம்மன்) ஆம்பன் குளத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் (28ஆம் பக்கம் பார்க்க)

# நெருடல்கள் சில நிலவி வரும் போதும் இந்திய இலங்கை உறவில் நெருக்கம்

### தீர்வு விடயத்தில் புதுடில்லி தலையிடாது என்கிறார் பாதுகாப்பு ஆலோசகர் மேனன்

புதுடில்லி, டிசெம்பர் 13

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளில் நெருடல்கள் சில இருந்த போதும் இரு நாட்டு உறவுகளும் நெருக்கமாகவே உள்ளன என்று தெரிவித்த இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், "இது இலகுவான காரியம் அல்ல என்ற போதும் ஒருவரின் விருப்புக்கு மற்றவர் மதிப்பளிப்பதன் மூலமே உறவுகளில் நெருக்கம் பேணப்படுகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

சீனாவுடன் கொழும்பு நெருங்கிச் செயல்படுவதே உறவுகளில் நெருடல் இருப்பதாக மேனன் சுட்டிக் காட்டக் காரணம் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். அதேசமயம் மேற்கு நாடுகளின் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் போர்க் குற்றங்கள் என்பவற்றில் இருந்து இலங்கை அரசை இந்தியா காப்பாற்ற வேண்டும் என்ற அதன் விருப்பத்துக்கு இயைபாக நடப்பது மற்றும் (04ஆம் பக்கம் பார்க்க)


உள்ளே...

5 உள்நாடு — ஜனாதிபதியை பொறியில் மாட்ட லண்டனில் சதி...

10 செவ்வி — கூட்டுறவுத் துறையில் மோசடிச் செய்பவர் மீது கடும் நடவடிக்கை

23 இந்தியா — சிறைமீண்ட அக்னி புயல் சீமானின் ஆவேசப் பேச்சு...!


## வடக்கில் 22,608 மாணவர்கள் சாதாரணதர பரீட்சைக்குத் தயார்!

யாழ்ப்பாணம், டிசெ.13

இன்று ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு வடமாகாணத்திலிருந்து 22 ஆயிரத்து 608 மாணவர்கள் தோற்றவுள்ளனர் என வடமாகாண கல்வியமைச்சுத் தெரிவித்துள்ளது.

அத்துடன் 2 ஆயிரத்து 598 இடம்பெயர்ந்த மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்ற மிக ஆவலாக உள்ளனர் எனவும் வடமாகாண கல்வியமைச்சுத் தெரிவித்துள்ளது. யாழ். குடநாட் (28ஆம் பக்கம் பார்க்க)

### 'உதயன்'இன் வாழ்த்து

இன்று முதல் ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப்பரீட்சையை எம் மாணவச் செல்வங்கள் உற்சாகத்துடன் எழுதி சிறந்த பெறுபேறுகளைப்பெற வேண்டும் என்று 'உதயன்' மனமார வாழ்த்துகிறான். அத்துடன் கல்விச் சுடரின் ஆசிரியர் குழாமும் மாணவர்களை வாழ்த்தி மகிழ்கிறது.

## அமைச்சர் சாலிந்தவை எதிர்த்து பெங்களூரில் தமிழர் ஆர்ப்பாட்டம்

### நிகழ்வில் கலந்துகொள்ளாமல் திரும்பினார்

கொழும்பு, டிசெ.13

இந்தியாவின் பெங்களூர் நகரில் நடைபெறும் ஆயுர்வேத இலவச மருந்துவ முகாமில் கலந்துகொள்ளச் சென்ற இலங்கை அமைச்சர் சாலிந்த திசாநாயக்க தமிழர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக நிகழ்வில் கலந்து கொள்ளாமலேயே திரும்பினார். நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (28ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய கீதம் சிங்களத்தில் மட்டுமே அமைச்சரவை தீவிர ஆலோசனை

### ஜனாதிபதியின் யோசனைக்கு விமல் ஆதரவு; வாசு எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.13

இலங்கையின் தேசிய கீதத்தை சிங்களத்தில் மாத்திரம் இசைப்பது குறித்து கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இருந்தும் இது குறித்து இறுதி முடிவு ஏதும் எடுக்கப்படவில்லை என்றும், எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டங்களில் இது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படுமென்றும் அமைச்சரவை வட்டாரங்கள் நேற்றுத் (04ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் போராளிகளில் 40 பேர் பல்கலைக்குத் தெரிவாக வாய்ப்பு

### புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, டிச.13

புனர்வாழ்வுஅளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்களுள் 40க்கும் மேற்பட்டோர் பல்கலைக் கழகக் கல்வியைத் தொடர முடியும் எனத் தாம் எதிர்பார்க்கிறார் என்று புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இவ்வருடம் இடம்பெற்ற ஜி.சீ.ஈ. உயர் தரப் பரீட்சைக்கு (28ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்பார்க்கப்பட்டதைப் போலன்றி ஐ.தே.க. மாநாடு அமைதியாக முடிவு

### தலைவர் பதவி உட்பட முக்கிய பதவிகளுக்கு இனித் தேர்தல்

கொழும்பு, டிசெ.13

வாழ்நாள் முழுதும் கட்சித் தலைவராக இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பை மாற்றும் விதத் தில் கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் நேற்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன. மாநாடு அமைதியாக முடிவடைந்தது.

ஐ.தே.கட்சியின் தேசிய மாநாடு நேற்றுக் காலை 9.30 மணிக்கு கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்றது. நாடு முழுவதுமிருந்து பெருந்தொகையான கட்சி உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் இம் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

கட்சியின் யாப்பில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசுகளின்படி கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் அனைத்தும் நேற்றைய மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப் (04ஆம் பக்கம் பார்க்க)





அன்பான வாடிக்கையாளர்களுக்கு...

யப்பான் றேடர்ஸின்

நத்தார், புதுவருட நல் வாழ்த்துக்கள்.

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு

விசேட விலைக்குறைப்பு ரூபா 5000/=

Family e-BicyCle - Rs.49,500/= Rs.44,500/=

Electric Moto Bicke

அனுமதிப்பத்திரங்கள் எதுவும் தேவையில்லை



Moto Lanka வால் கொள்வனவாளருக்கு விசேட அன்பளிப்பு கையிருப்பு உள்ளவரை

இரண்டு வருட உத்தரவாதம்

விற்பனை விலை

* King e- Scooter - Rs.94,500/= Rs.89,500/=
* Queen e- Scooty - Rs.89,500/= Rs.84,500/=

யாழ். மாவட்ட அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகஸ்தர் JAPAN TRADERS இல.10-14, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.No: 0213209637 Hot Line: 0770868079



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையிலுள்ள தமிழ்க் கைதிகளின் விவரங்களை உடன் வெளியிடுக!

## ஜனநாயக தேசிய முன்னணி வலியுறுத்து

கொழும்பு,டிச. 13

காணாமற்போனோரின் பெற்றோரிடம் அவர்களின் பிள்ளைகளைக் கண்டுபிடித்து தருவதாகக் கூறி வடக்கிலுள்ள சில குழுக்கள் பணம் வசூலித்து வருகின்றன. இதனால் சிறையில் அல்லது புனர்வாழ்வு நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்களை உடனடியாக அரசு வெளியிட வேண்டும் - என்று ஜனநாயக தேசிய முன்னணி நேற்று வலியுறுத்தியுள்ளது.

பெற்றோர்கள் சிலரிடம் 5 இலட்சம் ரூபா பணம் பெறப்பட்ட சம்பவங்களும் உள்ளன என ஜ.தே.முன்னணியின் பொதுச் செயலாளர் விஜித ஹேரத் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் கூறினார்.

தமக்கு அரச உயர்மட்டத்தவர்கள் சிலருடன் தொடர்புள்ளது என இச்சக்திகள் கூறிக்கொள்கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

இது மிகவும் பாரதூரமான நிலையாகும். எனவே, அனைத்து தமிழ்க் கைதிகளினதும் புனர்வாழ்வு நிலையங்களில் உள்ளோரினதும் விவரங்களை வெளியிடுமாறு நாம் அரசை வலியுறுத்துகிறோம்.

இத்தகைய நபர்கள் சுமார் 8,000 பேர் உள்ளனர். தமது நன்மைக்காக நாட்டின் நலன்களுக்கு எதிராகச் செயற்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சக்திகள் இவ்விடயத்தை தமது தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-சி)

# படையினரின் பெயர்களில் நிதி சேகரிக்கத் தடை

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி ''படையினருக்கான ஆதாரம்'' என்ற பெயரில் நிதி சேகரிக்கவோ, இசைக் கச்சேரிகளை நடத்தவோ முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது என தேசிய பாதுகாப்பு சம்பந்தமான ஊடக மத்தியஸ்தானத்தின் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மண் ஹுலுகல்ல தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் தேசிய பாதுகாப்பு சம் பந்தமான மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

முப்படைகள் மற்றும் பொலிஸாரின் நலனுக்கென கூறி நிதி சேகரிக்கும் பணியில் சிலர் ஈடுபட்டுள்ளனர் என தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. தனிநபரொருவருக்கோ தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களுக்கோ பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியின்றி இவ்வாறு நிதி சேகரிக்கவோ, இசைநிகழ்ச்சிகள், களியாட்டங்கள் போன்றவற்றை நடத்தவோ முடியாது.

எவராவது அத்தகைய நிதி சேகரிப்பில் ஈடுபட விரும்பினால் தேசிய பாதுகாப்பு மத்திய நிலையத்தின் ஊடாக பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டும். இந்த நிபந்தனையை மீறுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - இவ்வாறு அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (சி)

# பாதுகாப்பு விவகாரங்களில் திறந்த மனதுடன் இலங்கை - இந்தியா முடிவெடுக்க வேண்டும்

## நிருபமாராவ் தெரிவிப்பு

புதுடில்லி, டிசெ.13

பாதுகாப்பு விவகாரங்களில் இந்தியாவும் இலங்கையும் திறந்த மனதுடன் முடிவுகளை எடுக்க வேண்டும் என இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த ஊடக ஆசிரியர்களுக்கு புதுடில்லியில் கடந்த வாரம் அளித்த செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் சரியான பாதையில் இலங்கை பயணத்தை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் இப்போது அனைவருமே அமைதியை அனுபவிக்கின்றனர். பொதுமக்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர்.

நான் கொழும்பில் தங்கியிருந்த விடுதி அறையில் இருந்து பார்த்தபோது- நள்ளிரவில் கூட மக்கள் சுதந்திரமாக நடமாடுவதைக் காணமுடிந்தது.

எந்த அச்சமும் இன்றி அவர்கள் சுதந்திரமாக வாழ்கின்றனர்.

வடக்கில் இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியமர்வு நடவடிக்கைகளும் சுமுகமான முறையில் இடம்பெற்று வருகின்றன.

அது சரியான திசையில் மேற்கொள்ளப்படுவதாக நான் கருதுகிறேன்.

பெரும் போகத்தில் நெல் பயிரிடும் அளவுக்கு விவசாயிகளும் வழமை நிலைக்குத் திரும்பியுள்ளனர்.

விரைவில் முன்னைய வழமை நிலைக்கு இலங்கையில் திரும்பிவிடும் என்று நம்புகிறேன் - என்றார். (எ)

## வெற்றியின் வாசனையில்...



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. 900 மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நிகழ்வில் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார். அவரை பாடசாலை சமூகத்தின் சார்பில் அதிபர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார்.

# அரச வைத்திய தாதிமார்கள் இன்று முதல் வேலை நிறுத்தம்

கொழும்பு, டிச.13

அரச வைத்தியசாலை தாதிகள் இன்று முதல் வேலை நிறுத்தத்தில் குதிக்கின்றனர். தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்ட தாதிகளை இடமாற்றம் செய்ததை ஆட்சேபித்தே வேலை நிறுத்தம் நடைபெறுகிறது.

இது விடயம் தொடர்பில் அரசு தாதி உத்தியோகத்தர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

எமது சங்கத்தின் ஆறு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 2ஆம், 9ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் ஒருமணித்தியால வேலைநிறுத்தப் போராட்டத்தில் அரச தாதிகள் ஈடுபட்டனர். இதனால் நோயாளர்களுக்கு எதுவித அசௌகரியங்களும் ஏற்படவில்லை.

எனினும், மேற்படி போராட்டத்தில் ஈடுபட்ட தாதியர்களைப் பழிவாங்கும் நோக்கில் அவர்கள் தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் பணிபுரிந்த தாதியர்களில் 10 பேரும், களுபோவில வைத்தியசாலையில் பணிபுரிந்த தாதியர்களில் 24 பேரும், யாழ்ப்பாணம், கல்முனை, அம்பாறை மற்றும் பொலன்னறுவை ஆகிய தூர இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனை ஆட்சேபித்து அம்பாந்தோட்டை, களுபோவில வைத்தியசாலைகளில் பணிபுரியும் தாதியர்கள் கடந்த 10ஆம் திகதி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து கராபிட்டிய வைத்தியசாலையிலுள்ள தாதியர்களும் இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை, கடந்த 11ஆம் திகதி காலை 7 மணி முதல் இரத்தினபுரி, தங்காலை, கொழும்பு தேசிய வைத்தியசாலை ஆகியவற்றில் பணிபுரியும் தாதியர்களும் இதனை ஆட்சேபித்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தாதியர்களை உடனடியாக இடமாற்றம் செய்யமுடியாது. அதற்கு சட்டதிட்டங்கள் உள்ளன. எனினும், இது தொடர்பாக அரசு எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை.

ஆகவே, அரசு உடனடியாக இதற்குத் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். இல்லையேல் தொடர் வேலைநிறுத்தத்தில் நாளை முதல் (இன்றுமுதல்) ஈடுபடுவோம்.

-இப்படி அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-சி)

# ஜனாதிபதி லண்டனில் இருந்து நாடு திரும்பியபோது விமான நிலையத்தில் பாதுகாப்பு பிரிவினர் அத்துமீறல்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் லண்டன் சென்று பிரச்சினைகளுக்கு மத்தியில் நாடு திரும்பிய போது, அவரது பாதுகாப்பு பிரிவினர் கட்டுநாயக்க விமானத்தளத்தில் அத்துமீறி நடந்து கொண்ட விதம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

ஜனாதிபதி, ஒக்ஸ்போர்ட் யூனியனில் ஆற்றவிருந்த உரை ரத்துச்செய்யப்பட்டதால் அவர் உடனடியாகவே இலங்கைக்குத் திரும்பினார். இதன்போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து வேகமாக வெளியேறிவிட்டார்.

எனினும் இதன்போது அவரது பாதுகாப்பு அதிகாரிகள், விமான நிலையத்தில் உள்ள தீர்வையற்ற கடைத்தொகுதிகளில் அளவுக்கு அதிகமான பொருள்களை கொள்வனவு செய்தனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேலும் அவர்கள் அங்கிருந்த சுங்கப்பகுதியினரையும் அச்சுறுத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் ஒரு நபருக்கு என வரையறுக்கப்பட்டுள்ள 200 அமெரிக்க டொலர்களுக்கும் மேலதிகமான பொருள்களை தீர்வையற்ற தொகுதிகளில் கொள்வனவு செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகத் தீர்வையற்ற கடைத்தொகுதியினரே பொருள்களுக்கான வரியைச் செலுத்த நேரிட்டுள்ளதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன லண்டனில் இருந்து நாடு திரும்பிய போது அரச ஆதரவாளர்கள் நடத்திய தாக்குதலில், விமான நிலையத்தில் உள்ள இரண்டு வாடகைக்கார் நிலையங்கள் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# யுத்தக்குற்ற விசாரணைகளை மேற்கொள்ள சுதந்திரமான குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும்

## அமெரிக்க செனட் உறுப்பினர்கள் கடிதம்

வாஷிங்டன், டிசெ.13

இலங்கையில் யுத்தக் குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கு சுதந்திரமான குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என கோரி, அமெரிக்காவின் 17 செனட் சபை உறுப்பினர்கள் இணைந்து அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

கடந்த 25 வருட கால யுத்தத்தில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்த வேண்டும் என அவர்கள் அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பைத்தளமாக கொண்ட ராஜதந்திரிகளை சுட்டிக்காட்டி விக்கிலீக்ஸ் இணையத்தளம் விடுத்துள்ள அறிக்கையை அடுத்தே இந்தக் கோரிக்கை அவர்களால் முன் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை ஜனாதிபதி [illegible] ராஜபக்ஷவும், அவரது [illegible]ர்களும், படைத்தரப்பினரும் இலங்கையில் இடம்பெற்ற பாரிய யுத்தக் குற்றங்களுக்கு பொறுப்பானவர்கள் என அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில் யுத்த குற்ற விசாரணை தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நிர்வாகம் நடவடிக்கை எடுக்க [illegible]

# கஞ்சா உற்பத்தி; நால்வர் கைது

கொழும்பு,டிச. 13

பதியத்தலாவ மடுபொத பிரதேசத்தில் நீண்டகாலமாக கஞ்சா போதைப்பொருள் விற்பனை, உற்பத்தி என்பவற்றில் ஈடுபட்டு வந்த நான்கு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யும் போது அவர்களிட மிருந்து 227 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருள், 1,040 கஞ்சா கன்றுகள் உட்பட கஞ்சா உற்பத்திக்கு தேவையான பல பொருள்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பிரதேச வாசிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து குறித்த பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை விசேட பொலிஸ் குழுவொன்று மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டதுடன், போதைப் பொருள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஓ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜனாதிபதி மஹிந்தவுக்கு எதிரான

# லண்டன் ஆர்ப்பாட்டத்தில் புலிக்கொடிகள்

## இலங்கை அதிகாரபூர்வ எதிர்ப்பை வெளியிடும்

கொழும்பு, டிசெ.13

லண்டனில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு எதிராகப் போராட்டங்களை மேற்கொண்டவர்கள் புலிக்கொடிகளை வைத்திருந்தது குறித்து பிரிட்டனுக்கு இலங்கை அரசு அதிகாரபூர்வ எதிர்ப்பை வெளியிடவுள்ளது.

பிரிட்டனில் தடை செய்யப்பட்ட அமைப்பான விடுதலைப் புலிகளின் கொடியைப் போராட்டம் நடத்தியோர் வைத்திருந்தமை தொடர்பாக அரசின் அதிகாரபூர்வ எதிர்ப்பைத் தெரிவிக்க லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக லண்டனில் உள்ள இலங்கையின் துணைத்தூதுவர் அம்ஸா, பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாக கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக லண்டனில் ஹீத்ரூ விமான நிலையத்திலும், அவர் தங்கியிருந்த விடுதிக்கு முன்பாகவும் இரண்டு இடங்களில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களின் போது பலரும் புலிக் கொடிகளை ஏந்தியிருந்தனர்.

பிரிட்டனில் தீவிரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் புலிகள் அமைப்புத் தடை செய்யப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட அமைப்பு ஒன்றின் சின்னங்களை ஏந்தியிருப்பது குற்றமாகும். ஆனாலும் போராட்டம் நடத்தியவர்கள் புலிக்கொடிகளை ஏந்தியிருந்ததை அங்கிருந்த காவல்துறையினர் கண்டு கொள்ளவில்லை. அவர்கள் அந்தச் சட்டமீறலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, இது குறித்துக் கருத்து வெளியிட்ட கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரக அதிகாரி ஒருவர் பிரிட்டனில் தொடர்ந்தும் தடை செய்யப்பட்டே உள்ளது. ஆனால் பேரணிகள் குறித்து முடிவெடுப்பது காவல்துறைதான். மோசமான செயற்பாடு என்று கருதுமிடத்தில் காவல்துறையினர் தீவிரவாதச் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பார்கள் என்று கூறியுள்ளார். (ஒ)

# பிரிட்டனுக்கான மாணவர் விசா நடைமுறை; புதிய கட்டுப்பாடுகள் விரைவில் அமுலுக்கு!

கொழும்பு, டிசெ.13

பிரிட்டனுக்கு மாணவர் விசாவில் செல்பவர்கள், தமது படிப்பை நிறைவு செய்த பின்னர் அங்கு வேலை தேடித் தங்க முடியாதவாறு விசா நடைமுறைகளில் கூடுதல் கட்டுப்பாடுகள் வரவுள்ளதாகவும், ஆங்கிலப் பாடத்தகுதி கட்டாயமாக்கப்படவுள்ளதாகவும் பிரிட்டனின் குடிவரவு அமைச்சர் டொமினியன் கிரீன் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக சீனா, இந்தியா, இலங்கை, அயர்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் மாணவர் விசாவில் பிரிட்டனுக்கு வருகின்றனர். எனினும், இவ்வாறு மாணவர் விசாவைப் பயன்படுத்தி சட்ட விரோத குடியேற்றவாசிகள் பிரிட்டனுக்குள் நுழைவதையும், மாணவர்களின் எண்ணிக்கையையும் கட்டுப்படுத்த அரசு விரும்புவதாகவும் மேலும் கூறப்பட்டுள்ளது.

உண்மையில் தமது கல்விக்காக பிரிட்டன் வரும் மாணவர்கள் தமது கற்கைநெறி முடிந்ததும், அங்கிருந்து திரும்பவிட வேண்டுமெனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் டொமினியன் கிரீன் தெரிவித்தார்.

எனவே இனிவரும் காலங்களில் பட்டதாரிக் கற்கை நெறிக்குக் கீழுள்ள கற்கை நெறிகளைத் தொடர அனுமதி மறுக்கப்படவுள்ளது. இவ்வாறு பட்டதாரிக் கற்கைநெறிக்குக் கீழுள்ள கற்கை நெறிக்கு வரும் மாணவர்களே தமக்கென ஒரு வேலையைத் தேடி சட்டவிரோதமாகப் பிரிட்டனில் தங்குகின்றனர். இனி ஆங்கிலப் பாடத்தகுதியையும் இறுக்கமாக்கி இவ்வாறு தங்குபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசு திட்டமிட்டுள்ளது. - என்றார்.

பிரிட்டனுக்குள் செல்பவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் மாணவர் விசாவிலேயே செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. அதோடு ஒரு கற்கை நெறி முடிவடைந்த பின்னர் தொடர்ந்தும் கற்க விரும்பினால் அம்மாணவர்கள் தங்கள் நாடு சென்று, புதிதாக விசா பெற்று வரும் நடைமுறையும் விரைவில் பிரிட்டனில் அமுலுக்கு வரவுள்ளது. (எ)

# நேபாள உள்நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்குமாறு இலங்கையிடம் ஒருபோதும் கோரவில்லை

### நேபாளம் மீண்டும் உறுதியாகத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.13

நேபாளத்தில் நிலவி வரும் உள்நாட்டுப் பிரச்சினையில் இலங்கை தலையிட்டுத் தீர்த்து வைக்கவேண்டும் என இலங்கை ஜனாதிபதியிடம் நேபாள அதிபர் ஒருபோதும் கோரிக்கை விடுக்கவில்லை. அவ்வாறு கோரிக்கை விடுத்ததாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் பொய் சொல்கிறார். - என்று நேபாள அரசாங்கம் மீண்டும் தெரிவித்துள்ளது.

தமது நாட்டின் அரசியல் பிரச்சினையைத் தீர்த்து வைக்க உதவுமாறு நேபாள அதிபர் ராம்பரன் யாதவ் கேட்டுக் கொண்டதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அண்மையில் கூறியிருந்தார்.

மாலைதீவு அரசியல் பிரச்சினைகளில் தலையிட்டது போன்று, தமது நாட்டின் அரசியல் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்குமாறும் மஹிந்த ராஜபக்ஷவிடம் அவர் கேட்டுக் கொண்டதாகவும் அமைச்சர் பீரிஸ் கூறியிருந்தார்.

ஆனால் பீரிஸின் இந்தக் கருத்தை நேபாள அதிபரின் பேச்சாளர் ஏற்கனவே மறுத்திருந்தார்.

இந்தநிலையில் கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர், பீரிஸ் நேபாள அதிபர் அரசியல் பிரச்சினைகளத் தீர்க்க உதவுமாறு அந்நாட்டு அதிபர் கோரியது உண்மையே என்று கூறியிருந்தார்.

ஆனால் அமைச்சர் பீரிஸ் சொல்வது பொய் என்று நேபாள அதிபரின் பேச்சாளர் ராஜேந்திர தால் மீண்டும் தெரிவித்துள்ளார்.

இதில் எந்த உண்மையும் கிடையாது. அப்படியான கோரிக்கைகள் ஏதும் விடப்படவில்லை என்பதை உறுதியாகக் கூற முடியும்.

இந்த விடயம் இலங்கை அரசிடம் வெளிவிவகார அமைச்சின் ஊடாக கொண்டு செல்லப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

# ரூ. 20 லட்சம் பெறுமதி ஹெரோயினுடன் பங்களாதேஷ் நாட்டுப் பிரஜை கைது

கொழும்பு, டிசெ.13

கொழும்பு நகரம் முழுவதிற்கும் ஹெரோயின் போதைப் பொருளை விநியோகம் செய்து வந்த பங்களாதேஷ் பிரஜை ஒருவரை கொழும்பு கலால் திணைக்களத்தின் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பம்பலப்பிட்டியில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரின் உடலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 520 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது என கலால் அதிகாரியும் ஊடகப் பேச்சாளருமான பிரபாத் ஜயவிக்கிரம தெரிவித்தார்.

இவர் தங்கியிருந்த சொகுசு ஹோட்டல் அறையை சோதனை செய்தபோது இவர் இதற்கு முன் கொண்டு வந்தார் என சந்தேகிக்கப்படும் 81 பக்கற்றுகளும் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர் அடிக்கடி இவ்வாறு ஹெரோயினைக் கடத்தியுள்ளார். அவருடன் சம்பந்தப்பட்ட ஏனைய நபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பிரபாத் ஜயவிக்கிரம மேலும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் நேற்றிரவு ஊடகவியலாளர் தாக்கப்பட்டுக் காயம்

மட்டக்களப்பு, டிசெ.13

மட்டக்களப்பில் ஊடகவியலாளர் ஒருவர், மூவர் கொண்ட குழுவினரால் நேற்றிரவு தாக்கப்பட்டு, படுகாயமடைந்துள்ளார்.

மாணிக்கபோடி சசிகுமார் (35 வயது) என்ற இந்த ஊடகவியலாளர் மட்டக்களப்பு ஜெயந்திபுரத்தில் அவரது வீட்டில் வைத்தே தாக்குதலுக்கு இலக்கானார்.

தாக்குதலுக்குள்ளான சசிகுமார் தலையிலும் கையிலும் காயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஒ)

### நாடெங்கிலும் தேங்காய்க்கு திடீரென ஏற்பட்டுள்ள மவுசு...



## ஓட்டோச் சாரதி கொலை; சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, டிசெ.13

கொழும்பு - மாளிகாவத்தை கெத்தாராம விளையாட்டரங்கின் முன்னால் வைத்து ஓட்டோச் சாரதியொருவர் வெட்டியும், குத்தியும் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத் தின் பேரில் மூன்றரை வருடங் களின் பின் இருவர் கொழும்பு மத்திய குற்றத்தடுப்பு விசேட பிரிவினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

சம்பவத்தில் கொல்லப் பட்ட ஓட்டோச்சாரதி 2009 ஆம் ஆண்டில் கிராண்ட்பாஸில் பிரபல பாதாள உலக நப ரொருவரை கைது செய்வதற்கு தகவல் கொடுத்தார் என்ற காரணத்தாலேயே கொலை செய்யப்பட்டார் - என கைதான இருவரும் பொலிஸாருக்கு வாக்குமூலம் கொடுத்துள்ள னர். கொழும்பு மத்திய குற்றத் தடுப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# அடைமழை, வெள்ளத்தில் சிக்கிக் காயமுற்ற 100பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில்

கொழும்பு, டிசெ.13

கடந்தவாரம் கொட்டித் தீர்த்த அடைமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண்சரிவு போன்ற அனர்த்தங்களில் சிக்கி காயமடைந்த சுமார் நூறுபேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அவசரச் சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட இவர்களில் கர்ப்பிணிகளும், குழந்தைகளும் அடங்குகின்றனர் எனறும் தெரிவிக்கப்பட்டது.

சில வீதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை ஒட்டி தற்காலிகமாக போடப்பட்ட கொங்கிறீட் தூண்கள் உடைந்து வீழ்ந்ததாலும், மின்சாரத்தால் தாக்கப்பட்டதாலும், அதிகம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவிகளின் நடத்தைப் பிறழ்வு தொடர்பாக வைத்தியசாலை நிபுணர்களால் கலந்துரையாடல்

அச்சுவேலி, டிசெ.13

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவிகள் சமகாலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகப் பெற்றோர் - ஆசிரியர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் யாழ். போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த பெண் நோயியல் மருத்துவ நிபுணர்களும், உளநல மருத்துவ நிபுணர்களும் இணைந்து நகரப் பாடசாலைகளில் பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் ஒன்று கூட்டிக் கலந்துரையாடி வருகின்றனர்.

யாழ். நகரத்தில் உள்ள பெண்கள் பாடசாலைகளில் வகுப்பு ரீதியாக பெற்றோர், ஆசிரியர்கள் உள்ளடங்கிய நிலையில் இடம்பெறும் மேற்படி கலந்துரையாடலில் -

சமகால சூழ்நிலையில் மாணவிகள் - மாணவர்களின் நடத்தைப் பிறழ்வுக்கு அடிப்படையான காரணிகளில் பெற்றோர், பிள்ளைகள் மீது கவனம் செலுத்த வேண்டும், ஆசிரியர்கள் எந்த வகையில் மாணவர்களுக்கு வழிப்படுத்தல்களை மேற்கொள்ளவேண்டும் என்பது தொடர்பாகவும் -

சம காலத்தில் 15 - 19 வயதுப் பிரிவினர் எதிர்நோக்கும் பாதிப்புகள், போதனா வைத்தியசாலையில் தினமும் எதிர்கொள்ளும் வைத்தியப் பிரச்சினைகள் ஆகியவை தொடர்பாகவும் உணர்வு பூர்வமாகவும் கவலையுடனும் எடுத்து விளக்கி எதிர்காலத்தில் இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பாக மேற்படி வைத்திய நிபுணர்கள், உளமருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை பெண்ணியல் வைத்திய நிபுணர் டாக்டர் முகுந்தன், உளநல வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.சிவயோகன் ஆகியோர் பாடசாலைகள் தோறும் மேற்கொண்டுவரும் இந்த சமூக விழிப்புணர்வு தொடர்பான உயர் சேவைக்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

(201-11)

## வல்லை வைத்தியசாலையில் மரணமானவரைத் தெரியுமா?

தொண்டமானாறு செல்வச்சந்நிதியில் தங்கியிருந்த யாழ்ப்பாணம் சோனகத் தெருவைச் சேர்ந்த வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய சாலையில் நேற்று மரணமாகிவிட்டார். இவரது உறவினர்கள் யாராவது இருந்தால் வைத்தியசாலையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.(ஒ-15)

## தேசிய கீதம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருந்தன.

தேசிய கீதத்தை சிங்களத் தில் மாத்திரம் இசைக்க வேண்டும் என்ற யோசனையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவைக்கு முன்வைத்தார். இதற்கு அமைச்சர் விமல் வீரவன்ஸ முழு ஆதரவையும் வழங்கியதுடன், "சுமார் 300 மொழிகள் பேசும் இந்தியாவில் தேசிய கீதம் இந்தியில் மாத்திரமே இசைக்கப் படுகிறது" என்றார். அத்துடன் "நீங்களும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் யாழ்ப்பாணம் சென்றால் தேசிய கீதத்தை சிங்களத்தில் இசைக்கின்றார்கள். நான் சென்றால் மாத்திரம் தமிழில் இசைக்கின்றார்கள்" என்ற குற்றச்சாட்டையும் முன் வைத்தார்.

"இந்த நேரத்தில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுவது குறித்து நாம் அவசரப்படத் தேவையில்லை. அது குறித்து பின்னர் பரிசீலிக்கலாம்" என்றார் அமைச்சர் ராஜித சேனாரத்ன. இந்த நேரத்தில் குறுக்கிட்ட அமைச்சர் அதாவுட செனவிரத்ன "குறைந்த பட்சம் தேசிய கீதத்தில் ஓரிரு தமிழ் சொற்களையாவது சேர்த்துக் கொள்வது நல்லது" என்றார்.

எவ்வாறாயினும், தேசிய மொழிகள் மற்றும் இன நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தேசிய கீதம் சிங்களத்தில் மாத்திரம் இசைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை அமைச்சரவையில் ஏற்க மறுத்து கருத்துத் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேசிய கீதம் சிங்களத்தில் மாத்திரம் இசைக் கப்பட வேண்டும் என்ற முடிவை பின்னர் பார்க்கலாம் எனத் தெரிவித்ததையடுத்து, அவ்விடயம் முடிவுக்கு வந்தது.

இதேவேளை, ஆங்கிலப் பத்திரிகையொன்று, இனிமேல் சிங்களத்தில் மாத்திரமே தேசிய கீதத்தை இசைக்க அமைச்சரவை தீர்மானித்த தாக நேற்று செய்தி வெளியிட்டிருந்தது. (உ-சி)

(முன்னர் வந்த செய்தி 16ஆம் பக்கத்தில்)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி புஸ்பராணி பத்மநாதனின் அன்புத் தந்தை

**இளையதம்பி நடராசா**

அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**பாடசாலைச் சமூகம்.**

யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி.

## மரண அறிவித்தல்கள்



**சவரிமுத்து அன்ரன் பிரான்சிஸ்**

**(சில்லாலை)**

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் O.L.R. அவனியு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து அன்ரன் பிரான்சிஸ் 10.12.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து -அக்னஸ் தம்பதியரின் இளைய மகனும் S.A. யோசேப், காலஞ்சென்ற S. அலோசியஸ் மற்றும் யோன் ஒப்ஆர்க், புளோரிமன்ட், ராணியோசேப், அருட் தந்தை பீற்றர் பொன்கலன் (O.M.I.), பற்றிமாராஜா, எமில் ஜெகநாதன், இமெல்டா ஜொய்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் றோசலின்புளோசம், விவினாராணி, இசபெல்லா சுகந்தம், எலிசபெத்ராணி, காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம், நீக்கிலஸ் ஜோசப், தெய்வேந்திராபோல் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரபா, ஜெனதா - சஞ்சீவ், ரஞ்ஜீவ், சஜீவ் - ஜெகஜீவ், மினுரா, மதுரா, நிறோஷா, பிரியஜீவ் ஆகியோரின் குட்டிமாமாவும் சியாமினி, கிங்ஸ்லி, லான்ஸ்லி, சுபோதினி, வின்ஸ்லி, றொணி-ரமேஸ், டிலான், ரஜிதா, டினேஸ், பிரியந்தன் - சந்துரு, லாவணியா, சுகன்யா, பிரவின்யா - கெவின், ஷாண்தல் ஆகியோரின் ஆசைச் சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (14.12.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சகோதரர்கள்.
(ராணி யோசேப்)

சென். லூட்ஸ் லேன்,
சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு.

(107279) தொ.பே. : 0773445538

### திருமதி பரமு தங்கம்மா

அளவெட்டித் தெற்கு, கலைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமு தங்கம்மா கடந்த (10.12.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியன் - ஐயாள் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற பரமுவின் அன்பு மனைவியும் நடராசா, ராசமணி, நவமணி, நேசமணி, ருக்குமணி, வசந்தமணி ஆகியோரின் அன்புத் தாயும் பத்மாவதி, நல்லையா, தனபாலசிங்கம், தருமு, ஜெயராசா, சண்முகராசா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2010) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி தெற்கு,
கலைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

## நெருடல்கள் சில.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குப் பதிலாக பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியாவுக்கும் கணிசமான பங்கை அளிப்பது போன்ற விடயங்களே மேனன் குறிப்பிட்ட "விருப்பங்களுக்கு மதிப்பளித்தல்" என்ற இராஜீய வார்த்தைகளுக்கு அர்த்தம் என்றும் அவதானிகள் சுட்டிக்காட்டினர்.

புதுடில்லிக்கு வந்திருந்த இலங்கை ஊடகங்களின் ஆசிரியர்களை பாதுகாப்பு அமைச்சில் சந்தித்துப் பேசினார் சிவ்சங்கர் மேனன். அப்போதே இரு நாடுகளின் உறவுகள் பற்றி மேனன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**எமக்கு முக்கியமானது கொழும்புத் துறைமுகம்**

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அந்த நாட்டுக்கு உள்ளேயே தீர்வு காணப்பட வேண்டும். தமது மக்களின் விருப்பங்களை அறிந்து நல்லதொரு தீர்வை முடிவு செய்ய வேண்டியது கொழும்புதான்.

இந்திய- இலங்கை உறவுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் சக்தியாக ஊடகங்கள் உள்ளன. எம்மைப் பொறுத்தவரையில் இலங்கை ஒரு முக்கியமான பங்காளி நாடு.

இந்தியாவுக்கு மிகவும் அருகில் உள்ள கொழும்புத் துறைமுகம் எமக்கு மிகவும் முக்கியமான ஒன்று. எமது பாதுகாப்பும் அதனுடன் இணைந்துள்ளது.

இனத்துவ அடிப்படையில் மட்டு மன்றி மத மற்றும் சமூக ரீதியாகவும் இலங்கையுடன் இந்தியா பின்னிப் பிணைந்துள்ளது.

தற்போதைய உலக ஒழுங்கின்படி, யாருமே தனித்து இயங்க முடியாது. சேர்ந்து இயங்காமல் எம்மால் எதையும் செய்ய முடியாது. இந்தியாவும் இலங்கையும் அண்டை நாடுகள்.

**சிக்கல் இருந்தாலும் உறவில் நெருக்கம்**

சிக்கலான விவகாரங்கள் இருந்தாலும் இருதரப்பு உறவுகள் மிகவும் நெருக்கமாகவே உள்ளன. தீவிரமானதும் சிக்கலானதுமான பிரச்சினைகள் விடயத்தில் எமக்கிடையே இணக்கப்பாட்டைக் கொண்டுள்ளோம். இது இலகுவான காரியமல்ல. ஒருவரின் விருப்பத்துக்கு மற்றவர் மதிப்பளிப்பதன் மூலம் வெற்றிகரமாக அதற்கு முகம் கொடுக்கிறோம்.

வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினை தொடர்பாக இலங்கைக்கு உதவ நாம் தயாராகவே உள்ளோம். ஆனால் முடிவுகளை இலங்கையே எடுக்க வேண்டும். இந்தியா உதவத் தயாராக உள்ளது.

**தீர்வை இந்தியா திணிக்காது**

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின்படி அரசியல் தீர்வு அமைய வேண்டுமா இல்லையா என்பதை சிறிலங்காவே முடிவு செய்ய வேண்டும். எந்தத் தீர்வையும் இந்தியா திணிக்காது.

இந்த மாதிரி அல்லது அந்த மாதிரியான தீர்வை நடைமுறைப்படுத்துங்கள் என்று நாம் சொல்லமாட்டோம். இலங்கை மக்கள் தமது பிரச்சினைகளுக்கு உள்நாட்டுக்குளேயே தீர்வு காண வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நடைமுறைப் படுத்துமாறு இந்தியப் பிரதமர் பரிந்து பேசவில்லை. இறுதியான முடிவை இலங்கையே எடுக்க வேண்டும். அதிலும் முக்கியமாக ஐக்கிய இலங்கைக்கு உள்ளிருந்தே தீர்வு வரவேண்டும்.

கடந்த 30 ஆண்டுகளில் இந்தியாவின் எந்தவொரு பிரதான அரசியல் கட்சியும் விடுதலைப் புலிகளை ஆதரிக்கவில்லை. இந்தியாவில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் மாநிலங்களில் ஒன்று தமிழ்நாடு.

**தமிழ் நாட்டுக்கு தவறான புரிதல்**

இலங்கையின் வடமாகாணத்தில் வாழும் மக்கள் குறித்து தமிழ்நாடு உணர்வுகளைக் கொண்டுள்ளது. அதேவேளை, அவர்கள் தவறான புரிதல்களையும் கொண்டுள்ளனர்.

தீவிரவாத நடவடிக்கைகளுக்கு எமது மண்ணைத் தளமாகப் பயன்படுத்த ஒருபோதும் அனுமதிக்காது. இதில் இந்தியா உறுதியாக உள்ளது.

இங்கு தமிழ்நாடு அல்லது புலம்பெயர் தமிழர்கள் அதிகம் முக்கியமானவர்கள் என்று நான் கருதவில்லை.

இலங்கையில் உள்ள மக்கள் தீர்வு ஒன்றைப் பெற்று மகிழ்ச்சியடையவார்களேயானால், தமிழ்நாட்டில் உள்ளவர்கள் எதற்காக வருத்தப்பட வேண்டும்? என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எதிர்பார்க்கப்பட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டன. ஓர் உறுப்பினர் மாத்திரம் இத் திருத்தங்களுக்கு எதிராக வாக்களித்துள்ளார்.

ஐ.தே.கட்சி யாப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களின்படி, எதிர்வரும் நான்கு மாதங்களுக்குள் கட்சித் தலைவர் பதவி உட்பட முக்கிய ஐந்து பதவிகளுக்கு தேர்தல்கள் மூலம் தெரிவு இடம்பெறும். அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ மாநாட்டுக்கு வருகை தந்தபோது உறுப்பினர்கள் ஆரவாரம் செய்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

மோதல்கள் ஏற்படலாமென எதிர்பார்க்கப்பட்ட ஐ.தே. கட்சி மாநாடு மிகச் சுமுகமான நிலையில் நேற்று முடிவடைந்தது. காலை 9.30 மணிக்கு ஆரம்பமான மாநாடு பகல் ஒரு மணியளவில் நிறைவுபெற்றது.

காலையில் சிறிகொத்தா வாயிலில் ஏற்பட்ட நெரிசல் காரணமாக கட்சி ஆதரவாளர்கள் கம்பி வேலி மீதேறி உள்ளே சென்றதையும் காணக்கூடியதாக இருந்தது. அழைப்பு விடுக்கப்பட்ட உறுப்பினர்களைவிட பெரும் எண்ணிக்கையான ஆதரவாளர்கள் இந்த மாநாட்டுக்கு வருகை தந்திருந்தனர்.

கட்சியின் யாப்புக்கான புதிய திருத்தங்களை கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க முன்மொழிந்தார். செயற்குழு உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜேதாச ராஜபக்ஷ வழிமொழிந்தார். மாநாட்டில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜோஸப் மைக்கல் பெரேரா, சஜித் பிரேமதாஸ, ஷிரால் லக்திலக ஆகியோர் உரையாற்றினர். (உ-5)


COMPUTER COURSES

Diploma in Computerized **Accounting** Tally, Quick Book, Accpac M.Y.O.B

Diploma in **Video Editing** Premiere Pro CS4, particleIllusion, Pinnacle Studio, Adobe After Effe. Nuendo,

Diploma in **AutoCAD** 2D & 3D Modeling

Adv. Dip. in **Hardware & Networking**

புதிய பிரிவுகள் ஆரம்பம்.

DMI COMPUTER EDUCATION

DMI COMPUTER EDUCATION

113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel. : 021-222 4403.

M. M. V. வீதி, நெல்லியடி. Tel. :021-226 2470

மணமகள் தேவை

யாழ்ப்பாணம் உயர் இந்து கௌரவமான குடும்பம் 49 வயது. சிறுநிறுவனமொன்றை பல்லாண்டு காலமாக நடத்திவரும் விவாகரத்துப்பெற்ற (பிள்ளைகள் இல்லை) நல்ல குடும்பப் பின்னணியைக் கொண்டவருக்கு வாழ்க்கைத் துணை ஒன்றைத்தேடுகிறார். தாரமிழந்தவர்களும், மணமாகாதவர்களும் சாதகக் குறிப்பு, தொலைபேசி இலக்கம் மற்றும் குடும்ப விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல.4100, உதயன் [107230]

Personal and Group Classes

தரம்: 6 O/L வரை

T.P.: 0777965673

K.JANA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 - தொலைநகல்.: 222 9944

## மக்களை ஆதங்கப்பட வைக்காதீர்!

தம்மத்தியில் செயற்படும் அரசியல் தலைவர்கள் அவர்களுக்கிடையே ஒத்துழைத்துக் கருமமாற்ற வேண்டும். மிகக் குறிப்பாக இனப்பிரச்சனைக்குத் தீர்வு ஒன்றைப் பெறுவதற்கு அரசியல் கட்சிகள் ஒரே அணியில் சேர்ந்து உழைக்க வேண்டும் என்பது இலங்கைத் தமிழ் மக்களின் பொதுக்கருத்தாக உரு வெடுத்திருக்கும் காலம் - வேளை - இது. தங்கள் அரசியல் தலைவர்கள் தமக்குள் உள்ள வேண்டாத வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, வேற்றுமையில் ஒற்றுமை காணவேண்டிய தட்டிக்கழிக்க முடியாத தேவையை அவர்கள் அண்மைக் காலமாகப் பகிரங்கமாகவும் தமக்குள்ளும் பேசிவந்தனர்; வெளிப்படுத்தவும் செய்தனர்.

தங்களுக்கு இடையேயான அரசியல் செல்வாக்கை பலப்படுத்துவதற்காக, பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டாது என்று உதாரணம் காட்டி மேடை களில் பேசிய காலம் தொட்டு இன்றுவரை, தமிழ்த் தலைவர்கள் மக்கள் நலன்கருதி ஒரே அணிசேர்ந்து ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என மனதார நினைத்து, இதய சுத்தியுடன் சேவை ஆற்றியது மிக மிகக் குறைவே. அதனாலேயே தமிழர் மத்தியில், வாழை குட்டி போட்டது போன்று, கைவிரல்களால் எண்ண முடியாத அளவுக்கு அரசியல் கட்சிகள் பல்கிப் பெருகி உள்ளன.

இந்தக் குறைபாட்டை தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, அதனை ஆயுதமாக்கிக் கொண்டு சிங்கள அரசியல் தலைவர்கள், குறிப்பாக அவ்வப் போது ஆட்சி அதிகாரபீடத்தில் இருந்தவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளை மறுத்துவந்தனர்; இப்போதும் அதுவே நடக்கிறது.

தமிழ் மக்களின் 30 வருட கால அரசியல் போராட்டம், எந்தவிதமான குறிப்பிடத்தக்க உரிமைகளையும் பெற்றுத்தராமல், தோற்றுப் போன நிலைமையை தோற்றுவித்ததில் தமிழ் அரசியல் தலைவர்களே பெரும் பங்காளிகள். இந்தக் கசப்பான உண்மைகளைப் புரிந்து கொண்ட வர்களாக, இன்றைய தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒன்று சேர்ந்து உழைக்க முன்வந்தி ருப்பது காலத்தின் தேவையாகிவிட்டது. இந்த முயற்சி தட்டிக் கொடுக்கப்பட வேண்டியதாகும். அது இடையில் கலைந்து குலைந்து விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய அவசியமும் அவசர மும் வேறு எப்போதும் உள்ளதை விட இப்போது தோன்றி உள்ளது, கட்டாயமாகி உள்ளது.

சர்வ அதிகாரங்களும் கொண்ட ஆட்சித் தலைவராக மகிந்த ராஜபக்ஷ உயர்ந்து நிற்கின்றார். இந்தியாவோ வேறு எந்த நாடோ எந்தவித அழுத்தத்தையும் கொடுக்க இடம்தராமல், தாம் விரும்பிய ஏதாவது சில்லறைத் தீர்வை திணிக்க முயல்வதாகவே அவரது கருத்துக்கள் புலப்படுகின்றன; வெளிப்படுகின்றன.

எனினும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன், அவர் களின் அரசியல் தலைவர்களுடன் பேச்சு நடத்தியே தீர்வு காணப்படும் என்று இனிய மொழிகள் பேசுகின்றார்; சர்வதேசத்துக்குச் சொல்லுகிறார்.

இத்தருணத்தில், தமிழ் மக்களின் அரசியல் தலைவர்கள் ஓரணி சேர்ந்து, தீர்வு யோசனை ஒன்றை ஏகோபித்து முன்வைக்க முடிவு செய்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். நேற்று முன் தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போதான முகிழ்ப்பு, மொட்டாகி, மலராகி, காயாகி, கனியாகும் வரை ஓரணியும், ஒற்றுமையும் குலைந்துவிடக் கூடாது.

அதற்கு எதிர்மாறான ஒரு நிலைமையை தோற்று விப்பதற்கு அதிகாரத்தில் உள்ளவர்கள் முயல் வார்கள். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ்க் கட்சி களின் அரங்கம் ஆகியவற்றை 'விலை' கொடுத்து வாங்கும் முயற்சிகள் கூட இடம் பெறலாம். தமிழ் அரசியலில் இது அனுபவப் பாடம்.

ஆகையால் ஒருதுளி போலித்தனமும், விலை போதலும், குறுக்காக இழுத்தலும், திரை மறைவு நாடகங்களும், சுயநலமும் இல்லாது உழைப்பதற்கு -

-நேற்று முன்தினம் முடிவு செய்ததற்கு இணங்க-

- தமிழர் தரப்பில் உறுதியான, பலம்மிக்க அரசி யல் தீர்வுத்திட்டத்தை ஏகோபித்து முன்வைக்க வேண்டும். அதுவே தமிழ் மக் களின் விருப்பமாகும். மக்கள் ஆதங்கமுறா திருக்க இவர்கள் நடந்து கொள்வார்களா?

# ஜனாதிபதியை பொறியில் மாட்டுவதற்கு லண்டனில் நடைபெற்றுள்ள சதிமுயற்சி

**நேற்று 12.12.2010 அன்று சண்டே ரைம்ஸ் எழுதியிருந்த அரசியல் விமர்சனத்தின் ஒரு பகுதியிது**

ஒரீத்ரு விமான நிலையத்தில் புலிகள் சார்பு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் லண்டன் நகர பொலிஸார் இரகசியமாக செயற்பட்டு அதிபர் ராஜபக்ஷவை அங்கிருந்து அவரது ஐந்துநட்சத்திர ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றுவிட்டனர்.

ராஜபக்ஷவுக்கு ஒக்ஸ்போர்ட் யூனியனில் அப்போதைய தலைவர் ஜேம்ஸ் கிங்ஸ்டனிடமிருந்து ஒரு பக்க கடிதம் ஒன்று கிடைத்தது. அவர் கூறியிருந்ததாவது:- ஆழ்ந்த கவலையுடன் நாங்கள் அறிவிக்க விரும்புகிறோம். உங்களுக்கு நாம் அனுப்பிய அழைப்பினை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். தேம்ஸ் வெலி பொலிஸாரால் எமக்கு நேற்று மாலையில் (நவம்பர் 30) தெரிவிக்கப் பட்ட பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அந்த யூனியனால் டிசெம்பர் 2 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்த அறிக்கைக்கு நேர்மாறாக இது அமைந்திருந்தது. அந்த அறிக்கையில்; குறித்த பேச்சானது இனிமேலும் சாத்தியமற்றது என்பதை கவலையுடன் அறிந்து கொண்டுள்ளோம். அதனால் அவரது உரையை இரத்துச் செய்ய நேர்ந்துள்ளது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அதிகாரபூர்வமாக ஒக்ஸ்போர்ட் யூனியன் ராஜபக்ஷவுக்கு விடுத்த அழைப்பைத் திரும்பப் பெற்றுக் கொண்டு உலகுக்கு அவரது பேச்சு இரத்துச்செய்யப்பட்டுவிட்டதாக அறிவித்துள்ளது.

இந்த இரு அறிவிப்புக்களிலும் ஒரு வித்தியாசத்தைக் கவனிக்கலாம்;

## டக்ளஸ் லண்டன் சென்றிருந்தால் பெரும் எதிர்ப்புக்குள்ளாகியிருப்பாராம்

முதலாவதில் அழைப்பு திரும்பப் பெற்றுக்கொள்ளப்படுகிறது என்பதன் பொருள் என்னவென்றால், அவர் மேற்கொண்டும் அழைக்கப்பட மாட்டார் என்பதாகும். இரண்டாவதில் இரத்துச் செய்யப்படுகிறது என்பதில் குறித்த நிகழ்வு மீளவும் இடம்பெறுவது சாத்தியம் என்பதையே குறிப்பதாயிருந்தது.

டிசெம்பர் 2 ஆம் திகதி ஜனாதிபதி ஒக்ஸ்போர்ட் யூனியனில் நிகழ்த்தவிருந்த உரை இரத்துச் செய்யப்பட்டமை குறித்து ராஜபக்ஷ சற்று கலவரமடைந்தே இருந்துள்ளார். கடந்த புதன்கிழமை நடத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் பின்வரும் கருத்தை அவர் வெளியிட்டிருந்தார்.

கிங்ஸ்டன் அந்த கடிதத்தைத் தமக்கு எழுதியிருந்த போதிலும் அந்த சனிக்கிழமை டிசெம்பர் 4 ஆம் திகதியுடன் அவரது யூனியனின் தலைவர் பதவி முடிவடைந்துவிட்டது. புதிய தலைவர் ஜேம்ஸ் வாட்மன் தம்மைச் சந்தித்து டிசெம்பர் 5 ஆம் திகதி(ஞாயிறு)வரை தம்மை லண்டனில் தங்கியிருக்கும்படியும் அவ்வாறாயின் புதிய அழைப்பு ஒன்று வழங்குவது சாத்தியமாகலாம் என்றும் தெரிவித்தார் என்று ஜனாதி பதி கூறினார். அது தமக்கு வைக்கப் பட்ட ஒருபொறிதான் என்பதை அறிந்திருக்கா விட்டாலும் அதில் சிக்கிக்கொள்ள தாம் தயாராய் இருக்க வில்லை என்றார் ராஜபக்ஷ. கொழும் புக்குத் திரும்புவதற்கு ஏற்கனவே விமான ஏற்பாடுகளை அவர் செய்தி ருந்தார். ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் அன்ரூ டி ஹமில்ரனுடன் பகல் போசனத்துக்கு ஹோட்டலில் செய்யப் பட்டிருந்த ஏற்பாட்டையும் அவர் ரத்துச்செய்துவிட்டிருந்தார்.

## அமைச்சரவைக் கூட்டத்தில் அவரே விவரித்த விடயம்

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரையும் சிறிய எதிர்க்கட்சி ஒன்றின் தலைவர் ஒருவரையும் ஜனாதிபதி ராஜபக்ஷ கடுமையாகக் கண்டித்திருந்தார். தமிழ்ப் பெண்பத்திரிகையாளர் ஒருவர் இந்த இரு எதிர்க்கட்சித் தலைவர்களும் விடுதலைப்புலிகள் சார்பான குழுக்களுடன் நெருக்கமாக சேர்ந்து தேசத்துரோக செயல்களில் ஈடுபட்டிருந்தார்கள் என்று இலங்கை தூதரகத்திடம் புகார் வெளியிட்டிருந்தாராம்.

இந்த இருவரது செயற்பாடுகள் தொடர்பாக அரசுக்குச் சார்பான சட்டத் தரணிகள் சிலர் குற்றவியல் புலனாய்வுப் பொலிஸ் பிரிவின் புகார் ஒன்றைப் பதிவுசெய்துள்ளனர். இது குறித்துப் புலனாய்வுப் பொலிஸார் மேற்படி அரசியல்வாதிகளை விசாரணைக்குட்படுத்தவிருக்கிறார்கள் என்று தெரிகின்றது.

அதிவண.கர்தினால் மால்கெம் றஞ்சித்தை கௌரவிப்பதற்காக பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற தேநீர் விருந்தின் போது ஜனாதிபதி குறித்த நாடாளுமன்ற உறுப் பினரைப்பார்த்து கிண்டலாக, நீங்கள் தேசத்துரோகச் செயல் ஒன்றை செய்துள்ளீர்கள், என்று கூறினார். இது அவருக்கருகில் இருந்த எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அதிர்ச்சியளிப்பதாக இருந்திருக்க வேண்டும். அதேசமயம் குறித்த நாடாளுமன்ற உறுப்பினரும் வாயடைத்துப் போனார்.

**அமைச்சர் டக்ளஸ் லண்டன் சென்றிருந்தால்...**

அமைச்சர்கள் கூட்டத்தில் ஜனாதிபதி தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்:

பிரிட்டனிலுள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் இலங்கை அரசுக்கு எதிராக பெருமளவில் பணத்தைச் செலவழிக்கிறார்கள். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு பிரிட்டனுக்குச் செல்வதற்கு வீசா வழங்கப் பட்டிருக்குமானால் அங்குள்ள புலிகள் ஆதரவாளர்களின் பெரும் எதிர்ப்புகளுக்கு உள்ளாகியிருப்பார். புலிகள் ஆதரவாளர் குழுவொன்றுக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றின் மேல்மாடியில் முன்னாள் பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவருக்கு தங்குமிடமளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கீழ் மாடியிலிருந்து செயற்படுகிறார்கள் என்று கூறினார்.

கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் இலங்கையர்களுக்கு எந்த வகையிலும் உதவியாக இல்லை. மாணவர்களுக்கு வீசா வழங்கப்படுவதில்லை. பெற்றோர் தமது பிள்ளைகளிடம் செல்வதற்கும் வீசா வழங்கப்படுவதில்லை என்று முறைப்பாடு செய்கிறார்கள் என்று மேலும் அவர் கூறினார். அவர் மேலும்கூறுகையில்: புலி களுக்கு எதிராக இறுதிப் போரை தாம் ஆரம்பித்தபோது தமக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்தும் தம்மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும் என்பது பற்றியும் உணர்ந்திருந்தார் என்றார்.

"நாம் எந்த குற்றமும் இழைக்க வில்லை. நாம் அச்சமுறவில்லை. அவைகளை எதிர்கொள்ள நான் ஆயத்தமாய் இருக்கிறேன்" என்றார். இறுதிப் போரை மனிதாபிமான நடவடிக்கை என்றே நாம் பெயரிட்டிருந்தோம். ராணுவ நடவடிக்கையின் தன்மையைக் குறிக்கவே இவ்வாறு குறிப்பிட்டிருந்தோம். புலிகளின் பிடியில் சிக்கியிருந்த தமிழர்களை விடுவிப்பதையே இது நோக்கமாகக் கொண்டிருந்தது என்றார்.

**கூட்டத்தில் ஊடுருவி நோட்டமிட்டாராம்**

ஜனாதிபதியின் பரிவாரங்களுடன் லண்டன்சென்றிருந்த உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க அமைச்சர்கள் மத்தியில் பேசுகையில், ஆர்ப்பாட்டக் காரர்கள் மத்தியில் தம்மால் எவரும் காணாதவிதமாக ஊடுருவ முடிந்தது என்றும் சுமார் 450, அல்லது 500 பேரே ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் மத்தியில் பதாகைகள் ஏந்திய சிங்களவர்களும் காணப்பட்டனர். இவர்கள் தற்போது சிறையில் இருக்கும் முன்னாள் ராணுவ தளபதி சரத்பொன்சேகாவை விடுதலை செய்யும்படி கோரி நின்றார்கள். ஆர்ப்பாட்டக் காரர்கள் மத்தியில் தாம் நுழைந்து கலந்து கொண்ட போதிலும் எவரும் தம்மை அடையாளம் கண்டுகொள்ளவில்லையென்று அமைச்சர் கூறினார்.

**வெளியுறவுத்துறையில் பலவீனம்**

ஒக்ஸ்போர்ட் விவகாரம் இப்பொழுது ஒருவரலாற்றுச் சம்பவமாக ஆகிவிட்ட போதிலும் இலங்கையின் வெளிநாட்டு கொள்கை செயற்படுத்தப்படுவதில் பல்வேறு விதமான பலவீனங்கள் வெளிப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி தனது 40 பேர் கொண்ட பரிவாரத்துடன் சென்றமைக்காகப் பல மில்லியன் ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது. ஒக்ஸ்போர்ட் யூனியனில் அவர் சொற்பொழிவாற்றியிருந்தாலும் அங்கு கலந்து கொள்ளவிருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஒக்ஸ்போர்ட் மாணவர்

**தொகுப்பு: கோகுலன்**

கள் அன்று. அங்குள்ள இலங்கை தூதரகத்தினால் ஏற்றி இறக்கப்பட்டவர்கள். குறைந்தது அவர்களில் 40பேர் ஜனாதிபதியுடன் கொழும்பிலிருந்து சென்றவர்கள். இலங்கையின் லண்டனிலுள்ள ராஜதந்திர வட்டாரங்களுடன் பெல் பொட்டிங்கர் என்ற பொது உறவுகள் நிறுவனமும் இதற்கு ஆதரவளித்திருந்தது. இதற்கு வருடம் பல லட்சம் ஸ்டேர்லிங் பவுண் வழங்கப்படுகின்றது. இறைமையுள்ள ஓர் அரசினால் புலிகள் ஆதரவாளர்களான ஒரு சிலரின் கோமாளித்தனத்தை எதிர்த்துச் சமாளிக்க முடியாமல் போய்விட்டது.

## நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை 28 | 14.12.2010 | |
| | செவ்வாய்க்கிழமை | |
| திதி: | : | அட்டமி காலை 08.36 வரை |
| நட்சத்திரம் | : | பூரட்டாதி காலை 07.36 |
| சுபநேரம் | : | 10.51-12.21 வரை |
| ராகுகாலம் | : | 03.21-04.51 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை பரமேஸ்வரி



கைதடி தெற்கு, நூலக வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை பரமேஸ்வரி நேற்று முன்தினம் (11.12.2010) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின்னவன் மற்றும் பொன்னி தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி செல்லி தம்பதியரின் அன்பு மருமகளும் சசிகரன் (லண்டன்), சசிகாந்தன் (இந்தியா), சசிகலா ஆகியோரின் பாசமிகு தாயும் கணேசமூர்த்தி, புனிதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் சிவலிங்கம் (திருகோணமலை), கனகலிங்கம் (சுவிஸ்), தர்மலிங்கம், பசுபதி, மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆருஷாவின் அன்புப் பேர்த்தியு மாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.12.2010) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி, ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

தகவல்:
சி.சின்னத்துரை (கணவர்).

நூலக வீதி,
கைதடி தெற்கு. (சி/573989)

## திருமதி பரமேஸ்வரி அழகரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை- மாத்தளை BMS, யா/வேம்படி மகளிர் கல்லூரி, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை, உரும்பிராய் இந்துக்கல்லூரி, கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி)



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி அழகரத்தினம் நேற்று முன்தினம் (11.12.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் (முகாமையாளர்- காட்டுவைரவர் கோயில்)- செல்லம் தம்பதியரின் அன்புமகளும், உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், அழகரத்தினத்தின் (நில அளவைத் திணைக்கள ஓய்வுபெற்ற களஞ்சியக் காப்பாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, சிவஞானம், மகாலிங்கம் (பாலா) மற்றும் இரத்தினேஸ்வரி, குணேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்ளான சதாசிவம், தம்பிராசா மற்றும் செல்லையா, அன்னம்மா (லண்டன்), புவனேந்திரன், விஜ யசிங்கம் (லண்டன்), ஆகியோரின் அன்பு மைத்துனியும், பத்மசீலன், சத்தியசீலன், ஜெயசீலன், மணிலால்தேவி, சாந்தினி, காலஞ்சென்ற குணசிங்கம் மற்றும் சுகந்தினி, அமுதவல்லி, சுந்தரவல்லி, காலஞ்சென்றவர்களான பரமானந்தவல்லி, சித்தானந்தம், புவனேஸ் வரன் மற்றும் பாஸ்கரன், அருட்செல்வன் ஆகியோரின் சிறிய தாயும் ஜெயச்சந்திரன், சந்திரலதா, ஜெயலதா, ஜசீந்திரா, கீதா, சுசி, உதயகுமாரி, உதயகுமார், தயாளினி, தார்சிகா, விஜிதா, சுதர்சன் ஆகியோரின் பெரியதாயும், சிறீரஞ்சன், சுதர்சன், காயத்ரி, பிரசன்னா, பிரகாசினி, விக்கினேஸ்வரி, தேவகி, வரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12. 2010) திங்கட்கிழமை ந.ப.12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் வடக்கு எருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். 0213737904

தகவல்:
அழகரத்தினம் (கணவர்)

## சின்னத்தம்பி வேலாயுதம்

### (சின்னண்ணர்)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், நல்லூரை வசிப்பிடமாகவும் தற்போது இல.6, கணேசபுரம், கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலாயுதம் (சின்னண்ணர்) அவர்கள் கடந்த (11.12.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- தையல்முத்து தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற குணசேகரம் மற்றும் திருமதி புவனம் துரைராஜா (பிரான்ஸ்), அம்பிகாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கேதீஸ்வரன் (கணேசபுரம், கிளிநொச்சி), சிறிதர்சினி (சுவிஸ்), பாமினி (சுவிஸ்), குமுதினி (சூட்டி-பிரான்ஸ்), கஜன் (பிரான்ஸ்), ரோகினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபாஜினி(சூட்டி- கணேசபுரம், கிளிநொச்சி), றஜிந்தன் (சுவிஸ்), சுவேந்திரா (கனடா) ஆகியோரின் அன்புச் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை இல.6, கணேசபுரம், கிளிநொச்சியில் நடைபெற்று பூதவுடல் கிளிநொச்சி இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவிர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
சுபாஜினி (சூட்டி)- இலங்கை 0094770879961,
தம்பிஜயா -இலங்கை 0094776166080, புவனம் (பிரான்ஸ்) 0033148411980,
வேந்தன் (பிரித்தானியா) 00447808717505, சிறிதர்சினி (சுவிஸ்) 0041443214946, பாமினி (சுவிஸ்) 0041447601517,
கஜன் (பிரான்ஸ்) 0033613160675.

இல.6, கணேசபுரம்,
கிளிநொச்சி. (சி-573993)

தகவல்:
குடும்பத்தினர்

## விகாரமாதேவி பூங்கா போன்று சுப்பிரமணியம் பூங்கா புனரமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்.மாநகர சபையின் சுப்பிரமணியம் பூங்கா சிறுவர்களுக்கு மிகுந்த கவர்ச்சியை ஏற்படுத்தக் கூடியதாகவும் எல்லோருமே மிகவும் மகிழ்ச்சியாக தமது நேரத்தைச் செலவிடக் கூடியதாக கொழும்பு விகாரமாதேவி பூங்காபோன்று மிகவும் அழகானதாகப் புனரமைக்கப்படுகிறது.

விரைவில் இந்தப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுத் திறந்து வைக்கப்படவுள்ளது.

பூங்காவுக்கான கட்டணமும் ஒரு ரூபாவால் அதிகரிக்கப்படும் எனவும் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்துள்ளார். (ம-7)

## வீதிகளில் பெரிய குழிகள்; விபத்துக்கள் அதிகரிக்கும் நிலை

ஏ-9 வீதியில், தென்மராட்சிப் பகுதியில், அண்மையில் பெய்த மழையால் ஏற்பட்ட குழிகளுக்குள் மோட்டார் சைக்கிள் சில்லு வீழ்வதால் தூக்கி வீசப்பட்டு காயமடைவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

கடந்த இரு தினங்களில் ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் சில்லு வீதிக் குழிக்குள் இறங்கியதால் தடம்புரண்டும், தூக்கி வீசப்பட்டும் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

ஓட்டோ தடம்புரண்டதில் சாவகச்சேரியைச் சேர்ந்த பீ.நிர்மலராஜ் (வயது 25) என்பவரும், மோட்டார் சைக்கிள்களிலிருந்து விழுந்து நுணாவிலைச் சேர்ந்த குமார் (வயது 23), கொடிகாமத்தைச் சேர்ந்த கே.சிவகுமார் (வயது 28) ஆகியோரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மோட்டார் சைக்கிள் சில்லு வீதியிலுள்ள குழிக்குள் வீழ்ந்த சம்பவம் நேற்றும் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் நுணாவிலைச் சேர்ந்த என்.செல்வம் (வயது 57), நாவற்குழியைச் சேர்ந்த வி.ஜனத் (வயது 21) ஆகியோரும் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை - மோட்டார் சைக்கிள் தடம்புரண்டு லான்ட் மாஸ்டருடன் மோதிய விபத்துச் சம்பவம் ஊரெழுவில் இடம்பெற்றது. இதில் சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த வி.தவமணி (வயது46) என்பவரும், கொடிகாமத்தில் இடம்பெற்ற மோட் டார் சைக்கிள் சில்லு குழிக்குள் வீழ்ந்து தூக்கி வீசப்பட்டதில் வரணி இயற்றாலையைச் சேர்ந்த என்.கந்தசாமி (வயது-56) என்பவரும் காயமடைந்துள்ளனர். (201-207)

## மிளகாய் கன்றுக்கு மருந்து விசிறியவர் மயக்கம்

தோட்டத்தில் மிளகாய் கன்றுகளுக்கு மருந்து விசிறியவர் மயக்கமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மிருசுவில், கெற்பேலி மத்தியில் இடம்பெற்றது. சந்திரசேகரன் சாந்தகுமார் (வயது -20) என்பவரே மயக்கமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (201-207)


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

3மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில By ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை. தொ.பே:- 0776751649

**அறைகள் வாடகைக்கு உண்டு**

வேலை செய்கின்ற அலுவலர்களுக்குத் தங்கும் அறைகள் Brown Road. 1st Lane யாழ்ப்பாணத்தில் உண்டு. 3பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கும் Annex உண்டு.
தொடர்பு:- 0779578244, 0213734306

**கட்டடம் வாடகைக்கு**

3,400 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டடம் றோட்டுக்கரையில் யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வாடகைக்கு உண்டு. NGO வங்கி, நிதிக் கம்பனிகள், ஏஜென்சீஸ், கம்பியூட்டர்/எலெக்ரோனிக் பொருள்கள்/ரெக்ஸ் ரைல்ஸ் இறக்குமதியாளர்/வியாபாரிகள் போன்றவற்றிற்கு உகந்தது. கட்டடத்தின் முன்பகுதியிலும் பின் பகுதியிலும் வாகனத் தரிப்பிட வசதியுண்டு.
தொடர்பு: 0772484761


## 14ஆம் ஆண்டு நினைவுத்துளி



அமரர்
**வி.எஸ்.குணசிங்கம்**

தோற்றம்:
1931.02.05

மறைவு:
1996.12.16


திதி: 13.12.2010

ஆழப் புதைந்துள்ள உங்கள் நினைவுகளால்
சூழத் தனியுலகம் விழுதுகள் நாம்
படைக்கின்றோம்- உங்கள்
வேதவாக்குகளின் நாதஒலி உயிர்ப்பூட்ட
பாதச்சுவடுகளில் தடம்பார்த்து நடக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

669, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
29.02.1980

ஆண்டவன் அடியில்
25.11.2009

**அமரர் முருகேசு கோவலன் (கோபி)**
(பொறிவலர், சிவசக்தி கராஜ், ஆவரங்கால்)


திதி: பூர்வபட்ஷ அட்டமி (15.12.2010)

அன்பாலே எமை வென்று
ஆசையாய் பேசிடும் எம் அன்புச் செல்வமே!
துன்பம் ஏதும் வந்தபோதும்
துணையாய் நின்று தோள் கொடுப்பாய்
உன் கல்யாண நாளுக்காய் காத்திருந்த எமக்கு
கண்ணீர்தான் மிச்சமடா
எமக்கு ஒரு செல்வமாய் என்றுமே எம் துணையாய்
ஏழேழு ஜென்மத்திலும் நீ எமக்கு வேணுமடா!

நவோதயா வீதி,
ஆவரங்கால், புத்தூர்.

சின்னத்தான் குடும்பம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
29.02.1980

இறப்பு
25.11.2009

**அமரர் முருகேசு கோவலன் (கோபி)**
(பொறிவலர், சிவசக்தி கராஜ், ஆவரங்கால்)

திதி: பூர்வபட்ஷ அட்டமி (15.12.2010)

எமக்கென்ற ஒரே செல்வமே!
உனை எண்ணி ஆயிரம் ஆசைகளை
சுமந்து வாழ்ந்தோமைய்யா- இன்று
கதிகலங்கி நின்று கதறுகிறோம் நாம்
குறையேதுமின்றி எம் குடும்பத்தைச் சுமந்த
எம் குலவிளக்கே!
ஆண்டு ஒன்று அல்ல ஆயிரமானாலும்
ஆறாத துன்பத்தில் ஆழ்ந்துவிட்டோம்
நித்தம் கனவில் கூட உனைப் பார்க்க எண்ணி
ஏங்குகிறோம் நாம்
மறுபிறப்பில் வந்து மறுபடியும்
எம்முடன் பிறந்துவிடு எம் செல்வமே!

நவோதயா வீதி,
ஆவரங்கால், புத்தூர். (107263)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியாகவும் சட்டத்துக்கு அமைவாகவும் ஆளுங்கட்சியின் செயற்பாடுகள் உள்ளன

## யாழ்.மாநகரசபை முதல்வர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்.மாநகரசபையில் எமது செயற்பாடுகள் நீதியாகவும் சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்ட வகையிலுமே நடைபெறுகின்றது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறுவது போன்று சட்ட திட்டங்களுக்குப் புறம்பாக எவ்வித செயற்பாடுகளும் இடம்பெறவில்லை.

எதிர்க்கட்சியினருடன் கலந்தாலோசித்துத்தான் நாம் எமது வேலைத்திட்டங்களை முன்னெடுக்கிறோம். யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா இவ்வாறு கூறினார்.

மாநகர சபையின் வருமான அதிகரிப்புக்காக மேற்கொள்ளும் நடவடிக்கை குறித்து நேற்று ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களுடனான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இச்சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்:-

மாநகரசபையின் வருமானத்தை அதிகரிப் பதற்காக வரி அறவீடுகளில் மாற்றம் கொண்டு வரவேண்டியுள்ளது.

ஒரு நகைக் கடைக்கு மாதம் ஒன்றுக்கு 12 ரூபா 50 சதம் அறவிடப்படுகிறது. இது உண்மையில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. நூலக மண்டபம், நாவலர் மண்டபம் போன்றவற்றுக்காக நாளொன்றுக்கு மிகவும் குறைந்த கட்டணமே அறவிடப்படுகின்றது.

தனியார் மண்டபங்களுக்கு ஒரு மணித்தியாலத்துக்கு 20 ஆயிரம் 30 ஆயிரம் ரூபா என அறவிடும் போது நாங்கள் எமது மண்டபங்களுக்கு சொற்ப தொகையை வாங்குகிறோம்.

இதேபோன்று எமது வரிகள் அனைத்தும் மிகவும் குறைந்தேயுள்ளன. அவற்றில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியம்.

நகரின் அபிவிருத்தியுடன் மட்டும் நாம் நின்றுவிடவில்லை. சுற்றாடல் பகுதிகளையும் கவனிக்க வேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் ஆணையாளர்கள் வருமானத்தை அதிகரிக்கக் கூடியதாக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை. கட்டட விண்ணப்பப் படிவங்கள் இன்று வரை 10 ரூபாவுக்கே வழங்கப்படுகிறது.

மாநகர சபை பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

அரசு தொடர்ந்தும் எமக்கான நிதியுதவிகளை வழங்கும் என்று எதிர்பார்க்க முடியாது. நாங்கள் எமது வருமானத்தை அதிகரிக்க வேண்டும்.

பொதுமக்கள் உண்மை நிலைமைகளைத் தெரிந்துகொண்டு மாநகரசபைக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்க முன்வரவேண்டும். வேலைவாய்ப்புக்களில் நாங்கள் எங்களது இஷ்டத்துக்கு நடந்து கொண்டதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்துகிறார்கள்.

அமெரிக்காவில் கூட இன்று வேலைவாய்ப்புக்கள் பிரச்சினையாக உள்ளன.

தேர்தல் காலத்தில் வேலை வசதிகளைப் பெற்றுக் கொடுப்போம் என நாங்கள் கூறியிருந்தோம். கோவைகள் சரியான முறையில் தயாரிக்கப்பட்டு தகுதி, திறமை அடிப்படையில் அது வழங்கப்பட்டுள்ளது.

எதிர்க் கட்சியினர் வேலை வாய்ப்புத் தேவையில்லை என்று பிரசாரம் செய்கிறார்கள்.

பத்திரிகையாளர்கள் எமது மாநகர சபையின் கீழ் உள்ள வேலைப் பகுதிகளை நேரடியாகச் சென்று விவரங்களைத் தெரிந்துகொண்டு அதன் செயற்பாடுகளை மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும் - என்றார். (ம-7)

## வேலையற்ற உடற்கல்வி டிப்ளோமா பட்ட தாரிகளுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.13

வேலையற்ற உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வேலையற்ற உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர்கலைக் கல்லூரியில் நடைபெறும் என சங்கத் தலைவர் எஸ்.சதீஸ் கண்ணா தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்பு தொடர்பாக முக்கியமாகக் கலந்துரையாடப்படவுள்ளதுடன் வேலையற்ற உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகளின் பெயர்ப்பட்டியல்கள் தயாரிக்கப்படவுள்ளதால் அனைத்து வேலையற்ற உடற்கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு 0772399978, 0777243739, 0776577390 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# சிங்கை நகர் பிரதான வீதி பாதிப்பு; மக்கள் பயணிப்பதில் அசௌகரியம்

தென்மராட்சி,டிசெ.13

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சிங்கை நகர் பிரதான வீதியும் அவ் வீதியில் உள்ள மதகும் நீண்ட காலமாக திருத்தப்படாமல் உள்ளதால் அப் பகுதியில் உள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

இந்த வீதி, அனைத்துப் பிரதேச மக்களும் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு செல்லும் பிரதான வீதியாக திகழ்கிறது. இது தற்போது மணல் வீதியாகி பல இடங்களில் குண்டும் குழியும் ஏற்பட்டுள்ளது. வீதியில் உள்ள மதகு உடைந்து நீண்ட நாள்களாகியும் அது திருத்தப்படாததால் வாகனங்கள் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த வீதியைப் புனரமைக்குமாறு அப்பகுதி மக்கள் பிரதேச சபைக்கு பல தடவைகள் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லை யெனவும் அவ்வீதியைப் புனரமைக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு செய்த போதிலும் அந்த நிதியால் வேறு வீதிகளே புனரமைக்கப்பட்டதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

வீதியைப் புனரமைக்க கடந்த ஐந்து வருடங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் மூன்று தடவைகள் நிதி ஒதுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் பெய்த பெருமழையினால் வீதியின் பல இடங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் மக்கள் வீதியைப் பயன்படுத்த முடியவில்லை.

இதனால் மாணவர்கள், அரச ஊழியர்கள், விவசாயிகள், ஆலயத்துக்கு செல்வோர் உட்பட அனைவரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே வீதியைப் புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (204-207)




# ஜனாதிபதிக்கு பிறந்த தின வாழ்த்துக்கூற முன்னுரிமை அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது

## யாழ்.தொழில் நுட்பக் கல்லூரிப் பணிப்பாளர் பெருமிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தன்று அவரது வீட்டில் பல சிரேஷ்ட அமைச்சர்கள் வாழ்த்துத் தெரிவிக்க காத்திருந்தபோதும் எனக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு வாழ்த்துத் தெரிவிக்க அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வாறு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளரும், நீலப் படையணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான கலாநிதி என்.யோகராஜன் பெருமிதத்துடன் தெரிவித்தார்.



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்ததினமான கடந்த மாதம் 18 ஆம் திகதி அவரது நல்வாழ்வுக்காக எமது யாழ்.மாவட்ட நீலப் படையணியின் சார்பில் எனது தலைமையிலான குழுவினர் நயினாதீவு நாகபூஷணியம்மன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர், அங்கு தரப்பட்ட பிரசாதங்களையும், அர்ச்சனைப் பொருள்களையும் கொண்டு நான்கு வாகனங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டோம்.

களனியில் உள்ள விஷ்ணு கோயிலிலும் விசேட பூசை வழிபாடுகளை மேற் கொண்டோம். இதில் பொது மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வாவும் கலந்து கொண்டார்.

அதன் பின்னர் ஜனாதிபதியின் பிறந்த தினத்தன்று காலையில் தங்காலையில் உள்ள அவரது வீட்டில் வைத்து பூசை வழிபா ப் பொருள்களைக் கையளித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தோம்.

இந்தப் பூசை வழிபாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவும் கலந்து கொண்டார்.

என்னுடன் சேர்ந்து யாழ்.மாவட்டத்தில் இருந்து நீலப் படையணியைச் சேர்ந்த 200 இளைஞர்கள் கலந்து கொண்டனர்- என்றார். (ம-9-15)

# சாதனைகள் படைத்த சண்டிலிப்பாய் இந்து மேலும் வரலாற்று முத்திரைகளைப் பதிக்க வேண்டும்

## வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம்,டிசெ.13

சாதனைகள் படைத்து அகவை எண்பதைத் தாண்டியுள்ள சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மென்மேலும் வரலாற்று முத்திரைகளைப் பதிக்க வேண்டும். இவ்வாறு வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராசேந்திரம் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற வருடாந்தப் பரிசளிப்பு விழா, அமுதவிழா மலர் வெளியீட்டு நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு காலத்தில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எங்கு இருக்கிறதென்று தெரியாமல் பலர் தேடிய வரலாறு இருக்கிறது. ஆனால் இன்று சண்டிலிப்பாய் எனும் கிராமத்திற்கு அடையாளமாக விளங்குவது இந்தக் கல்லூரியாகும். அந்தளவுக்கு சாதனைகளைப் படைத்து நிமிர்ந்து நிற்கிறது.

மாணவர்களது கல்விப் பாதையை ஊக்கப்படுத்தும் நோக்கில் பாடசாலைகளில் பல்வேறு தேர்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்தத்தேர்ச்சியின் மூலம் உயர்வான புள்ளிகளைப் பெறுகின்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றன.

இதில் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் இனிவரும் காலங்களில் அதனைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்- என்றார் அவர்.

இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கந்தசாமி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் ஆகியோரும் சிறப்புரையாற்றினர்.

நிறுவுநர் நினைவுரையை யாழ். பல்கலைக்கழக விவசாய உயிரியல்துறைத் தலைவர் கலாநிதி மிகுந்தன் நிகழ்த்தினார்.

அமுதமலர் நூலினை வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராசேந்திரம் வெளியிட்டு வைக்க முதல் பிரதியை மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் பெற்றுக் கொண்டார். (201-9)

# சிறார்களுக்கு அடுத்த ஆண்டு முதல் பசுப்பால் வழங்க நடவடிக்கை

## சிறுவர் அபிவிருத்தி அமைச்சு ஏற்பாடு

காரைநகர்,டிசெ.13

ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் பாலர் பாடசாலைகள் ஆகியவற்றில் உள்ள சிறுவர்களுக்கான பசுப்பால் விநியோகிக்கும் திட்டத்தை அடுத்த ஆண்டு ஜனவரி முதல் செயற்படுத்த சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அடுத்த வருடத்தில் ஏப்ரல், ஓகஸ்ட், டிசெம்பர் ஆகிய மாதங்கள் தவிர்ந்த ஏனைய ஒன்பது மாதங்களுக்கு பால் விநியோகம் மேற்கொள்ளப்பட உள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் ஒரு பிள்ளைக்கு மாதாந்தம் 150 ரூபா பெறுமதியான முத்திரை வழங்கப்பட்டு மாதத்தில் இருபது நாள்களுக்கு 150 மில்லி லீற்றர் பால் வீதம் வழங்கப்பட உள்ளது.

இதேவேளை கடந்த இரு ஆண்டுகளாக மேற்படி அமைச்சால் 2-5 வயது வரையான வறுமைக் கோட்டுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு மாதாந்தம் 200 ரூபா பெறுமதியான முத்திரை விநியோகித்து நாள் ஒன்றிற்கு 200 மில்லி லீற்றர் பால் வீதம் வருடம் முழுவதும் வழங்கப்பட்டு வந்தது.

அடுத்த ஆண்டு முதல் பாலின் அளவும் மாதமும் குறைக்கப்பட்டு ஆரம்ப சிறுபராய அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் பாலர் பாடசாலைகள் ஆகியவற்றில் உள்ள பிள்ளைகளுக்கு மாத்திரமே பசுப்பால் வழங்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (201-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்காலத்தை ஒளிமயமாக்க இளைய தலைமுறையை வழிப்படுத்தல் அவசியம்

யாழ். குடாநாட்டில் தற்போது இளைய தலைமுறையினரிடையே காணப்படும் பழக்க வழக்கங்கள் தொடர்பில் ஆசிரியர்களும், பெற்றோர்களும் கூடிய கவனமும் அக்கறையும் காட்ட வேண்டிய தேவையும் அவசியமும் எழுந்துள்ளன. இன்றைய இளைய தலைமுறை கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று செல்லும் ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை இதற்குத் தூபம் போடுபவர்களாகப் பெற்றோர்களும் மறுபுறத்தே வெளிநாடுகளில் வாழும் சகோதரர்களும் உறவினர்களும் காணப்படுகின்றனர்.

மறுபுறத்தே பாடசாலை ஆசிரியர்களும் ஏனோ தானோ என்ற மனப்பான்

**செய்திக் கட்டுரை**

மையுடன் நடந்துகொள்வதாகத் தெரிகிறது. பிள்ளைகள் தொடர்பில் தமக்கும் பொறுப்புக்கள் உண்டு என்பதையும் பிள்ளையின் எதிரகாலம் நல்லதாக அமைய வேண்டும் என்ற நல்ல நோக்கம் ஆசிரியர்களிடையே தேவை. ஆனால் இவை அற்ற நிலையே தற்போது காணப்படுகின்றது.

இளைய தலைமுறையை நாசம் செய்வதில் கையடக்கத் தொலைபேசி யும் பாரிய பங்கு வகிக்கின்றது என்றால் அது மறுக்க முடியாத ஒன்று. இன்னும் ஒரு புறத்தே இன்ரநெற் நிலையங்கள் சந்திக்குச் சந்தி காணப்படுகின்றன. இங்கு குவியும் இளஞ் சமூகத்தின் நிலை கேள்விக் குறியானதே. அறிவுத் தேடலுக்காக இன்ரநெற்களைப் பயன்படுத்துகிறார்கள் என்றால் அது வரவேற்கத் தக்க விடயமே.

யாழ் குடாநாடு பாரிய இறுக்கத்தில் கடந்த காலத்தில் காணப்பட்டது. இதனால் பிள்ளைகள் குறிப்பாக இளைய தலைமுறை கட்டுக்கடங்காமல் தற்போது செயற்பட்டு வருகின்றது. பிழை எது சரி எதுவென்று தெரியாத பருவத்தில் உள்ள இவர்கள் பிழையை சரி என நியாயப்படுத்தும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த வகையில் மாணவர்களின் கையடக்கத் தொலைபேசி விவகாரம் இன்று யாழ். குடாநாட்டில் முன்னணி வகிக்கும் பாடசாலைகள் இரண்டைத் தலை குனிய வைத்துள்ளது.

மறுபுறத்தே பெற்றோர்களைச் சமூகம் விசித்திரமான கண்கொண்டு பார்க்கும் துர்ப்பாக்கிய நிலைமைக்கும் கொண்டு சென்றுள்ளது.

இந்த விடயம் குறித்துச் சிந்திக்க வேண்டியதும் தலைகுனிய வேண்டியதுமான பொறுப்பு இளைய தலைமுறையினருக்கே உரியன.

## வில்லவன்

யாழ். மாவட்டத்தில் முன்னணிப் பாடசாலைகள் இரண்டின் மாணவர்களது வீடியோ இணைப்புக்கள் 'பேஸ்புக்' ஊடாக இணையத் தளங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. இதற்கு துணையாக கையடக்கத் தொலைபேசி இருந்துள்ளது. இதற்கெல்லாம் பெற்றோரும் வெளிநாட்டுப் பணமுமே காரணம்.

இந்தச் செயற்பாடு பூதாகரமான ஒரு விடயமாக யாழ்ப்பாணத்தில் எழுந்துள்ளது. இத்தகைய நிலைமைகள் பெற்றோர்களுக்கும் பாடசாலைகளுக்கும் ஏற்பட வேண்டுமா? தொடர வேண்டுமா? என்பதையிட்டு சிந்திக்க வேண்டிய நிலைமையும் கடப்பாடும் ஒவ்வொரு பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உண்டு.

பெற்றோர்கள் நன்கு சிந்திக்க வேண்டும். பாடசாலை செல்லும் பிள்ளைக்குக் கையடக்கத் தொலைபேசி தேவை தானா? பணம் உண்டு வசதி உண்டென நினைத்துப் பகட்டு வாழ்க்கைக்கு ஆளாகி எதிர்கால சமூகத்தைச் சீரழிப்பதற்கு பெற்றோர்களாகிய நாம் துணைபோகக் கூடாது.

பிள்ளைகளுக்கு அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதற்காக எம்மிடம் வசதி உண்டு பிள்ளைகளுக்கு எதனையும் வாங்கிக் கொடுப்போம் என்று கூறி எமது எதிர்காலச் சொத்துக்களை நடுறோட்டில் விட்டுவிடலாமா?

இதேபோன்று மாணவர்கள் கிரமமாகப் பாடசாலைக்கு வருகிறார்களா? வகுப்புக்களில் இருக்கிறார்களா? என்பதையிட்டு ஆசிரியர்களும் கண்காணிக்க வேண்டும். இதுகூடச் சமூகத்தின் தேவையும் அவசியமும் ஆகும்.

ஒழுங்காகப் பாடசாலைக்கு வராத மாணவர் குறித்து உரிய பெற்றோருடன் தொடர்புகொண்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது காலத்தின் தேவை.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் பெற்றோர்கள் ஆசிரியர்கள் இடையே ஒரு நல்லுறவு ஏற்படும். எதிர்காலச் சமூகம் கெட்டுக் குட்டிச்சுவராவதை இதன் மூலம் தடுத்து நிறுத்த முடியும்.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று தீய வழிகளில் செல்லும் சந்தர்ப்பங்கள் வாய்ப்புக்களையும் கூட இல்லாமல் செய்யமுடியும்.

எதிர்காலச் சமூகம் திடகாத்திரம் மிக்க சீரிய விழுமியங்களுக்கு உட்பட்ட கட்டமைப்புடன் கூடிய ஒரு சமூகமாக உருவாகும். மிளிரும். இதற்கு உரியவர்களின் கடமை முக்கிய பங்கு வகிக்கிறது.

---

# அமெரிக்கன் சிலோன் மிஷன்திருச்சபை நடத்திய போட்டி முடிவுகள் வெளியாகின

அமெரிக்கன் சிலோன் மிஷனுடைய தாய்ச் சங்கத்தின் 200 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரை, சித்திரப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

**கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம்- விமலாம்பிகைபாகன் திவாகரன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), 2ஆம் இடம்- கிறிஸ்ரலின் நிஷானி ஜெயராசிங்கம் (சி.ஏ.சி.எம். தேவாலயம், நவாலி), மூன்றாம் இடம்-விக்னேஸ்வரமூர்த்தி டொறின் சுரேந்தினி (காளம்பைக் குளம், வவுனியா).

**சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம்-மாணிக்கசிங்கம் செல்வநேசன் சுதர்சன் (சி.ஏ.சி.எம். தேவாலயம், நவாலி), 2ஆம் இடம்-சுதர்மினா செல்லன் (3ஆவது மைல்கல், திருகோணமலை), 3ஆம் இடம்-செல்வரட்ணம் ஜெயந்தி (யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை).

**கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம்-முரளிதரன் ஜனனி (பிறவுண் றோட், கொக்குவில் கிழக்கு), 2ஆம் இடம்- சுந்தரலிங்கம் உஷாந்தினி (3ஆவது மைல்கல், திருகோணமலை), 3ஆம் இடம்- செந்தூர்க்குமரன் (கிறிஸ்தவ இறையியற் கல்லூரி, சுன்னாகம்).

**சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம்- செம்பலிங்கம் ஜெகன் (கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு), 2ஆம்இடம்- செல்லன் சுதர்மினா (3ஆவது மைல்கல், திருகோணமலை), 3ஆம் இடம்- சர்மிலா சந்திரதாசன் (வடலியடைப்பு, பண்டத்தரிப்பு).

இவர்களுக்கான பரிசில்கள் மருதனார் மடத்திலுள்ள கிறிஸ்தவ இறையியற் கல்லூரியில் எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறும் பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும் (201-55)

## ஒளி விழா

யாழ்ப்பாணம்,டிசெ.13

பருத்தித்துறை வை.எம்.சி.ஏ. ஒளி விழா நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தலைவர் அருட்பணி எஸ்.டபிள்யூ. தேவகுமாரன் தலைமையில் கட்டைவேலி மெதடிஸ்த ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கட்டைவேலி மெதடிஸ்த ஆலய முகாமையாளர் வணபிதா எஸ். அருள்நாதன் கலந்துகொள்வார். இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (204-23)

## கலந்துரையாடல்

வலி.கிழக்கு பொற்கலந்தம்பை கிராமத்தில் உள்ள பொற்கலந்தம்பை ஞானவைரவர் ஆலயத் திருத்த வேலைகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. எனவே, இக் கலந்துரையாடலுக்கு ஆலயத்துடன் தொடர்புடையவர்களையும், கிராம மக்களையும் சமுகம் தருமாறு ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ற-55)

## கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்-கிளிநொச்சி அங்கத்தவர்களுக்கான அறிவித்தல்

எமது சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேருவோர் ஒரு பங்குப் பணத்தின்பெறுமதி ரூபா 100.00 இனைச் செலுத்தியிருத்தல் வேண்டும். செலுத்திய திகதியிலிருந்து ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்திருப்பின் கிளைப் பொதுச்சபை வாக்காளராகக் கணிப்பிட முடியும். குறைந்த பங்கொன்றின் பெறுமதி ரூபா 100.00 செலுத்தியவர்களை மையமாகக் கொண்டே எதிர்காலத்தில் கிளைகளின்பொதுச் சபைப் பேராளர்களின் தொகையைக் கிளைகள் ரீதியாக நிர்ணயம் செய்ய முடியம். எனவே ஏற்கனவே பங்குப்பணம் ரூபா 100.00 இற்குக் குறைவாகச் செலுத்தியிருக்கும் அங்கத்தவர்கள் சங்கத்தின் கிளைகளிலோ அல்லது சங்கத் தலைமை அலு வலகத்திலோ தொடர்புகொண்டு அங்கத்துவப் பங்குப் பணத்திற்குரிய மீதிப்பணத்தினை 31.12.2010ஆம் திகதிக்குமுன் செலுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ச.மோகனராஜன்,
தலைவர்,
கரைச்சி தெற்கு,
ப.நோ.கூ.சங்கம்

செ.ம.ஜெயரத்தினம்,
செயலாளர்,
கரைச்சி தெற்கு,
ப.நோ.கூ.சங்கம்

(107221)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
சாந்தினி ஆனந்தராசா
இளவாலை மெய்கண்டான் ம.வி
(B.A.பட்டதாரி ஆசிரியர்)

தோற்றம்
20.01.1964

மறைவு
13.12.2003

உம் புன்னகை கண்ணில் அம்மா
உம் வார்த்தைகள் ஓயவில்லை
மீண்டும் உயிர்பெற்று வரமாட்டாயா?
எங்கள் முகம் காண்பதற்கு.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மயிலங்கூடல்
இளவாலை.

குடும்பத்தினர்.

(சி/573984)

## மேல் நீதிமன்றம் யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றவளாகத்திலுள்ள சிற்றுண்டிச் சாலையை நடத்துவதற்குக் கேள்விப் பத்திரங்கள் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன. எனவே குறிப்பிட்ட சிற்றுண்டிச்சாலையை ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்குப் பெற்று நடத்த விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தில் தம்மால் வழங்கக்கூடிய ஆகக்கூடிய வாடகையைக் குறிப்பிட்டு 22.12.2010ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலிலோ, அல்லது நேரடியாகவோ *மேல் நீதிமன்ற ஆணையாளர், மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''யாழ்.நீதிமன்ற வளாகச் சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான கேள்விப் பத்திரம்'' எனத் தவறாது குறிப்பிடுதல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்கள் தேவைப்படின் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளருடன்அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

க.பரமராஜா
தவிசாளர்,
மேல் நீதிமன்றக்கேள்விச் சபை,
மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

(சி/573924)

## உத்தியோக பூர்வ முடிவுகள்

சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 579
திகதி 2010/12/11

சுப்பர் இலக்கம்: 23
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 03 04 44 53

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 34,377,310.40 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 12 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 321 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 611 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 15,217 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏதேனும் 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 40.00 விகிதம் | 8,815 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 220,214 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 35,066 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 9,832,900.00
சுப்பர் பரிசு சொருசு ஜிப் வைப்புடன் மீதி தொகை பணமாக

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 34,807,480.00

தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாச வங்கியில் பணவைப்புச் செய்தவர்கள் மீளப் பெறமுடியாது அலைவதாகத் தகவல்

கிளிநொச்சி,டிசெ.13

கிளிநொச்சி மாவட்ட சிக்கனக் கடனுதவிச் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வங்கியில் பணத்தினை வைப்புச் செய்த பொது மக்கள் அப்பணத்தினை முழுமையாக மீளப் பெற முடியாமல் பெரும் சிரமப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இறுதி யுத்தத்திற்கு முன் வன்னிப் பகுதியில் இயங்கிய வங்கிகளில் வைப்புச் செய்த பணம், அடகு வைத்த நகைகள் அனைத்தும் மீள வழங்கப்பட்டுள்ள நிலையில் இச் சமாச வங்கியில் வைப்புச் செய்த பணத்தினை மீளப் பெறச் செல்லும் பொது மக்கள் ஏமாற்றத்துடனேயே திரும்பி வருகின்றனர்.

தற்போது இச் சமாசத்திற்கு தற்காலிக சபையே உள்ளது. வருமதியாளர்களிடம் இருந்து பணம் கிடைக்கும் பட்சத்திலேயே வைப்பாளர்களது பணம் மீளளிக்கப்படும் என பொறுப்பற்ற விதத்தில் வைப்புச் செய்தவர்களுக்குப் பதிலளிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வங்கியில் வைப்புச் செய்யப்படும் பணமானது மக்கள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு அதற்கான வட்டி பெறப்பட்டே மக்களுக்கான வட்டி வழங்கப்படுவது வழக்கமாகும். இந்நிலையில் அந்த வைப்புப் பணத்தை மீளப் பெற்று பொதுமக்களது பணத்தினை மீள வழங்க முடியும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இடப் பெயர்விற்கு முன்னர் இச்சமாசமானது காகிதாதி, வாணிபம், அச்சகம், சோலார் விற்பனை ஆகிய தொழில்களை நடத்தி வந்தது. எனினும் தற்போது அவை மீள ஆரம்பிக்கப்படவில்லை. இச்சமாச வங்கியினூடாக கடன் வழங்கப்பட்டதாலும், தவணைக் கட்டண அடிப்படையில் சோலர் வழங்கப்பட்டதாலும் அனேகமான பொதுமக்கள் கணக்குகளை ஆரம்பித்தனர்.

இடம் பெயர்ந்து பல சொல்லொனாத்துன்பங்களை அனுபவித்து மீள்குடியேறிய இம்மக்களின் வைப்புப் பணத்தினை விரைவாக வழங்க சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோருகின்றனர். மீள்குடியேற்றம் இடம்பெற்று ஓராண்டு கடந்த நிலையிலும் இவ்வாறு இழுத்தடிப்புச் செய்யப்படுவது குறித்து அவர்கள் கவலையடைவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-405)

# ஆசிரியர் விடுதி அமைக்கப்படாததால் மாணவர்களின் கல்வியில் பாதிப்பு

கிளிநொச்சி,டிசெ.13

பூநகரி செல்லியாத்தீவு அ.த.க.பாடசாலையில் ஆசிரியர் விடுதி இன்மையால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பூநகரி கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ளது செல்லியாத்தீவு அ.த.க பாடசாலை. இந்தப் பாடசாலையில் ஆசிரியர்கள் தங்கி நிற்பதற்கான விடுதிகள் அமைக்கப்படாததால் மாணவர்களின் கல்வியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தப் பாடசாலைக்கு வெளி மாவட்டங்களிலிருந்து வரும் ஆசிரியர்கள் காலை 10 மணிக்கே வந்து சேருகின்றனர். அதே வேளை மதியம் 1.30 மணியளவில் இவர்கள் திரும்பிச்சென்றுவிடுகின்றனர். இவர்களுக்கான பேருந்தைப் பிடிப்பதற்காகவே இவ்வாறு திரும்பிச் செல்கின்றனர். இந்த நிலை கடந்த ஒரு வருட காலமாகத் தொடர்கின்றது.

இதனால் இந்தப் பாடசாலையின் மாணவர்கள் தமது முழுமையான கல்வியைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர். இதனால் பரீட்சைகளில் இவர்களால் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதில் சிரமங்கள் தோன்றியுள்ளன.

எனவே இந்தப் பாடசாலையில் ஆசிரியர் விடுதி ஒன்றை அமைத்தால் ஆசிரியர்கள் தங்கி நின்று தமது கற்பித்தல் நடவடிக்கையை முழுமையாக ஆற்ற முடியும். இதனால் மாணவர்களின் கல்வி நிலையிலும் முன்னேற்றம் ஏற்படுமெனப் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.(க-406)




# பூநகரி 66 ஆவது படைப்பிரிவினரால் நாளைய தினம் மாபெரும் இசை நிகழ்வு

பூநகரி,டிசெ.13

பூநகரி 66 ஆவது படைப் பிரிவினரால் மாபெரும் இசை நிகழ்வு ஒன்று நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இசை நிகழ்வு நாளை 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 7.30 மணிக்கு பூநகரி வாடியடிச் சந்தியில் 66 ஆவது படைப் பிரிவினரால் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட அரங்கத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கலந்து கொள்ளும் அனைத்து மக்களுக்குமான போக்குவரத்து வசதிகள் இலவசமாக ஒழுங்கமைக்கப்பட்டு வழங்கப்படுமெனத் தெரிவித்துள்ள 66 ஆவது படைப்பிரிவினர் அனைவரையும் இந்த இசை நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளனர். (க)

## பிரார்த்தனை பலிக்குமா....?



நெஞ்சுருக கண்ணீர் மல்கி: அனைத்துலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் காணாமல்போனவர்களின் குடும்ப உறவினர்களின் ஏற்பாட்டில் சர்வமதப் பிரார்த்தனை இடம்பெறுகின்றது.

# கிளிநொச்சியில் 149 ஆசிரியர்களுக்கு டிசெ.15 முதல் உள்ளக இடமாற்றம்

கிளிநொச்சி,டிசெ.13

கிளிநொச்சி கல்வி வலய பாடசாலைகளில் கடமையாற்றும் 149 ஆசிரியர்களுக்கு உள்ளக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் செயற்படும் வகையில் புதிய பாடசாலைகளில் தமது கடமைப் பொறுப்புக்களை ஏற்று அது பற்றி அதிபர், கோட்டக் கல்வி அதிகாரி ஊடாக தமக்கு அறியத்தருமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்த இடமாற்றம் தொடர்பாக இன்று திங்கட்கிழமை தமது மேல் முறையீடுகளை சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.(ஐ-405)

# நாய்க்கடிக்காளகியவர் வவுனியாவில் மரணம் உரிய தடுப்பூசி ஏற்றாமையே காரணம்

வவுனியா,டிசெ.13

நாய்க்கடிக்காளாகி உரிய தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளாத நபரொருவர் வவுனியா பொது வைத்தியசாலையில் இறந்துள்ளார்.

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது நிரம்பிய இந்த இளம் குடும்பஸ்தர் போர்ச் சுழலின் போது இடம் பெயர்ந்து வவுனியா நிவாரணக் கிராமத்தில் தங்கியிருந்தார். அப்போது நாய்க்கடிக்கு இவர் இலக்காகியுள்ளார். எனினும் விலங்கு விசர் நோய்க்கான தடுப்பூசியை இவர் ஏற்றிக்கொள்ளவில்லை. சாதாரண ஏற்புத் தடை ஊசியையே ஏற்றியுள்ளார். இதனால் இவர் அநியாய மாக உயிரிழக்க நேரிட்டுள்ளது. இறந்தவர் தற்போது முல்லைத் தீவில் மீள்குடியேறி வசித்து வருவதாகவும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் கடமை புரிவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. இந்த வருடம் இவ்வாறான இருமரணங்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் நிகழ்ந்துள்ளன. இது தொடர்பாகப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியபோதும் இவ்வறான மரணங்கள் தொடர்ந்து நிகழ்வது கவலைக்குரிய விடயமெனப் பலரும் தெரிவித்துள்ளனர். (க-501)

# லங்கா உப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிக்கொடை, நஷ்டஈடு பெறுவோர் விவரம்

வவுனியா,டிசெ.13

லங்கா உப்புக் கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்து வேலையிலிருந்து நிறுத்தப்பட்டவர்களுக்கான பணிக்கொடை, நஷ்டஈடு ஆகியவற்றை வழங்க விருப்பதாக வவுனியா உதவித் தொழில் ஆணையாளர் அறிவித்துள்ளார். இவர்களில் ஒரு தொகுதியினரின் பெயர் விவரங்கள் நேற்று முன்தினம் வெளியாகின. மிகுதி கீழே தரப்படுகின்றன.

கந்தையா சந்திரகுமார், ஆறன் ஆனந்தராஜா, சின்னையா ஸ்ரீபுஸ்பநாதன், வேலுப்பிள்ளை விஜயகாந்தன், நாகப்பன் தவராஜா, செல்வநாயகம் செல்வகுமார், நவரத்தினம் ஸ்ரீஸ்கந்தராஜா, யோகராஜா திருக்குமார், வீரன் தங்கராஜா, கணபதிப்பிள்ளை கிருஸ்ணசாமி, செபஸ்ரியான் மனோகரன், கனகரத்தினம் அருள்பிரகாசம், சிதம்பரநாதன் நற்சிங்கம், வடிவேலு செபஸ்தியன், கதிர்காமு தில்லைநாதன், அலிஸ் றொபேர்ட், இரத்தினம் குணசிங்கம், சோமு சண்முகராசா, பொன்னுத்துரை ஈஸ்வரானந்தம், எஸ். வல்லிபுரம், சீமான் சூசைநாயகம், கந்தையா இராசேந்திரன், ஆறுமுகம் தவராஜா, மாசிலாமணி ஜெயசிங்கம், மாசிலாமணி சிறிக்குமார், சின்னையா செல்வராசா, மார்க்கண்டு சிறிமுருகன், சுந்தரம் கிருஷ்ணன், ஐயம்பிள்ளை சற்குணநாதன், அருளானந்தம் மரியதாஸ், செல்லையா மயில்வாகனம், சுப்பிரமணியம் ஜெகதீசன், செல்லத்துரை தேவராசா, வேலுப்பிள்ளை சின்னத்துரை, சுப்பிரமணியம் ஜெகதீசன், சுப்பிரமணியம் அமிர்தலிங்கம், சண்முகம் செல்வர்த்தினம், கதிரவேலு சுப்பிரமணியம், வைர முத்து கந்தையா, முத்துக்குமார் சுந்தரலிங்கம், தம்பிராசா தர்ம குலசிங்கம், இரத்தினம் மகாலிங்கம், முத்தையா நடராசா, அவுராம்பிள்ளை மரியநாயகம், கைத்தர்ன் மரியாம்பிள்ளை, கதிர்காமு மகாலிங்கம், செபமாலை அருளப்பு, டொமினிக் மரியதாஸ், பிரான்சிஸ் குவின்டஸ், மயில்வாகனம் திரவிய நாதன், கதிர்காமு தர்மராசா, தம்பிராசா சத்தியகுமார், ஐ.ஜே. அருமைரத்தினம், சின்னையா செல்வராசா, வேலுப்பிள்ளை அமரசிங்கம். தில்லையம்பலம் யோகேஸ்வரன், மயில்வாகனம் கந்தையா, கணபதிப்பிள்ளை இராஜதுரை, கிட்டினன் அகஸ்ரின், இராமன் கந்தன், கணபதிப்பிள்ளை திருநாமம், தியாகராஜா நவரத்தினராஜா, ஆழ்வான் தனபாலசிங்கம், கந்தையா இராஜதுரை, கணபதிப்பிள்ளை நல்லையா, வல்லிபுரம் நடேசபிள்ளை, கணபதிப்பிள்ளை கந்தசாமி, குணபாலசிங்கம் பிரேமபாலன், மார்க்கண்டு லஷ்மி, சுப்பையா சற்குணராஜா, கந்தசாமி தம்பிராசா, மயிலன் தாமோதரம்பிள்ளை, வீரன் சுந்தரலிங்கம், கந்தசாமி யோகராஜா, சின்னத்துரை சிவராஜா, வேலன் தம்பிராஜா, சின்னையா சண்முகம், கே.மகாகிருஷ்ணமூர்த்தி, இரத்தினசிங்கம் தெய்வேந்திரம், செல்லையா பாலசுப்பிரமணியம், செல்லப்பா கந்தசாமி, அருளானந்தம் ஸ்ரீபன், எம். ஜே.ரி. மனோகரன், இராமையா கணேசன், கந்தசாமி பூதிநாதன், மாணிக்கம் மரியாம்பிள்ளை, கருப்பையா காளிமுத்து, பி.எம். கே.நரேந்திரம், சின்னத்தம்பி ஐயாத்துரை (க)

# மீள்குடியேறிய முல்லை மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பாரிய சவால்கள்

**சிலையூர்தனம்**

முல்லை மாவட்டத்திலே மீள்குடியேறிய 'மக்கள் அரசாங்கம் உதவிக் கரம் நீட்டித் தமது வாழ்வாதாரத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும்' என்ற நம்பிக்கையோடு இருந்தனர். ஆனால் இவர்கள் மீண்டும் அகதி வாழ்வே வாழ்கின்றனர். மீள் எழுச்சி, வடக்கின் வசந்தம் போன்றவற்றால் மக்கள் முன்னேற்றப்பாதையில் செல்கின்றனர் என்று அரசு கூறினாலும் இந்த மக்கள் அல்லற்பட்டுக்கொண்டே இருக்கின்றனர். அவர்களது வாழ்விடங்கள் வாழ்வதற்கான இடங்களாக இல்லை. தமது நிலங்களிலே பாடுபட்டு, நெற்றி வியர்வை நிலத்திலே சிந்தி சிறுகச் சிறுகச் சேமித்துத் தமது வாழ்விடங்களை உருவாக்கினர். அவைகளெல்லாம் மண்ணோடு மண்ணாக இருந்த இடம் தெரியாதுள்ளன.

இந்த நிலையில் தமது வீடுகளை மீண்டும் புனரமைக்க இவர்களின் கையிலே பணமில்லை. தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளது. தமது வீடுகள் சரிவரத் திருத்தப்படாமையால் தற்காலிக வீடுகளிலும், தகரக்கொட்டில்களிலும், தரப்பாள் குடிசைகளிலும் மக்கள் படும் துன்பம் எண்ணிலடங்கா.

பாதுகாப்பற்ற வீடுகள். அதனைச்சுற்றி நீர், காட்டு விலங்குகள் பாம்பு பூச்சிகள் போன்றவற்றாலும் அன்றாடம் மக்கள் படுந்துயரம் சொல்லிலடங்காது. ஆகவே சுருக்கமாகக் கூறின் வாழ்விடங்கள் எந்த வகையிலும் முற்றுப்பெறாத நிலையில் மக்கள் வாழ்கின்றமை இங்கே குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுத்துறையில் மோசடியில் ஈடுபடுவோர் மீது பாரபட்சமின்றிக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்



**யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதனுடன் ஒரு நேர்காணல்.**

பொதுமுகாமையாளர்கள் நேர்மையாகவும் விசுவாசமாகவும் நடந்து கொள்வார்களாயின் கூட்டுறவுச் சங்கங்களை மிகச்சிறப்பாக இயக்கி, அதன் மூலம் பொதுமக்களுக்கு அதிக நன்மைகளைப் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

கூட்டுறவுச் சட்டத்திலுள்ள சில பலவீனங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொண்டு மோசடி வேலைகளில் ஈடுபடும் பொதுமுகாமையாளர் சிலரின் செயற்பாட்டால் கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்தில் இயங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு மோசடி வேலைகளில் ஈடுபட்டு வந்தவர்கள் தொடர்பான விவரங்கள் அம்பலத்துக்கு வந்த வண்ணமுள்ளன. அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்பதற்கும் தயாராகிவிட்டேன் எனத் தெரிவித்தார் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன்.

கூட்டுறவுத்துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சிநிலை தொடர்பாகவும் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் அவர் உதயனுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் கூறிய விடயங்கள் முழுமையாக இங்கு தரப்படுகின்றன.

### சங்கங்களைச் சிறப்பாக இயக்குவதற்கு முயற்சி

யாழ்.மாவட்டத்தில் 24 பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்களும், 21 பனை, தென்னை கூட்டுறவுச்சங்கங்களும், 123 கடற்தொழில் சங்கங்களும், 226 கிராமிய சிக்கன கடன் கூட்டுறவு சங்கங்களும், 61 நிறுவன சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்களும் உள்ளடங்கலாக 538 கூட்டுறவு அமைப்புக்கள் உள்ளன. அவற்றை சிறப்பாக இயக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

திருகோணமலை,வவுனியா ஆகிய மாவட்டங்களின் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பணியாற்றிய அனுபவங்களைப் பெற்றுக்கொண்டு, கடந்த மே மாதம் மூன்றாம் திகதி அன்று யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பதவியேற்றேன்.

அன்று தொடக்கம் யாழ்.மாவட்டத்தின் கூட்டுறவுத் துறைக்கு என்னாலான, எனது அதிகாரங்களுக்கு உட்பட்ட வகையிலான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றேன்.

### நஷ்டத்துக்கும் இலாபத்துக்கும் முகாமையாளர்களே பொறுப்பு

கூட்டுறவுச் சங்கங்கள் நஷ்டத்தில் அல்லது லாபத்தில் இயங்குகின்றன என்றால் அதற்கான முழுக்காரணமும் அதற்குப் பொறுப்பான பொது முகாமையாளரையே சாரும். சில கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகள் குறித்துப் பல்வேறு தரப்பினரிடையே அதிருப்தியும், விமர்சனமும் உள்ளன. பொது முகாமையாளர்களின் மோசடிச் செயற்பாடுகள் காரணமாகவே அவ்வாறான அதிருப்தி நிலைமை ஏற்பட்டுள்ளதை மறுக்க முடியாதுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பாக இயங்குவதாக சிலர் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால், அந்தச் சங்கங்கள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து வரும் கடிதங்களில் எதிர்மாறாகவே குறிப்பிடப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது நேரடி விஜயம் செய்து இயக்குநர்சபை, பொதுமுகாமையாளர், தலைவர், கணக்காளர்கள், நிர்வாகத்தினர் சிற்றூழியர்கள் என்று அனைத்துத்தரப்பினரையும் சந்தித்து உண்மை நிலைமைகளை அறிந்து வருகின்றேன்.

கூட்டுறவுச் சங்கத்தில் பொதுமுகாமையாளர் என்னும் பதவியானது மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகும். இயக்குநர் சபை ஆயுட்காலம் வரையும் பொது முகாமையாளராக இருக்கலாம். தலைவர், மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தி யோகத் தர்கள் உட்பட அனைவரும் மாறி வருகின்றனர். எனவேதான் பொதுமுகாமையாளர் என்பவர் நேர்மையானவராக, விசுவாசமானவராக இருக்க வேண்டும். கூட்டுறவுப் பணியாளர்களுக்கு என்று சட்டப் பாதுகாப்பு நிறையவே இருக்கிறது. அதன் ஊடாகவே கூட்டுறவுச் சங்கங்கள் தவறான பாதையில் பயணிக்கின்றன. கூட்டுறவுச் சட்டத்திலுள்ள சில பலவீனங்கள் மோசடிக்குப் பாதுகாப்பளிப்பதாக உள்ளது. உதாரணமாக சுன்னாகம் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற மோசடிச் சம்பவத்தைக் குறிப்பிடலாம். அங்கு இடம்பெற்ற மோசடி காரணமாக கிராமிய வங்கியிலிருந்து சுமார் 2 கோடி ரூபா மக்களது பணம் சூறையாடப்பட்டுள்ளது. சிக்கனக் கூட்டுறவுச் சங்கம் அதன் சமாசம் ஆகியவற் றிலிருந்து பெறப்பட்ட கடனும் இதுவரை மீளச் செலுத்தப்படவில்லை.

இந்த சுன்னாகம் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பாக நீதி மன்றத்தில் வழக்கு இடம்பெற்று வருகிறது. அங்குள்ள இயக்குநர் சபையைக் கவனிக்க நடவடிக்கை எடுத்த போது, உதவி ஆணையாளருக்கு அதற்கான அதிகாரம் இல்லை எனக் கூறி நீதி மன்ற உதவியை நாடுகின்றனர். நீதி மன்றம் மூலம் தற்போது தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மோசடி செய்த சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளரை எனது தற்துணிவின் அடிப்படையில் நீக்கிவிட்டு புதிய முகாமையாளர் ஒருவரை நிய மித்து இருந்தேன். தற்போது அந்தச் சங் கத்தில் நிலவி வந்த பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. புலோலி ப.நோ.கூ. சங்கத்துக்கும் இதுபோல நடவடிக்கை எடுத்தேன். கொள்வனவு முறையில் மோசடி செய்துவந்த புலோலிச் சங்கத்தின் தற்காலிக பொது முகாமையாளரை அகற்றிவிட்டு உடுப்பிட்டி பொதுமுகாமையாளரைத் தற்காலிக முகாமையாளராக நியமித்துள்ளோம். தற்போது சங்க்கத்தில் முன்னேற் றம் காணப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்து அறியும் 'மாதாந்தப் படிவம் இலக்கம் 28' மாதாந்தக் கூட்டத்தின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தியிருந்தேன்.

அதன் பிரகாரம் அந்தப்படிவம் சரியாக மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. அதன் அடிப்படையில் குறை, நிறைகளை எழுத்து மூலம் அறிவித்து ஆலோசனை வழங்கிவருகின்றேன்.

### பாராட்டக் கூடிய வகையிலும் சங்கங்கள்

கொள்வனவு விலையைப் பாராட்டக் கூடிய ரீதியில் சில சங்கங்கள் இயங்கி வருகின்றது. அந்தவகையில் பண்டத்தரிப்பு, நீர்வேலி, அச்சுவேலி, கொடிகாமம், உடுப்பிட்டி ஆகிய சங்கங்கள் பாராட்டத்தக்க வகையில் பொருள்களைக் கொள்வனவு செய்து வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் கொள்வனவு விடயத்தில் உண்மைத் தன்மை, நேர்மைத் தன்மையை கொண்டுவர உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கூட்டுறவுச் சங்கங்கள் கொழும்புக் கொள்வனவில் ஈடுபடுவதில்லை. இனி வரும் நாள்களில் நிச்சயமாக கொழும்பிலிருந்து பொருள்கள் கொள்வனவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. சில சங்கங்களுக்கு நேரில் சென்று கட்டளையிட்டுள்ளேன். நிதி இல்லை எனக் கூறியவர்களுக்கு நிதிபெறமாற்று ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களிடம் லொறி, காணி வசதிகள் இருக்கின்றன. தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் கொழும்பு விலைமதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

### ஜனவரி தொடக்கம் கொழும்பிலிருந்து பொருள்கள்

ஜனவரி மாதம் தொடக்கம் கொழும்பிலிருந்து பொருள்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விவசாய கூட்டுறவு நுகர்ச்சிக்கு சங்கங்களின் சமாசம் ஊடாகவே கொள்வனவு செய்யவிருக்கிறோம். பிறிமா நிறுவன 'மா' தற்போது இந்தச் சமாசம் ஊடாகவே கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. அவ்வாறு 20 வீதமான மாவே கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது.

அரச அதிபருடன் கலந்துரையாடி அவரது அனுமதியுடன் சமுர்த்திப் பொருள்களை நேரடியாக கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்து மக்களுக்குப் பகிர்ந்தளிக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளேன். இதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேவைக் கட்டணம் மூலமாக வருமானம் பெறக் கூடியதாக இருக்கும். எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சிறப்பாக இயங்குவதற்கு என்று வடக்கு, கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருடன் உரையாடி நிதி பெற்று அந்த நிதியில் இருந்து கடன் வழங்கியுள்ளேன். சங்கானை, மானிப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன. அவை மாதாந்தம் இரண்டு லட்சம் லாபமடைந்து கொள்கின்றன.

**கூட்டுறவுப் பணியாளர்களுக்கு என்று சட்டப் பாதுகாப்பு நிறையவே இருக்கிறது. அதன் ஊடாகவே கூட்டுறவுச் சங்கங்கள் தவறான பாதையில் பயணிக்கின்றன. கூட்டுறவுச் சட்டத்திலுள்ள சில பலவீனங்கள் மோசடிக்குப் பாதுகாப்பளிப்பதாக உள்ளன.**

### முகாமையாளருக்கு ஊக்குவிப்பு

சிறப்பாக இயங்கும் கூட்டுறவுச் சங்க முகாமையாளருக்கு ஜனவரி மாதம் தொடக்கம் மாதாந்த ஊக்குவிப்பு வழங்கவும் ஏற்பாடு செய்யப்படவுள்ளது. அந்த வகையில் ஐந்து லட்சத்துக்கு மேல் விற்பனை செய்யும் கிளை முகாமையாளருக்கு ஐந்து வீதமும் பொதுமுகாமையாளருக்கு ஐந்து வீதம் ஊக்குவிப்பு தொகையாக வழங்கவுள்ளோம்.

நிவாரண விநியோகத்திலும் தவறுகள் நடந்துள்ளன. இதனை எனது நேரடி விஜயம் ஊடாகவும் மக்களது முறைப்பாடுகள் மூலமும் அறிந்துள்ளேன். இதனைச் சீர் செய்யவே கொத்தணி முறையை அறிமுகம் செய்து வைத்தேன். இதன் மூலம் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. மானிப்பாய், பருத்தித்துறை, சங்கானை கூட்டுறவுச்சங்கங்கள் இதன் மூலம் முன்னேற்றம் கண்டுள்ளன.

### புதிய அங்கத்தவர் இணைப்பு

2011 ஆம் ஆண்டை புதிய அங்கத்தவர்களை இணைக்கும் ஆண்டாக பிரகடனப்படுத்தியிருக்கிறோம். சங்கங்களிலுள்ள கல்வி உத்தியோகத்தர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களைக் கூட்டாக இணைத்து புதிய அங்கத்தவர்களையும் கிராமம் கிராம மாகச் சென்று சேர்த்துக் கொள்ளவுள்ளோம். இளைய தலைமுறை மூலம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அதன் மூலம் முன்னேற்றம் காணமுடியும். கூட்டுறவுச் சங்கங்கள் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளாமை ஒரு குறைபாடாக என்னால் இனங்காணப்பட்டுள்ளது.

**நேர்காணல்: உமா**

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னரே பணியாளர்கள் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என அறிவுறுத்தியிருக்கின்றேன். உச்சமட்ட வெற்றிடங்கள் உள்வாரியாக விளம்பரம் செய்து நிரப்பப்பட வேண்டும். இல்லையேல் அடுத்த வருடம் தொடக்கம் வெளிவாரியாக பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

பொதுச் சபை, கிளைக்குழுத் தேர்தல்கள் ஒரு சில கூட்டுறவுச் சங்கங்களில் இடம்பெறவில்லை. அதனை அடுத்த வருடம் ஜனவரியில் நடத்தத் தீர்மானித்துள்ளோம். அவ்வாறு தேர்தல் நடத்த முடியாமைக்குரிய காரணத்தை வெளிப்படையாக கூறமுடியாத நிலைமை காணப்படுகிறது.

### சுற்று நிருபத்துக்கு முரணாக நடப்போர் மீது நடவடிக்கை

கூட்டுறவுச் சுற்று நிருபத்துக்கு முரணாக நடந்து கொள்பவர்கள் மீது ஜனவரி மாதம் தொடக்கம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அவ்வாறு நடந்து கொண்டவர்களது பெயர் விவரங்களைப் பத்திரிகை ஊடாகவும் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மனிதாபிமானம் என்ற ரீதியில் இனி மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது. எவர் என்றாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள், தலைவர்கள் நேர்மையாக நடந்து மக்களுக்கு சேவை செய்கிறோம் என நினைத்து செயற்பட வேண்டும்.இதன் மூலமே சிறந்த கூட்டுறவுத் துறையை வளர்த்தெடுக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நீண்ட காலமாகத் தடுத்துவைக்கப்பட்டிருக்கும்

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

### நாடாளுமன்றில் மாவை கோரிக்கை

கொழும்பு, டிசெ.13

சர்வதேச மனித உரிமைகள் தினம் அனுஷ்டிக்கப்படும் இச் சந்தர்ப்பத்தில் நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் விசாரணைகளின்றித் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. மாவை சேனாதிராஜா கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தார்.

வரவு-செலவுத் திட்டக் குழுநிலைவிவாதத்தில்கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாகமேலும்கூறியவை வருமாறு:-

85 வீதமான தொழிற்சாலைகள் கொழும்பில் உள்ளன. இருபது, முப்பது வருடங்களாகத் தொழிற்சாலைகள் எவையும் திறக்கப்படாது அபிவிருத்தியில் பின்தங்கி நிற்கும் வடக்கு, கிழக்கில் தொழிற்சாலைகளைத்திறக்கவெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரவழைக்கப்படவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வருடாந்தம் ஒதுக்கும் 50 லட்சம் ரூபா நிதி அபிவிருத்திப் பணிகளுக்குப் போதாதுள்ளது. இத்தொகை ஒரு கோடியாக உயர்த்தப்பட வேண்டும்.

தெற்கில் உள்ள எம்பிக்களுக்கு இத்தொகை தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால், வடக்கு, கிழக்கு எம்.பிக்களுக்கு இது அவசியம். குறைநிரப்புப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து இத்தொகையை வழங்க வேண்டும்.

தற்போது சர்வதேச மனித உரிமைகள் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் வழக்குத் தாக்கல் செய்ய அடிப்படைக் காரணங்கள் எவையும் இன்றி - விசாரணைகள் இன்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றுநான் அரசிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

இந்தக் கைதிகளில் 10 வருடங்களாகக் குழந்தைகளுடன் பெண்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் யுத்த காலத்தில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியிருந்த பலர் உள்ளனர். அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கப்படும்போது ஏனைய மாவட்டங்களைப்போல் வடக்கு கிழக்கு மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கப்படவேண்டும். அம்மாவட்டங்கள் புறக்கணிக்கப்படக்கூடாது.

அந்தந்த மாவட்டங்களில் காணப்படும் மூலவளங்களைப் பயன்படுத்தி அந்தந்த மாவட்டங்களில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் - என்றார். (ஒ-சி)

# நாடளாவிய ரீதியில் 110 உள்ளூராட்சி சபைகள் வருவாய் அற்ற நிலையில்

### அமைச்சின் செயலாளர் தகவல்

கொழும்பு, டிசெ.13

இலங்கை பூராகவுமுள்ள 331 உள்ளூராட்சி சபைகளுள் 110 சபைகள் போதிய அளவிலான வருவாய் அற்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

மேல்மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்ப கற்கை நெறிகளைப் பின்பற்றிய குழுவினருக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு:

குறிப்பிட்ட 110 நிறுவனங்களும் பிரதேச சபைகளே என இனங்காணப்பட்டுள்ளன.

வளங்கள் மற்றும் வருவாய் பற்றாக்குறைகள் காரணமாக இவ்விதம் பின்னடைவு நிலையிலுள்ள மேற்படி பிரதேச சபைகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒத்துழைப்புடன் அடுத்த ஆண்டில் 600 கோடி ரூபா வழங்கப்படவுள்ளது.

அத்தோடு நிதியொதிக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படாதுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் 49 அபிவிருத்தித் திட்டங்களும் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத்திட்டங்களுள் அலுவலகங்கள், நீர்விநியோக மார்க்கங்கள், விளையாட்டுத் திடல்கள், வாராந்தச் சந்தைகள், நூல் நிலையங்கள் என்பன உள்ளடங்குகின்றன.

மேற்படி திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக 170 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது- அவர் தெரிவித்தார். (ம-22)

### உதவி.....



ஊக்குவிப்பு: யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்காக நளின் தகவல் நிறுவன உரிமையாளர். லேசர் பிறிண்டர் ஒன்றை பாடசாலை அதிபரிடம் வழங்குகிறார். (201)

# அரசியல் கைதிகளின் விடுதலைக்கு அரசு ஆவன செய்ய வேண்டும்

### சிவாஜிலிங்கம்

தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் கடந்த வெள்ளிக்கிழமை கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, காணாமல் போனோரைத் தேடியறியும் குழு கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தி யது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரி விக்கையிலேயே அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடத்தப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பதற்காக முறையான நடவடிக்கையொன்று அரசினால் இதுவரை முன்னெடுக்கப்பட்டதால், அரசின் மீது பொது மக்களுக்கு சந்தேகம் எழுந்துள்ளது. இதனால் கடத்தப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பதற்கான துரித நடவடிக்கையை அரசு உடனடியாக முன்னெடுக்கவேண்டும்.

அத்துடன், கடத்தப்பட்டவர்கள் மற்றும் காணாமற்போனவர்களின் விவரங்களையும் அரசு வெளியிடவேண்டும். இதன் மூலம் கடத்தப்பட்ட, காணாமல் போனவர்களின் நிலையை அவர்களின் உறவினர்கள் அறிந்து கொள்ள முடியும். காணாமல் போன, கடத்தப்பட்டோரின் உறவினர்கள் கவலைப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் துக்கத்திற்கு அரசு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும்- இப்படி அவர் கூறினார். (ஒ-5)

# நான் தமிழன் என்பதால் பல பாதிப்புக்களைச் சந்தித்துள்ளேன்

# ஆணைக்குழு முன் டாக்டர் முரளி வல்லிபுரநாதன் சாட்சியம்

கொழும்பு, டிசெ.13

"சுகாதார அமைச்சில் சேவையாற்றும் எனக்கு வன்னியில் இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. தமிழன் என்பதால் நான் பல்வேறு பாதிப்புகளைச் சந்தித்துள்ளளேன்."

- என்று சுகாதார அமைச்சில் கடமை யாற்றும் டாக்டர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக் குழுவின் அமர்வில் கலந்து கொண்டு சாட்சியமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக் குழுவின் அமர்வு கொழும்பில் ஆணைக்குழுவின் தலைவர் சி.ஆர்.டி. சில்வா தலைமையில் நடைபெற்றது.

டாக்டர் முரளி வல்லிபுரநாதன் அங்கு தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியவை வருமாறு:-

யுத்த காலத்தில் வன்னி யில் கடமையாற்றிய நான்கு வைத்தியர்களையும் ஆணைக்குழு முன்சாட்சியமளிக்க அழைப்பு விடுத்திருக்கக் கூடாது. அவர்களுக்கு எதிரான வழக்கு விவகாரங்கள் இன்னும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் உள்ளதால் அவர்களை அழைத்திருக்கக் கூடாது

நான் தமிழன் என்பதால் பல பாதிப்புக்களையும் அநீதிகளையும் சந்தித்துள்ளேன்.

மேலும் நாங்கள் அன்று வடமராட்சியில் எங்கள் சொந்த இடத்திலிருந்து வெளியேற்றப்பட்டோம். இதுவரை எவ்வித மான நஷ்ட ஈடும் வழங்கப்படவில்லை.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பின்னர் நான் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சேவையாற்ற அழைக்கப்பட்டேன். ஆனால், வேறு மாவட்டங்களில் கடமையாற்றச் சென்ற டாக்டர்களுடன் ஒப்பிடுகையில் எமக்குக் குறைவான நிதியே கிடைத்தது.

யுத்தம் முடிவடைந்ததும் இடம் பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள முகாம்களில் பணியாற்ற தொண்டர் அடிப்படையில் [illegible] களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த வகையில் நானும் அதற்கு விண்ணப்பித்தேன். ஆனால், எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

தமிழ்பேசும் டாக்டர் என்ற வகையில் என்னை அந்த சேவையில் உள்வாங்கியிருக்க வேண்டும் என்று கருதினேன். மேலும் பல தமிழ் டாக்டர்களுக்கு இவ்வாறு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றும் அறிந்து கொண்டேன். சுகாதார அமைச்சில் சேவையாற்றும் நான் தமிழ் டாக்டர் என்ற வகையில் பல அநீதிகளுக்கு உள்ளாகியுள்ளேன்.

இதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்கள் அனைத்து வசதிகளுடனும் மீள் குடியேற்றப்பட வேண்டியது அவசியமாகும். கடந்தகால தவறுகளைக் கருத்திற்கொண்டு தேசிய நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன், வன்னியில் காணப்பட்ட தற்காலிக வைத்திய சாலைக்கு அருகில் புலிகளின் [illegible] குழு கேள்வி கேட்டமையின் நோக்கம், படையினரைக் காப்பாற்றுவதாகவே இருந்தது. அவர்களிடம் உண்மையில் மக்களுக்கு தேவையான உணவுகள் மற்றும் மருந்துகள் போதுமானதாக இருந்தனவா? என்றுதான் கேட்டிருக்க வேண்டும்.

இவ்வாறான முரண்பாடுகள் இருக்கின்ற நிலையிலும் இந்த ஆணைக்குழுவானது தேசிய நல்லிணக்கத்தை நோக்கி செயற்படும் என்று நம்புகின்றோம்.

முக்கியமாக, சிங்கள மொழிக்கு முக்கியத்துவம் அளித்தல், அரச ஆதரவுடனான குடியேற்றங்கள், சிறுபான்மையினருக்கு எதிரான அநீதிகள், தமிழர்கள் அதிகளவில் வசிக்கும் இடங்களில் அதிகளவில் இராணுவ பிரசன்னம் என்பனவற்றை அரசு நிறுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நஷ்டஈடு வழங்க வேண்டும். அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட வேண்டும். மேலும் சிறுபான்மைக்களின் உரிமைகளை உறுதிப் படுத்தும் வகையில் அரசியல் தீர்வுமுன் வைக்கப்பட வேண்டும் - இவ்வாறு டாக்டர் முரளி வல்லிபுரநாதன் சாட்சியமளித்தார்.

**ஆணைக்குழு தலைவர்:** தகவல்களை அறியும் நோக்கில்தான் நாங்கள் குறித்த டாக்டர்களை சாட்சியமளிக்க அழைத்தோம். அதாவது எந்தத் தரப்பினாலும் பாதிப்புக்கள் ஏற்படுத்தப்பட்டனவா என்பதனை அறியும் நோக்கில்தான் புலிகளின் ஆட்லறி நிலைகள் குறித்த கேள்வியை அவர்களிடம் கேட்டிருந்தோம்.

**பதில்:** ஆனால் அவர்களுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தில் வழக்கு விவகாரம் இருப்பதாக நான் அறிகின்றேன்.

**கேள்வி:** அரச ஆதரவில் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாக கூறுகின்றீர்கள். அதனை விளக்க முடியுமா?

**பதில்:** என்னிடம் வந்த நோயாளர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்கள் உள்ளன. குறிப்பாக, மன்னாரில் 7 குடும்பங்கள் குடியேறியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு பலதகவல்கள் உள்ளன. அவற்றை என்னால் உங்களுக்கு வழங்க முடியும் - என்றார் டாக்டர். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகரசபை
## 2011ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருள்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் 31.03.2011ஆம் திகதிவரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பொருள்கள்**

01. காகிதாதிகள், எழுதுபொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள், இரும்பு அலுமாரி)
03. மேல்நாட்டு மருந்துவகைகள், வைத்திய உபகரணங்கள்
04. சித்த மருத்துவ மருந்துகள்
05. கோல்வுடைத்துணிகள், பபன்னல் துணிகள், ஏனைய துணிவகைகள்
06. பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோல்பொருள்கள்
07. கட்டடப் பொருள்கள் (சீமெந்து, ஓடுகள்) முதலியன
08. தீந்தைகள், நிறந்தீட்டும் பொருள்கள் முதலியன
09. கற்கள், மணல்கள்
10. நீர்வழங்கு பொருள்கள், பி.வி.சி. குழாய்கள் முதலியன
11. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணை உறுப்புக்கள்
12. மின்சார இயந்திரப்பொருள்கள், மின்கருவிகள்
13. விறகு, தேங்காய்மட்டை, கிடுகுகள்
14. எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறீஸ்
15. இரும்புப் பொருள்கள்
16. பனைமரங்கள், சலாகைகள்
17. நூலகங்களுக்குரிய நூல்கள்
18. வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர்கள், ரியூப் முதலியன
19. கீராந்திகள், றீப்பைகள், பலகைகள்
20. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கால்துடைப்பம், இழைக்கயிறு, தேடாக்கயிறு முதலியன
21. சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமிநாசினிகளும், மருந்துகளும்
22. கணினி, கணினிகளுக்கான உதிரிப்பாகங்கள், போட்டோப் பிரதி இயந்திரம், போட்டோப் பிரதி இயந்திரங்களுக்கான உதிரிப்பாகங்கள் (Canon, Sharp வகைகள்) வழங்கல்

**சேவைகள்**

01. அச்சிடுதல்
02. தட்டச்சு இயந்திரம் திருத்தல்
03. மோட்டார் வாகனம் திருத்தம்
04. ரியூப் ஒட்டுதல்
05. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
06. ஏற்றியிறக்கும் வேலைகளுக்குப் பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல்
07. சுத்திகரிப்பு, ஏற்றியிறக்கல் வேலைக்கு ரக்ரர் வாடகைக்கு விடல்
08. கோல்வுடை தைத்தல்
09. மின் மோட்டர்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தம்
10. மின் கலங்களுக்கு மீள மின்வழியூட்டல்
11. றப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல்
12. வாகனங்கள் சேர்விஸ் செய்தல்
13. கணினி இயந்திரம், போட்டோப்பிரதி இயந்திரம், சேர்விஸ் செய்தல்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்கல்கள், சேவைகள் 2011" எனக்குறிப்பிட்டுப் பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

"வழங்கல்களுக்கும், சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என முகவரியிடப்பட வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல், சேவைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்களை யாழ்.மாநகரசபை கொள்வனவுப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக்கட்டணமாக (ரூபா 1000/= வற்வரி நீங்கலாக) பெறுமதியான காசுக் கட்டளை அல்லது தபால் கட்டளை "ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்" என்ற பெயருக்குப் பெறப்பட்டு இணைத்து அனுப்பி வைக்கவேண்டும். பணமாகச் செலுத்த விருப்புபவர்கள் சபையின் நானாவித இறைவரிக்கிளையில் நேரடியாக வேலைநாள்களில் செலுத்த முடியும்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து கோரப்படும் போது கூறுவிலைகளை சமர்ப்பிக்கத்தவறும் அல்லது உரிய நேரத்துக்கு பொருள்கள்/ சேவைகள் வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/ சேவைகள் வழங்கும் எந்த ஒரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்தில் இருந்து நீக்கப்படும்.

திருமதி யோ.பற்குணராசா,
மாநகர முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

திகதி: 02.12.2010

(பி/573943)

### சேவையிலிருந்து ஓய்வு

தென்மராட்சி, டிசெ.13

தென்மராட்சிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் சி.தேவராசா எதிர்வரும் 17 ஆம் திகதியுடன் 38 வருட சேவையிலிருந்து இளைப்பாறவுள்ளார்.

எழுதுநர் சேவையில் இணைந்து பண்டாரவளை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, யாழ். செயலகம், பருத்தித்துறை ஆகிய இடங்களில் பணியாற்றி எழுதுநர் சேவை அதி சிறப்புத் தரத்திற்குப் பதவிஉயர்வு பெற்றுத் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக இவர் கடமையாற்றியுள்ளார். (201-207)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள் — 1250 சிகப்பு

துலா 04 11 47 54 — 10-12-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 205,650 | 20/- | 4,113,000/- |
| 2 இலக்கங்கள் | 18,872 | 40/- | 754,880/- |
| 1 இல. + லக்கினம் | 18,708 | 60/- | 1,122,480/- |
| 2 இல. + லக்கினம் | 1,711 | 200/- | 342,200/- |
| 3 இலக்கங்கள் | 502 | 1000/- | 502,000/- |
| 3 இல. + லக்கினம் | 51 | 10,000/- | 510,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 2,000,000/- | 2,000,000/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,744,560/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 557 | | 677,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 246,054 | | 10,422,060/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

இடபம் 24 26 35 43 — ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 555 | 500/- | 277,500/- |
| 4 இலக்கங்கள் | 1 | 100,000/- | 100,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 300,000/- | 300,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 557 | | 677,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-


# 100ஆவது ஆண்டு ஜனன தின நினைவு



## அமரர் C.A.சண்முகநாதன்

(முன்னாள் பிரதம லிகிதர், சுகாதாரத் திணைக்களம், அம்பனை, பன்னாலை, தெல்லிப்பழை)

**தோற்றம்: 13.13.1910**

**மறைவு: 03.02.1993**

பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் இருப்பிடமாய்
இருந்து எம்மை நன்கு வாழ
வழிவகுத்த
எம் அன்புத் தெய்வமே!
எங்கள் மனதிலிருந்து உங்கள்
நினைவுகள்
என்றும் மறையாது பப்பா!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

மனைவி- சரஸ்வதி மற்றும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Dr. சிறீபாலேந்திரராஜா,
பிரதிப்பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(107245)


## மஹஜன சம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha

10.12.2010 — அலுவலக முடிவுகள் — சீட்டிழுப்பு இல. 2329

வெற்றி எழுத்து: Y — வெற்றி எண்கள்: 2 0 1 6 9 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y 2 0 1 6 9 9 | ரூபா.15,460,750/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 2 0 1 6 9 9 | ரூபா. 2,000,000/= | 01 |
| 2 பரிசுகள் | 0 1 6 9 9 | ரூபா. 100,000/= | 11 |
| 3 பரிசுகள் | 1 6 9 9 | ரூபா. 10,000/= | 115 |
| 4 பரிசுகள் | 6 9 9 | ரூபா. 1,000/= | 1144 |
| 5 பரிசுகள் | 9 9 | ரூபா. 100/= | 11505 |
| 6 பரிசுகள் | 9 | ரூபா. 20/= | 113685 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 2 0 1 6 9 | ரூபா. 10,000/= | 13 |
| 8 பரிசுகள் | 2 0 1 6 | ரூபா. 1,000/= | 121 |
| 9 பரிசுகள் | 2 0 1 | ரூபா. 100/= | 1130 |
| 10 பரிசுகள் | 2 0 | ரூபா. 50/= | 11386 |
| 11 பரிசுகள் | Y | ரூபா. 20/= | 45419 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 10,659,880.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
2012 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 2470662, 4607000, Hotline 2433631 இணையத்தளம் www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.குடாநாட்டில் மீள்குடியேறியுள்ள வன்னி மக்களுக்கு நிவாரணம் குறைப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்டோர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.13

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்.குடாநாட்டில் மீளக்குடியேறி நிவாரணம் பெற்று வந்த குடும்பங்களில் பெரும்பாலானோருக்கு நிவாரணம் திடீரென நிறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் வழங்கப்படும் பொருள்களின் அளவும் குறைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நிவாரணத்தையே நம்பி வாழும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களில் தஞ்சம் புகுந்திருந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒரு பகுதியினர் வன்னியில் மீளக்குடியமர்த்தப்பட்டனர். மேலும் ஒரு பகுதியினர் யாழ். மாவட்டத்தில் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர்.

வன்னியிலிருந்து வந்து மீளக்குடியமர்ந்த இவர்களுக்கு உலக உணவு ஸ்தாபனத்தால் உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டது.

உலக உணவு ஸ்தாபனம் நிவாரணம் வழங்குவதில் கட்டுப்பாடு விதித்ததைத் தொடர்ந்து பல மாதங்களாக நிவாரணம் பெற்று வந்த குடும்பங்களில் பெரும்பாலானோருக்கு திடீரென நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையைக் கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்டோர் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-115)

# யாழ். குடாநாட்டு வீதிகளில் மீண்டும் இராணுவ சோதனை நிலையங்கள்

வலி.வடக்கு, டிசெ.13

யாழ்.குடாநாட்டு வீதிச்சந்திகளில் மீண்டும் இராணுவ சோதனை நிலையங்கள், காவல் நிலையங்கள் போன்றவற்றை இராணுவத்தினர் புதிதாக அமைத்து வருகின்றனர்.

கடந்த காலத்தில் இராணுவத்தினரின் புதிய சோதனை நிலையங்கள், இருந்த இடங்களிலேயே மீண்டும் காவல் நிலையங்கள் என்ற பெயரில் இராணுவத்தினரின் இருப்பிடங்கள் அமைக்கப்படுகின்றன.

அண்மைக்காலத்தில் இத்தகைய புதிய கண்காணிப்பு நிலையங்கள் இணுவில் கந்தசாமி கோவில் சந்தியிலும் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோயில் தேர்முட்டிக்கு அருகாமையிலும் இத்தகைய திடீர் இராணுவ காவல் நிலையங்கள் தகரங்கள், மரங்கள் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே மேற்குறிப்பிட்ட பகுதியில் இருந்த காவல் நிலையங்கள் அரசின் அங்கீகாரத்தின் கீழ் கடந்த மூன்று வருட காலத்தினுள் நீக்கப்பட்டமையும் மீண் டும் வீதியில் நின்று கடமையாற்றிய இராணுவத்தினர் தற்போது சிறியளவிலான கொட்டில்களை அமைத்து மூன்று நான்கு பேர்வரை தங்கியுள்ளமையை தற்போது காணக்கூடியதாக இருக்கின்றது. (201-86)

# மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கும் நோக்கில் யாழ்.பல்கலையில் புதிய டிப்ளோமாக் கற்கைகள்

யாழ்ப்பாணம், டிசெ.13

யாழ். மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் கற்கும் சூழலை ஏற்படுத்திக் கொடுக் கவே எமது பீடத்தினால் மூன்று டிப்ளோமா கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீடபீடாதிபதி கே.தேவராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதிதாக மூன்று டிப்ளோமா கற்கைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டமை தொடர்பாகக் கருத்துக் கூறிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:- மனித வள முகாமைத்துவம், நுண்நிதியியல், சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் ஆகிய மூன்று டிப்ளோமா கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் நுழைய முடியாத மாணவர்களுக்கு பல்கலைக்கழக கல்வி வாய்பை இதன் மூலம் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அதன் ஒரு கட்டமாக இக் கற்கை நெறிகளின் உருவாக்கமும் அமையும்.

இம் மூன்று கற்கை நெறிகளும் தமிழ் மொழி மூலமாக வார இறுதி நாள்களில் கற்பிக்கப்படும். இக்கற்கை நெறிகள் ஒன்றரை வருட கால இடைவெளியைக் கொண்ட கற்கை நெறிகள் ஆகும்.

இக்கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்வோர் வங்கிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் என்பவற்றில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அது மட்டுமன்றிச் சுயமாகத் தொழில் ஒன்றை ஆரம்பித்து நடத்தக்கூடிய ஆளுமையையும் இவர்கள் பெற்றுக்கொள்ள முடியும் -என்றார். (ம-319)

# தன்னியக்க பணப் பரிவர்த்தனை மீண்டும் இயங்க ஆரம்பம்

தென்மராட்சி, டிசெ.13

தேசிய சேமிப்பு வங்கி சாவகச்சேரி கிளையின் தன்னியக்க பணப் பரிவர்த்தனை இயந்திரம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இரு வாரங்களுக்கு முன்னர் வங்கியில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட திருடர்களால் சேதமாக்கப்பட்ட இயந்திரம் கொழும்பிலிருந்து வருகை தந்த இயந்திர தொழில்நுட்பவியலாளர்களால் சீர் செய்ததையடுத்து ஏ.ரி.எம்.சேவை மீண்டும் இயங்குவதாக கிளை முகாமையாளர் சி.தனீஸ்வரன் தெரிவித்துள்ளார். (204-207)

## சேவைக்குப் பரிசு.....



கௌரவிப்பு: காரைநகர் ஈழத்துச் சிதம்பர மாணிக்கவாசகர் மடாலயத்தின் அறப்பணியைப் பாராட்டி திருவாவடுதுறை ஆதீனத்தால் "சைவச் சுடர் நிலையம்" என்னும் சிறப்பு விருதும் பொற்கிழியும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. மடாலயத்தின் சார்பாக அதன் உப தலைவர் க.கு.க.சிவபாலன் திருவாவடுதுறை ஆதீனத்தில் குருமகா சன்னிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகளிடமிருந்து விருதினையும், பொற்கிழியையும் பெற்றுக் கொள்கிறார். (201-250)

# ஆஞ்சநேயர் ஆலயத்தில் இலட்சார்ச்சனை விழா

வலி.வடக்கு,டிசெ.13

இணுவில், மருதனார் மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோயில் இலட்சார்ச்சனைப் பெருவிழா எதிர்வரும் 22ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம் திகதிவரை பன்னிரெண்டு தினங்கள் நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வுகள் காலை 8.30 மணிக்கு கணபதி ஹோமமும் பிற்பகல் 4 மணிக்கு லக்சுமி ஹோமமும் 5 மணிக்கு நவக்கிரக ஹோமமும் நடைபெறவுள்ளன.

ஏனைய நாள்களில் தினமும் காலை 8.30 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்கும் அபிசேகம் நடைபெறுவதுடன் முற்பகல் 9.30 மணிக்கும் பிற்பகல் 4மணிக்கும் அர்ச்சனை உபயமும் இடம்பெறும். அத்துடன் தினமும் நண்பகல் மகேஸ்வர பூசை நடைபெற ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.(201-86)

## ஊர்வலம்.....



வரவேற்பு: யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மறைமாவட்டக் குரு அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசமும், சிறப்பு விருந்தினரான ஆரம்பக்கல்வி உதவிப் பணிப்பாளர் பி.குகதாசன், கௌரவ விருந்தினரான எஸ்.கே.எம்.லக்கா கோல்டிங் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி பா.ஜெனகன் ஆகியோர் உட்பட விருந்தினர்கள் வரவேற்கப்படுகின்றனர்.




# சாவகச்சேரி வைத்தியசாலையில் மக்கள் முறைப்பாட்டுப் பெட்டி

தென்மராட்சி, டிசெ.13

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மக்கள் முறைப்பாட்டுப்பெட்டி, ஆலோசனைப் பெட்டி என்பவற்றை அமைக்க வைத்தியசாலை நிர்வாகத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வைத்தியசாலைச் செயற்பாடுகள் தொடர்பாகவும், அபிவிருத்தி தொடர்பாகவும் தமது கருத்துக்களைச் சுதந்திரமாக தெரிவிக்க வசதியாக பெட்டிகள் வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மக்களால் தெரிவிக்கப்படும் கருத்துக்களும் ஆலோசனைகளும் வைத்தியசாலை நிர்வாகத்துக்கும் பொதுமக்களுக்குமிடையில் நெருக்கமான செயற்பாடுகளை ஏற்படுத்துமென அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (204-207)

# தற்கால மனிதனின் ஆளுமை விருத்தியில் ஆங்கிலமும், தகவல் தொடர்பாடலும் செல்வாக்கு

## பேராசிரியர் நடராஜசுந்தரம் உரை

யாழ்ப்பாணம்,டிசெ.13

தற்கால அறிவியல் உலகில் ஒருவருடைய ஆளுமை விருத்தியில் ஆங்கிலமும் தகவல் தொடர்பாடலும் செல்வாக்குச் செலுத்தும் விடயங்களாக மாறிவிட்டன என யாழ்.பல்கலைக்கழக நிதி முகாமைத்துவதுறைத் தலைவர் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம் தெரிவித்தார். யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சி.விஜயகுமாரின் 'பருநிலை மற்றும் நுண்பாக பொருளியல் கோட்பாடுகள்' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு ஆய்வுரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புத்துணர்வு கற்றல், திட்டம் ஆகியன இன்றைய உலகில் முக்கியமானவையாகும். ஆங்கிலமும் தகவல் தொடர்பாடல் அறிவும் ஒருவருடைய ஆளுமைத்திறன் வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்கு செலுத்துகின்றன. நுண்பாகக் கோட்பாடுகளை கணித மற்றும் வரைபட உதவியுடன் இந்த நூல் விளக்கியுள்ளது. அரச தலையீடு அவசியம் என்ற 'கெயின்சியத்' தத்துவம் தற்கால உலகில் பிரதானமாகப் பின்பற்றப்படு வதையும் அரச தலையீடு எந்தளவுக்கு பொருளாதாரத்தில் காணப்பட வேண்டும் என்பதையும் தெளிவாக இந்த நூல் விளக்குகின்றது. இது மாணவ சமூகத்திற்கும் ஆசிரிய சமூகத்திற்கும் மிகப் பிரதானமான உசாத்துணை நூலாகும் என மேலும் தெரிவித்தார்.

நூலாசிரியரான யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் சி.விஜயகுமார் ஏற்புரையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் நிகழ்த்துகையில்:-

பல்கலைக்கழக ஆசிரியர்களின் பணிகளுள் கற்பித்தல், ஆராய்ச்சி ஆகிய இரண்டும் முக்கியமானவை. சிறந்த பல்கலைக்கழக ஆசிரியர் கற்பித்தலை திறமையாகச் செய்வதோடு ஆய்வுப் பணிகளிலும் ஈடுபடவேண்டும். பொதுவாக தமிழில் பொருளியல்சார் நூல்கள் குறைந்தளவே வெளிவருகின்றன. இதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே தமிழில் நூல்களை அளவுக்கு எழுத வேண்டும். இது ஒரு மிகப் பெரிய பணியாகும். நூல்களை எழுதும் போது நல்ல விமர்சனங்கள் மற்றும் நேர்க்கணியமான விமர்சனங்களை உள்வாங்கிச் செயற்பட வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் பேராசிரியர் சிவநாதன், பேராசிரியர் சி.இளங்குமரன், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் தேவராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் ஞானக்குமரன் உட்பட பலரும் உரையாற்றினார். (201-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி

தருபவர்: வித்யா

**மேடம்:**
கனிவான பேச்சுக்களால் காரியங்கள் சாதிக்கும் நாள். தொல்லை கொடுத்த சிலர் தோள் கொடுக்க முன்வருவர். தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். உடன் பிறப்புக்கள் வழியில் கேட்ட உதவி களைச் செய்ய முன்வருவீர்கள். ஒரு வகையில் வந்த பணவரவுகள் மற்றொரு வகையில் செலவாகலாம். தம்பதியர் இடையே அன்னியோன்யம் கூடும்.

**இடபம்:**
இரண்டு நாள்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் இன்று எளிதில் முடிவுக்கு வரும். அவசரச் செலவுகளுக் காக சிலரிடம் கடன் கேட்கலாம். சில வேலைகளைத் திட்டமிட்டபடி செய்ய முடியாமல் தவிர்க்கலாம். பெரிய மனிதர் களின் ஆசிகளைப் பெறுவீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர், அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம்.

**மிதுனம்:**
ஆதாயத்தை விடச் செலவுகள் கூடும் நாள். எங் காவது முக்கிய வேலையாக வெளியில் புறப்படும் நேரத்தில், குடும்ப உறுப்பினர்கள், சில வேலை களைச் சொல்லி தொந்தரவு கொடுக்கலாம். உத்தியோ கத்தர்கள் அதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆட்படலாம். தண்டச் செலவுகளால் பணப்பற்றாக்குறையை எதிர் கொள்ளலாம்.

**கடகம்:**
விரும்பிய ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். தேக ஆரோக்கியம் தெம்பு உற்சாகம் தரும். வெளியூர் பயணங் கள் செல்லும் சிலருக்கு உதவிகரமாக இருப்பீர்கள். உறவினர் ஒருவர் தொடர்பான விடயங்களுக்காக அதிக முயற்சி எடுப்பீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காக செலவு செய்யலாம். பல நாள்களாகச் சந்திக்காமல் இருந்த ஒருவரைச் சந்திக்கலாம்.

**சிங்கம்:**
தொடங்கிய காரியங்கள் துளிர் விட்டு வளரும். ஒரு பணவரவை எதிர்பார்த்திருக்கும் போது, மற்றொரு பணவரவு வரலாம். தொழில் ரீதியான போட்டிகள், எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்ல நேரிடலாம். உங்களுக்குத் தெரிந்த ஒருவரை உறவினருக்கு அறிமுகப்படுத்தி வைப்பீர்கள்.

**கன்னி:**
தேக ஆரோக்கியத்தில் சிறு குறைபாடு ஏற்பட்டு, உற்சாகத்தை குறைக்கலாம். பிரியமான சிலருடன் யோசித்து பேசும் நிலைமை உருவாகலாம். சிலர் உங்களை விமர்சனம் செய்வது கண்டு கோபம் கொள்ளலாம். பெற்றோர் தொடர்பான விவகாரங்களில் வீண் பிடிவாதங்களைத் தவிர்க்க வேண்டும். தொழில் ரீதியாகச் சிலருக்கு யோசனை சொல்லலாம்.

**துலாம்:**
மனதில் புதிய எண்ணங்கள் குடிகொள்ளும் நாள். தாமதித்து இருந்த வேலை ஒன்றை, அதிரடியாக செயல்பட்டு முடிவுக்கு கொண்டு வருவீர்கள். நண் பர்களை சந்தித்து பழங்கதைகள் பேசி மகிழ்வீர்கள். சக ஊழியர்களின் அன்புக் கட்டளைகளுக்கு ஆட்பட நேரிடலாம். வெளியூர்ப் பயணங்கள் செல்ல முன்னேற்பாடு செய்வீர்கள்

**விருச்சிகம்:**
கணவன், மனைவி உறவில் சீரான நிலைமை காணப் படும். நண்பர் ஒருவரை தேடிச் சென்று பார்க்க நேரிட லாம். வெளியூர்ப் பயணங்கள் விரும்பும் விதத்தில் அமையும். சக ஊழியர் ஒருவர் மூலம் புதிய நண்பர் களின் அறிமுகம் கிடைக்கும். போராட்டமான நிலைமை மாறி, எதி லும் துணிச்சலாக செயற்படுவீர்கள். விருந்து, விசேஷம் உண்டு.

**தனுசு:**
மனைவி, குழந்தைகள் கேட்ட பொருள்களை கூடுதல் பணத்தை செலவழித்து வாங்கிக் கொடுப்பீர்கள். மருந்துப் பொருள்கள் வாங்கலாம். யாருக்காகவும் நீங்கள் பிணை ஏற்றுக் கொள்வது நல்லதல்ல. பெண்கள் பெற்றோர் வழி உதவிகளைப் பெறலாம். வியா பாரிகள் வேலையாள்கள் திடீர் விடுமுறையால் சிரமங்களுக்கு ஆள்படலாம்.

**மகரம்:**
வாழ்க்கையில் புதிய மாற்றத்தைக் காணும் நாள். ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்ட உறவினர்கள், அன்பாக நடந்து கொள்வர். தம்பதியர் இடையே ஏற்பட்ட சச்சரவுகள் தீர்வுக்கு வரும். எதிர்பாராத பணவர வுகளைப் பெறலாம். மனதில் இனம்புரியாத சந் தோஷம், உற்சாகம் குடிகொள்ளும் நாள். தொழில் மீதான பற்று கூடும்

**கும்பம்:**
பெரிய மனிதர்களின் சந்திப்பு நிகழும். சிலர் உங்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகளை செய்யாததால், சாக்குப் போக்கு சொல்லிச் சமாளிப்பீர்கள். பயணங் களால் அலைச்சல் இருக்கலாம். பிள்ளைகள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. வழக்கமாகச் செய்யும் வேலைகளை செய்ய முடியாமல் போகலாம்.

**மீனம்:**
வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். ஆசைப்பட்ட பொருள் ஒன்றை அதிக விலை கொடுத்து வாங்குவீர்கள். தொழில் ரீதியாக புதிய திட் டங்கள் போட்டு அதை செயல்படுத்த நினைப்பீர்கள். எந்த விடயத்தையும் எளிதில் முடிக்க சூழ்நிலை உங்களுக்குச் சாதகமாக அமையலாம். உதிரி வருமானங்களைப் பெறலாம்.

## கலைவிழா....



திறமை: மாதகல் சென்.தோமஸ் றோ.க பெண்கள் பாடசாலையின் ஒளிவிழா அண்மையில் இடம் பெற்றது. நிகழ்வில் 'திருமுழுக்கு யோவானின் அறிவிப்பு' என்னும் நாடக ஆற்றுகையில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். (201)

# ஏ-9 வீதி சேதம்; பயணிப்பதில் மக்கள் சிரமம்

சாவகச்சேரி,டிசெ.13

கண்டி வீதி மிக மோசமாக பாதிக்கப்பட் டள்ளதால் வாகனங்கள் பிரயாணம் மேற் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேற்படி வீதியில் பல இடங்களிலும் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன. இதனால் மோட்டார் சைக்கிள், சைக்கிள், ஓட்டோ ஆகியவற்றில் பிரயாணம் செய்வோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாவற்குழி பாலத்திற்கும் செம்மணி யாழ். வரவேற்பு வளைவுக்கும் இடையில் வீதியின் இருபக்கமும் இடிந்துள்ளதால் வாகனங்கள் விலகிச் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது. வீதிகள் சேத மடைந்த நிலையில் மேற்படி வீதிக்கு ஏரி காணப் படுவதால் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

எனவே வீதிகள் துரிதமாகச் செப்பனிடப்பட வேண்டும். இதன் மூலம் விபத்துக்களைத் தவிர்க்க முடியும். எனவே அதிகாரிகள் துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டு வீதியைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(201-131)

# சமயப் பிரசாரம் சரிதானா?



உட்கார்ந்த இடத்திலிருந்து ரீ.வி. அலைவரிசையை திருப்பி திருப்பி மாற்றும் தானியங்கி உபயோகிப்பது சந்தோசமான விளையாட்டாக இருக்கிறது. ரீ.வி. நிகழ்ச்சிகளை விடவும் இந்த அலை வரிசை மாற்றும் விளையாட்டு மிகவும் சுவாரஸ் யமாகவே இருக்கிறது.

ஒரு காலை நேரத்தில் இப்படி 'ரிமோட்டை' அழுத்தி விளையாடியபோது கோபமாகி விட் டேன். பல மதத்தினரும் பல சாமியார்களும் தமது கடவுளைக் கூவிக் கூவி விற்றுக் கொண் டிருந்தனர். முக்காடு போட்ட பெண், கோட்சூட் போட்ட ஆண் பிள்ளைகள், மாலையும் கழுத்து மாய் சாமியார்கள் எனப் பலர் காவி, வெள்ளை, சிவப்பு என்று நிறநிறமான உடைகளில் தோன் றித் தங்கள் கடவுள் எப்படியாவது பூலோகத் தைக் கைப்பற்ற வேண்டும் என்ற கவனிப்புடன் பாடி, ஆடி, கத்தி பல மொழிகளில் சமய வியா பாரம் செய்து கொண்டிருந்தனர்.

தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றும் அரசி யல்வாதிகளின் வெறியும் , வேகமும் அவர் கள் பிரசாரத்தில் கனல் வீசியது. தவக்கலை இல்லாமல் சவக்கலையுடன் ஒரு சாமியார், குங்குமப் பொட்டுக் கவுண்டர் பாணியில் ஒரு சாமியார், எழுவாய் பயனிலை- செயற்படு பொருள் என்கிற வாக்கிய இலக்கணம் எதை யும் பற்றியுமே கவலைப்படாத ஒரு ஊதுவாய் சாமியார். இப்படிமாறிமாறி ரீ.வி அலை வரிசையில் வெறியோடு வந்து போனார்கள். அவர்கள் கைவசம் உள்ள ஒரு சாமியை நம் தலையில் எப்படியாவது திணிக்க வேண்டும் என்கிற ஆக்கிரமிப்பு மனோபாவம் அவர்கள் ஒவ்வொரு அசைவிலும் தெரிந்தது. கடவுளே! உனக்கு இப்படிப் பல மூவர்கள் எதற்காக?

கடவுள் என்பது அவரவர் அனுபவம் இன்னும் சொல்லப் போனால் அது வெளியில் சொல்ல முடியாத, சொல்ல கூடாத அனுபவம்

''கடலில் ஆழம் காணப்புறப்பட்ட உப்பு பொம்மை கரைந்துதான் போகுமே ஒழிய வெளியேவந்து கடலைப் பற்றிச் சொற் பொழிவு செய்யுமா? அது போல் சொல்ல முடி யாதது இறை அனுபவம்'' என்கிறார் பகவான் ராமகிருஸ்ணர்.

கடவுள் என்பது அனுபவத்தால் விளைந்த ஆனந்தம். உண்மையில் அதை வெளியில் சொல் வதால் சுவை குன்றும் என்பதே ஞானிகளின் அபிப்பிராயம்.

ஊட்டிக்கு'' சுற்றுலா போகலாம்... சந்தோச மாக இருக்கும். இருநூறு ரூபாய் கட்டணம். வருகிறவர்கள் கை தூக்குங்கள்'' என்றார் பாடசாலை ஆசிரியர். வகுப்பில் இருந்த நாற்பது பேரில் ஒருவனைத் தவிர எல் லோரும் கைதூக்கினார்கள் ஆசிரி யர் வருந்தினார்.

கை தூக்காத மாணவனைப் பார்த்து ''தம்பி ... உனக்கு பணம் கிடைக்காதா! நான் வேண்டு மானால் தரட்டுமா?'' என்றார் ஆசிரியர்.

''உங்களுக்கு வேண்டும் என்றால் நான் தருகிறேன் . ஆனால் நான் வரமாட்டேன்'' என்றான் மாணவன்.

''சுற்றுலா போனால் நிறையச் சந்தோசம் கிடைக் கும் தானே?'' என்றார் ஆசிரியர்.

''உண்மைதான் ஆனந்தமாகத்தான் இருக்கும் ஆனால் போய் வந்ததும் அதை விளக்கி கட்டுரை எழுதச் சொல்வீர்களே! அது சிரமம் தானே!'' என்றான் மாணவன்.

ஆனந்த அனுபவங்களை வெளியிடுவது, வார்த் தைப் படுத்துவது இலகுவான விடயம் அல்ல. அத னால் தான் பகவான் ராமகிருஸ்ணர் '' வேதங்கள் கட வுளை எச்சில் படுத்த முயன்றன'' என்று கூறினார்.

பகவான் ராமகிருஸ்ணன், விவேகானந்தர் மற்றும் தமது சீடர்களுடன் கங்கைக்கரை பக்கம் சென்று கொண்டிருந்தார்.

முரட்டு நாய் ஒன்று எலும்புத் துண்டு ஒன்றை ஆனந்தமாக இரசித்து, ருசித்து தின்று கொண்டி ருந்தது. அருகில் பல நாய்கள் எச்சில் ஊற அதைப் பார்த்துக் கொண்டிருந்தன.

அவை பலவாறு குரைத்தும் காலால் நிலத்தில் அடித் தும் தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தின இருந்த போதும் இதை எதுவும் கவனிக்காது போல் எலும் பைத் தின்பதிலே முரட்டு நாய் குறிக்கோளாக இருந்தது.

இதைப் பார்த்து பகவான் ராமகிருஸ்ணர் சீடர் களைக் கேட்டார் '' உங்களுக்கு என்ன தெரிகிறது?''.

''நாய்கள் பண்பற்றவை. தன் இனத்தில் சில நாய்கள் பட்டினி இருக்க, தான் மட்டும் உண்கிறது'' என்றான் ஒரு சீடன்.

''மனித ஜாதி போல் நாயிலும் வலியவன் வைத்ததே சட்டம் '' என்றான் மற்றொரு சீடன்

''உணவை அனுபவிக்கும் நாய் குரைக்கவே இல்லை. குரைக்கின்ற நாய்கள் அனுபவிக்கவே இல்லை'' என்றார் விவேகானந்தர்.

அந்த நாய் மட்டும் தான் ஆனந்தத்தை அனு பவிக்கிறது.உண்மை ஞானியும் இவ்வாறு தான் இறைவனை அடைந்தால் எதையும் அலட்டிக் கொள்ளாமல் அனுபவிப்பான்.

சுகி சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரில் பாதிப்புற்ற மக்கள் 'பட்ஜெட்'டில் புறக்கணிப்பு

(11.12.2010 ஆம் திகதிய தொடர்ச்சி)

யுத்தம் நடைபெற்றபோது "25,000 பேர் மட்டுமே புலிகளின் பிடிக்குள் சிக்குண்டுள்ளனர் என்றனர். ஆனால் வரவு செலவுத்திட்ட உரையில் 263,000 பேரை மீள் குடியேற்றியுள்ளோம் இன்னும் 15 ஆயிரம் பேர் மட்டுமே எஞ்சியுள்ளனர்" என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். தற்போது மீள் குடியமர்ந்தோர் மழையில்படும் அவலம். இதுதானா மீள் குடியேற்றம்? புனர்வாழ்வு? புனரமைப்பு? எனக் கேட்க வைக்கிறது. இந்த அவல நிலையை வைத்துத்தானா "ஆசியாவின் அதிசயம் (Wonder of asia) என இலங்கையை விவரித்துள்ளார்கள்?"

### அரச ஊழியருக்கு அதிகரிப்பில்லை

வாழ்க்கைச் செலவு வானளவாக உயர்ந்து செல்கிறது; 5000 ரூபாத் தாளினை வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இந்த நிலையில் அரச ஊழியர்களுக்கு சம்பளத்தில் எவ்வித அதிகரிப்பும் வழங்கப்படவில்லை. 5 சத வீதப் படி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. நாட்டுக்காகவும் அரசுக்காகவும் உழைத்த ஓய்வூதியர்களுக்கு வெறும் 250 ரூபாய் மட்டும் வாழ்க்கைச் செலவுப் படியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது அவர்களது ஒருவேளை தேநீருக்கும் போதாது. இதுவா சமூகப் பாதுகாப்பு? மூத்த பிரஜைகளுக்கான கௌரவம்?. வரவு செலவுத் திட்ட உரையில் "வறுமை 7.6 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. குறிப்பிடப்பட்டுள்ளது". இது யாருடைய கணிப்பீடு இக் கணிப்பீட்டுக்குள் வடக்கு, கிழக்குப் பகுதிகள் உள்ளடக்கப்பட்டதா? அல்லது அவை தற்போதும் தனித்து விடப்பட்டு விட்டதா என்ற கேள்விகள் எழுகின்றன.

### ஆடைக் கைத்தொழிலுக்கு ஊக்குவிப்புகள் இல்லை

ஜி.எஸ்.பி.பிளஸ் (G.S.P.+) வரிச் சலுகை நீக்கப்பட்டதனால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள (5 பில்லியன் ரூபா வருமானத்தை பெற்றுத்தந்த) ஆடைக் கைத்தொழிலுக்கு எத்தகைய நிவாரணங்களும் ஊக்குவிப்புக்களும் வழங்கப்படவில்லை.

இலங்கையின் பிரதான முதன்மை ஏற்றுமதியாக 50 சதவீதத்தைக் கொண்டு விளங்கிய ஆடைக் கைத்தொழிலின் சந்தைப்படுத்தலுக்கான உற்பத்தி மையம் வியட்நாம், பங்களாதேஷ், சீனா போன்ற நாடுகளை நோக்கி நகர்ந்துள்ள வேளையில் இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கும் நிலை தவிர்க்க முடியாத தாகவுள்ளது. இதற்கான மாற்று வழிகள் எதுவும் வரவு செலவுத் திட்டத்தில் இல்லை.

இந்த நெருக்கடிக்கு உதவிபெறவே சர்வதேச நாணய நிதிய விவகாரங்களைக் கையாளவெனத் தனி அமைச்சை மஹிந்த உருவாக்கியுள்ளமை தெரிகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்குட்பட்டு கடன் பெறவும் அரசு தயாரகியுள்ளமையை இது வெளிப்படுத்துகின்றது. "யாருடைய நிபந்தனைக்கும் அடிபணியோம் என்றவர்களை போர்முனைப்பின் விளைவான பொருளாதார நெருக்கடி அடிபணிய வைத்துள்ளது. அன்னிய முதலீடுகளை நம்பிய ஒரு வரவு-செலவுத் திட்டமாகவே இது உள்ளது.

### உலகப் போட்டித் தன்மையில் மிகவும் பின்தங்கிய நிலை

இறுதியாகக் கிடைத்த 2010 இல் உலகப் போட்டித் தன்மை Global Compctiveness அறிக்கையின்படி இலங்கை 67ஆவது நிலையில் உள்ளது.

இலங்கையின் ஏனைய போட்டி ஏற்றுமதி நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை மிகப் பின்தங்கிய நிலையில் உள்ளது. ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் பெருமளவில் தங்கியிருக்கும் இலங்கை போன்ற சிறிய நாட்டின் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை இது ஒரு மோசமான நிலையாகும்.

| நாடு | நிலை |
|---|---|
| மலேசியா | 26 |
| தாய்லாந்து | 43 |
| இந்தியா | 56 |
| வியட்நாம் | 64 |
| இலங்கை | 67 |

இந்த நிலையை மாற்றுவதற்கு ஒரு சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும் இலங்கையின் விலைவாசி உயர்வின் மத்தியில் அவை போதுமானவையல்ல. உள்நாட்டின் உயர் பணவீக்கத்தினால் அடிப்படை ஆண்டான 2006 இன் 100 என்பதிலிருந்து உண்மைப் பயன்தரு செலவாணி வீதம் (Reer) 22 சதவீதம் உயர்ந்துள்ளமை இப்போட்டித் தன்மையை பாதித்துள்ள முக்கிய காரணியாகும்.

யுத்த முனைப் பின்-பாரிய செலவின் ஒரு விளைவே உயர் பணவீக்கமாகும். பணவீக்கத்தை கட்டுப்பத்தாதவரை போட்டித் தன்மையைப் பேண முடியாது.

### பற்றாக்குறையை நிவர்த்திக்கும் யோசனைகள் இல்லை

வழமையாக வரவு செலவுத்திட்டம் ஒன்றில் பற்றாக்குறை அல்லது துண்டு விழும் தொகை என்பது எவ்வாறு சரி செய்யப்படும் என்பது பற்றிய முன்மொழிவுகள் குறிப்பிடப்படும். ஆனால் 'ஆசியாவின் அதிசயமாக' இந்தப் பட்ஜெட்டில் அத்தகைய முன்மொழிவுகள் எதுவும் இல்லாமை எதிர்வரும் காலங்களில் மக்கள் மீது எத்தகைய சுமைகள் சுமத்தப்படப் போகின்றனவோ என்ற அங்கலாப்பை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் அரசின் திறைசேரிக்கு நிதி சேகரிக்கும் ஒரு புதிய தந்திரோபாயம் இந்த பட்ஜெட்டில் புகுத்தப்பட்டுள்ளது. அதுதான் வெளிநாடுகளில் தொழில் புரியும் 30 லட்சம் பேரை இலக்கு வைத்து ஓய்வூதியத் திட்டமும், சுயதொழிலில் ஈடுபடும் ஏனைய 30 லட்சம் உள்நாட்டு தொழிலாளரையமாக வைத்து இன்னொரு ஓய்வூதியத் திட்டமும் முன் வைக்கப்பட்டுள்ளமையமாகும்.

இது வரவு செலவுத் திட்டப் பற்றாக் குறைக்கு அவசர நிதி காணும் ஒரு மூலமா? என்ற வினாவை எழுப்பியுள்ளது.

### சாதகமான அம்சங்கள்

*2002 இல் அறிமுகப்படுத்தப்பட்டு இதே அரசினால் இதுவரை அறவிடப்பட்டு வந்த ஒருவரி இதுவாகும். மனித வாழ்வுக்கு இரத்த ஓட்டம் சுமூகமாக இடம்பெறுவது எப்படி முக்கியமோ அதுபோல் பொருளாதார இயக்கத்துக் நிதிப்பாய்ச்சல் தடையின்றி சுமூகமாக இடம்பெறுவது அவசியம். பற்றுவரி இதுவரை நிதிப்பாய்ச்சலுக்கு-சேமிப்புக்கு - ஒரு தடையாக இருந்தது. காலம் கடந்தாவது இதை நீக்கியிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

*தனி நபருக்குரிய வருமானவரி 5-35 % என்பதை 4-16%மாகக் குறைக்கப்பட்டமையும் வரி விடுவிப்பு ஆரம்ப வருமானம் 300,000 இலிருந்து 500,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உழைக் கும்போது செலுத்தும் வரி, வரிக்கு 600,000 ரூபா வரை (மாதம் 50,000 வரை) வரிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

*மருந்துப்பொருள்களிற்கான இறக்குமதி வரிகள் நீக்கப்பட்டமை.

*10 வருட முமமொழி இலங்கை (Trilingual Srilanka) திட்டத்தை ஆரம்பித்தல். இத்திட்டம் உள்ளார்ந்தமாகப் பாகுபாடற்ற விதத்தில் முழுமனதுடன் முன்னெடுக்கப்படுமாயின் சிங்கப்பூரை மிஞ்சியதாக இலங்கை ஆசியாவின் அதிசயமாக நிச்சயம்மாறும்.

### பாதகமான அம்சங்கள்

*கொடிய வறுமைக்குள் வாடுகின்ற/ நாட்டுக்காக உழைக்கின்ற - பெருந்தோட்டத் தொழிலாளருக்கு எந்த ஒரு நிவாரணங்களும் வழங்கப்படவில்லை.

* 60 அலகுகளுக்கு மேலான மின் கட்டணங்கள் 8 சத வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளமை சாதாரண குடிமக்களைப் பாதிக்கும்.

*வாழ்க்கைச் செலவின் உயர்வைக் கட்டுப்படுத்த எத்தகைய வழிமுறைகளும் குறிப்பிடப்படவில்லை. எனவே விலைகள் தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் என எதிர்பார்க்கலாம்.

*தேயிலை ஏற்றுமதி மீதான 'செஸ் வரி' 10 ரூபாவில் அதிகரிக்கப்பட்டமை - இது அதன் ஏற்றுமதி வருமானத்தைப் பாதிக்கும்.

### முரண்பாடுகள்

*"மும்மொழி இலங்கை" திட்டம் அமுலாக்கப்படும் அதேநேரம் 'ஆசிரியர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த இரண்டாம் மொழித் தேர்ச்சிக்கான மாதாந்தக் கொடுப்பனவு நீக்கப்பட்டுள்ளது' என்ற அறிவிப்பு இத்திட்டத்தின் அமுலாக்கத்தின் மீது ஐயப்பாட்டைத் தோற்றுவித்துள்ளது.

அத்துடன் அண்மையில் இலங்கை நிர்வாக சேவை யில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 257 பேரும் சிங்களவராவர். இத்தகைய பாரபட்சம் யுத்தம் முடிவுற்றதுடன் இடம் பெறுவது இந்த "மும்மொழி இலங்கை" திட்டத்தை சந்தேகப்பட வைக்கிறது.

*போர் முடிவுற்றுள்ள பின்னும் பாதுகாப்புக்கான செலவீனங்கள் உயர்த்தப்பட்டுள்ளமையும் பல சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

*தனியார் துறையினருக்கான ஓய்வூதியத் திட்டம் மற்றும் வெளிநாட்டில் தொழில் புரிவோருக்கான ஓய்வூதியத்திட்டம் என்பன வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைகளுக்கு அவசர நிதி தேடும் ஒரு முயற்சியாகுமா என்ற ஐயப்பாடு காணப்படுகின்றது. ஏனெனில் பற்றாக்குறை எவ்வாறு நிதியீட்டம் செய்யப்படும் என்பது பற்றிய வழமையான வரவு செலவுத் திட்ட முன்மொழிகள் எதுவும்-எங்கும்- காணப்படவில்லை.

*"நாட்டுக்கு முதலீடு தேவை. பங்குச் சந்தை வளர்ச்சியடைய வேண்டும்" எனக்கூறும் அரசு, அதற்கு முரணான விதத்தில் பங்குக் கொடுக்கல் வாங்கல் மீதான வரியை 0.2% இலிருந்து 0.3% மாக அதிகரித்துள்ளது.

*அமைச்சர்களைப் பார்த்து "செலவீனங்களைக் குறைத்துக் கொள்ளுங்கள்" எனக் கூறிய ஜனாதிபதி தனது பிறந்த தினத்துக்கும் பதவியேற்புக்கும் பல்வேறு அமைச்சுக்களும் அரச திணைக்களங்களும் பத்திரிகை, தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்றவற்றினூடான வாழ்த்துக்களை மேற்கொள்ளவும் பலகோடி ரூபாக்களைச் செலவிட அனுமதித்தது ஏன் ?

* "சுற்றுலாத் துறையை ஊக்குவிக்க வேண்டும்; இலங்கையை ஒரு சுற்றுலா மையமாக்க வேண்டும்" இது ஒரு கனவாக இருக்க இதற்கு முரணாக ஐந்து நட்சத்திர ஹோட்டல்களுக்கு கட்டில் ஒன்றுக்கு 20 டொலர் அறவீடொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக் கட்டண உயர்வினால் உல்லாசப் பயணிகள் 'மலிவான நாடுகளை' நோக்கிச் செல்வதின் மூலம் உல்லாசப் பயணத்துறை பாதிக்கப்படும்.

*'யுத்த முடிவுடன் நாடு ஐக்கியப்பட்டுள்ளது' என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். நாவற்குழிப் பகுதியில் சிங்கள மக்கள் அத்துமீறிக் குடியேறி யதை வைத்தா இவ்வாறு ஐக்கியப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகிறார்? இலங்கை ஒரு பல்லின நாடு கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா குறிப்பிட்டது போல் ஒரு மொழி இரு நாடு; இரு மொழி ஒரு நாடு என இரு மொழி பேசுபவர்களும் தங்கள் நிலங்களில் சுதந்திரமாக வாழக்கூடிய நிலை உறுதிப்படுத்தப்படவேண்டும்.

*நாட்டுக்கான பெருமளவு வெளிநாட்டு நிதியை (4 பில்லியன் டொலர் வரை) ஈட்டித்தரும் 30 இலட்சம் பேர் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பில் உள்ளனர். அவர்கள் தங்கள் குடும்பங்களைப் பிரிந்து ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து, பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் ஊன், உறக்கமின்றி உடலை வருத்தி உழைத்துப் பணம் அனுப்புகின்றனர். அவர்களுடன் அவர்களது குடும்பத்தவர்கள், உறவினர் மற்றும் நண்பர்கள் உரையாடுவதற்கு நிமிடத்துக்கு 2 ரூபா வரி அறவிடப்படவுள்ளது. இதுதான் அவர்களுக்கு வழங்கும் சமூகப் பாதுகாப்பா?

* நாட்டு நிலைமை சனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியமுள்ள நிலையில் அதற்கு நேர் மாறானதாக படை வீரரின் மூன்றாவது பிள்ளைக்கு ஒரு லட்சம் ரூபா கொடுப்பனவு வழங்கப் போவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

* போரின் பின்னரான இந்த பட்ஜட்டில் பாதுகாப்புக்கு 215.2 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட அதேநேரம் மீள் குடியமற்றலுக்கு வெறும் 1.7 பில்லியன்களே ஒதுக்கப்பட்டுள்ளமை இந்த நாட்டில் தற்போதும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதா அல்லது மீண்டும் ஒரு யுத்தத்தை நாடு எதிர்பார்க்கின்றதா? என்ற வினாக்களை எழுப்பியுள்ளது.

### கரன்

பரம்பரை பரம்பரையாகத் தேடிய வீடுகள், சொத்துடமைகள் அனைத்தையும் இழந்து நிர்கதிக்குள்ளா கியுள்ள மக்கள் மீதான அரசின் அக்கறை இதுதானா?. இவர்கள் தான் நாம் ஒரே இனம் ஒரே தாயின் பிள்ளைகள் எனக் கதை சொல்லிக் கொண்டிருக்கிறார்களா? எனச் சிலர் கேள்வி யெழுப்புவதையும் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. மொத்தத்தில் மனிதாபிமானப் போரின் மனித அவலங்கள் மறக்கப்பட்டுவிட்ட ஒரு பட்ஜட்டாகவே இது விளங்குகிறது.

### 2011-2016

#### நடுத்தரகால இலக்குகள்

*5-7% குறைந்த பணவீக்க வீதம்

*7-8% பொருளாதார வளர்ச்சி

*அறிவுசார் பொருளாதார மாக (Knowledge Based Economy) மாற்றுதல்

*வறுமையிலிருந்து விடுபட்ட ஒரு சமூகம்

*தலா வருமானம் 4000 அமெரிக்க டொலர். அதாவது உயர் நடுத்தர வருமான நாடக (HMIC) மாற்றுதல்

"சிறந்ததொரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு நிகழ்காலத்தை முகாமை செய்வது அவசியம்" என வரவு செலவுத்திட்ட உரையில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

#### நிலையான சமாதானத்தின் அவசியம்

*வலுவான பொருளாதார வளர்ச்சிக்கு

*வறுமையை ஒழிப்பதற்கு

*பௌதீக வளங்களின் அழிவினைத் தடுப்பதற்கு

*மனித வாழ்வைப் பாதுகாப்பதற்கு

*மூலவளங்களை உற்பத்தியாக்கமற்ற நடவடிக்கைகளிலிருந்து உற்பத்தியாக்கத்துறைகளுக்கு திருப்பி விடுவதற்கு

(18 ஆம் பக்கம் பார்க்க....)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிங்கள மொழியில் மாத்திரமே இலங்கையின் தேசிய கீதம் பாடப்படும்

## அமைச்சரவை தீர்மானம்

கொழும்பு, டிசெ. 13

இலங்கையின் தேசியகீதம் சிங்கள மொழியில் மாத்திரமே பாடப்படும் என இலங்கையின் அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளது

இதன்படி தற்போது தமிழிலும் பாடப்படும் தேசிய கீதம் எதிர்காலத்தில் தேசிய நிகழ்வுகளின் போது பாடப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசியக் கீதத்தில் வரும் மாதா என்ற சொல் வடக்கு - கிழக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் உரித்தான சொல் என்பதை கருத்திற் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

லண்டனுக்கு சென்று திரும்பிய நிலையில் அமைச்சரவை கூட்டத்தில் பங்கேற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேறு எந்த நாட்டிலும் தேசிய கீதம் ஒரு மொழிக்கு அதிகமான மொழிகளில் பாடப்படுவதில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, தமது ஆட்சிக்காலத்தின் போது வடக்கில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் போது தமிழில் தேசியக்கீதம் பாடப்பட்ட போது வெளிநடப்பு செய்ததையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் இலங்கை ஒரேநாடு என்ற அடிப்படையில் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்கு அமைச்சர் விமல் வீரவன்ச தமது ஆதரவை வெளியிட்டார்.

எனினும் அமைச்சர் வாசுதேச நாணயக்கார மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோர் இது நடைமுறைக்கு சாத்தியமற்றது எனக் குறிப்பிட்டனர்.

எனினும் அமைச்சரவை ஜனாதிபதியின் யோசனையை ஏற்றுக் கொண்டது. (ம)

# இணைப்பாட விதானத்திலும் அக்கறை காட்டினால் கல்வித்துறையில் முழுமையாக வெற்றியடையலாம்



உயர்தரத்தில் கலைப்பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம்பெற்ற கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மாணவன் குணசிங்கம் தர்மேந்திரனுடனான நேர்காணல்.

மாணவர் கள் பாடத்தில் மாத்திரம் அக்கறைகாட்டாது இணைப்பாட விதானத்திலும் அக்கறை காட்ட வேண்டும். அதன் மூலம் தான் கல்வித்துறையில் முழுமையான வெற்றியை அடையமுடியும்

உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் மாவட்ட நிலையில் முதலிடம் பெற்ற கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மாணவன் செல்வன் குணசிங்கம் தர்மேந்திரன் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜீ.சீ.ஈ உயர்தரத்தில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றமை குறித்து 'உதயனு'க்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

எழுது மட்டுவாளைச் சொந்த இடமாகக் கொண்ட நான் தற்போது இடம்பெயர்ந்து கண்டி வீதி, மீசாலை கிழக்கில் வசித்து வருகின்றேன்.

நாங்கள் 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின் போது இடம் பெயர்ந்தோம். பின் தொடர்ச்சியாக மூன்று தரம் இடப்பெயர்வுகளைச் சந்தித்தோம். 2006ஆம் ஆண்டு மீசாலைக்கு வந்தோம்.

எனது ஆரம்பக்கல்வியை எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும் பின்னர் இடப்பெயர்வின் காரணமாக ஏழாலை, மல்லாகம், மிருசுவில் ஆகிய இடங்களில் இருந்து கல்வியை தொடர்ந்தேன்.

இறுதியாக உயர்தரக் கல்வியை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் பெற்றுக்கொண்டேன்.

தமிழ், புவியியல், வரலாறு ஆகிய பாடங்களை உயர்தரத்தில் தெரிவுசெய்து கற்றேன்.

எனது சொந்த வீடு உள்ள பகுதி உயர்பாதுகாப்பு வலயப் பகுதியாக இருந்துதான் நீக்கப்பட்டது. தற்போது அது பற்றைகளால் மூடியுள்ளது.

நான் சாதாரண தரத்தில் '9ஏசி' சித்தி பெற்றேன் எனது கல்விக்கு எனது உறவினர் மற் றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள் என பலரும் பேருதவி புரிந்தார்கள். அவர்களுக்கு எனது நன்றிகளை கூற கடமைப்பட்டுள்ளேன். எல்லாவற்றையும் விட எனக்கு கடவுளின் அனுக்கிரகம் இருந்தது. அவரின் ஆசி எனது வெற்றிக்கு உதவியாக இருந்தது.

எமது எதிர்கால மாணவர்கள் புத்தகப்பூச்சிகளாக இருக்காமல் சகல ஆளுமைகளும் கொண்டவர்களாக, உளவளத் திறமை உள்ளவர்களாக, சமுதாயத்தை காக்கக்கூடியவர்களாக, விசாலமான போக்கும் உடையவர்களாக இருக்க வேண்டும்.

மாணவர்கள் இலட்சியப் பாத்திரங்களாக உயர்நிலையில் உள்ளவர்களை மனதில் கொண்டு செயற்பட வேண்டும்.

மாவட்ட மட்ட, மாகாண மட்ட கவிதைப் போட்டிகள், சிறுகதைப் போட்டிகள், சமூக விஞ்ஞானப்போட்டிகள் போன்றவற்றிலும் நான் பங்குபற்றி வெற்றியும் பெற்றிருக்கிறேன். இந்த மனநிலை ஒவ்வொரு மாணவர்களிடையேயும் இருக்க வேண்டும்.

உயர்தரத்தை பொறுத்த வரையில் ஒரு வினாவை பல கோணங்களில் அணுகி விடையளிக்க வேண்டும். ஒவ்வொருவரும் விடையளிக்கும் போது தனித்துவம் இருக்க வேண்டும். சிந்தனைத் தெளிவு இருக்க வேண்டும் தெரிவு செய்து படிப்பதை விட முழுமையான பாடப்பரப்பையும் தெரிந்து கொள்ள வேண்டும். முயற்சி எடுத்துப் படிக்க வேண்டும். எனது எதிர்கால இலட்சியம் சமூகத்திற்கு சேவையாற்றுவதே. அதற்கு ஏற்றவகையில் தொழிலையே விரும்புகிறேன். இதற்கு மிகவும் பொருத்தமான தொழில் ஆசிரியத் தொழில் ஒன்றுதான் - என்றார்.

ஹரிஸ்

# சிக்கன கடன் வழங்கு கூ. சங்கத்தின் அங்கத்தவரின் பிள்ளைகள் கௌரவிப்பு




தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுகின்றது

வலிவடக்கு, டிசெ.13

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான பாராட்டு விழா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடை பெற்றது.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை வடமாகாண மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் என்.பத்மநாதன், யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவ நாதன், யாழ்.மாவட்ட தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் என். இராஜாராம் உட்பட மற்றும் பலர் ஏற்றினர்.

பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்ட மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் பத்மநாதன், கூட்டுறவு உதவி ஆணையாளர் அருந்தவநாதன் ஆகியோர் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினர். (204-86)

# மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற அரசினதும், பௌத்த சமயத்தினதும் உதவி தேவை

யாழ்ப்பாணம், டிசெ. 13

சமயம், கலாசாரம் சார்ந்த விடயங்களுக்கு இந்து குருமார்கள் மிகச் சிறப்பாக தமது பங்களிப்புக்களை வழங்கி வருகின்றனர்.

எனினும் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு அரசாங்கத்தினதும், தென்னிலங்கையிலுள்ள பௌத்த சமயத்தினரின் உதவிகள் மிக அவசியமானவை.

சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் தலைவர் சபா வாசுதேவக் குருக்கள் இவ்வாறு தெரிவித்தார்.

ஆனைப்பந்தியிலுள்ள குருமார் ஒன்றியதின் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்து பௌத்த சமயக் குருக்களுக்கிடையேயான தலைமை உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரை நிகழ்த்துகையில்:

யாழ்ப்பாண மக்கள் துரித அபிவிருத்தியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சமயம் சார் கலாசாரம்சார் வளர்ச்சிக்கு இந்து குருமார்களின் பங்களிப்பு அவசியமானது.

அதற்கான பங்களிப்பை இந்துக் குருமார்கள் வழங்கிவருகின்றனர்.

தமிழ் மக்களுடைய தேவைகள் பல நிறைவேற்றப்பட வேண்டும். இதற்கு அரசினதும் தென்னிலங்கை பௌத்த மதத்தின் உதவிகள் மிகமிக அவசியமானவை என உணர்கின்றோம்.

துன்பத்துக்கு ஆளான மக்களுக்கு ஆன்மீகம் ஒன்றுதான் ஆறுதலாக அமைய முடியும். இதற்கு சமயத் தலைவர்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது.

யாழ்.மாவட்டத்தின் சமயம் சார், ஆன்மீகம் சார் அபிவிருத்திக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கத்தயாராக இருக்கிறோம். அதன் மூலம் மக்களது வாழ்வை சுபீட்சமுடையதாக மாற்ற முடியும் - என்றார். (ம-14-7)

# இளைஞனின் காலில் இருந்து ஷெல் சிதறல்கள் அகற்றல்

தென்மராட்சி டிசெ. 13

ஏற்கனவே ஒரு காலை இழந்த இளைஞனின் மறுகால் தொடையினுள் காணப் பட்ட ஷெல் சிதறல் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டது.

கடந்த வருடம் வன்னிப் பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்த வேளையில் ஷெல் வீச்சில் காலை இழந்த இளைஞர் ஷெல் சிதறலால் காயமடைந்து குணமானார்.

காயமடைந்த பகுதியில் ஏற்பட்ட வலி காரணமாக பளை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற போது சிறு சத்திர சிகிச்சை செய்யப்பட்டு ஷெல் சிதறல் அகற்றப்பட்டது.

பளை, முல்லையடியைச் சேர்ந்த ப.பகீரதன் (வயது - 25) என்னும் இளைஞரின் தொடையிலிருந்து இவ்வாறு ஷெல் சிதறல் அகற்றப்பட்டது. (201-207)

## முயற்சி...





வெற்றி: தினக்குரல் பிரதம ஆசிரியர் வி.தனபாலசிங்கம் எழுதிய 'ஊருக்கு நல்லது சொல்வேன்' நூல் வெளியீட்டு விழா கடந்த 05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தமிழ் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றபோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துஞ்சினோர்க்கு வரமருளும் யாழ். மரியன்னை பேராலயம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

1837 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவ்வாலயத்தில் உருவாக்கப்பட்ட திருப்பணிச் சங்கம் ஆலயத் திருப் பணிகளில் ஈடுபட்டு வந்தது.



இக்காலத்தில் இலங்கை முழுவதும் ஒரே ஆயரின் கீழ் நிர்வகிக்கப்பட்டுவந்தது. 1845 ஆம் ஆண்டு இலங்கைத் தீவு கொழும்பு மறை மாவட்டம், யாழ்.மறை மாவட்டமென இரு பகுதியாகப் பிரிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் முதலாவது ஆயராக 1846 ஆம் ஆண்டு ஒறாசியோ வெற்றக்கினி ஆண்டகை நியமிக்கப்பட்டார்.


பழைமை வாய்ந்த கோவா கட்டட முறைப்படி அமைந்திருந்த ஆலயத்தில் பதிவான சுவர்களும், நடுப்பகுதியில் இரண்டு வரிசை மரத் தூண்களும் அமைந்திருந்தன. இந்த அமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டு புதிய மரத்தூண்கள் நாட்டப்பட்டன. அகற்றப்பட்ட மரத் தூண்கள் புதுமை மாதா ஆலயத்திற்கு வழங்கப்பட்டன. இப்பணிகளை 1852 வரை திருப்பணிச் சங்கம் ஆற்றிவந்தது.

பரிமேலர்சவிரிமுத்து முதலியாரின் முயற்சியால் முற்றுப்பெறாதிருந்த முகப்பு மண்டபமும், சுற்றுமதில் பகுதிகளும் 1868-1882 காலப் பகுதியில் கட்டப்பட்டன. 1876 ஆம் ஆண்டு ஐரோப்பாவில் இருந்து அழகான மாபிள் நற்கருணைப் பேழை கொண்டுவரப்பட்டது. பீடத்தின் இரு மருங்கிலும் வானதூதர்களின் சொரூபங்கள் அமைக்கப்பட்டன.

அருட்திரு. யோண் அலோசியஸ் அடிகள் பேராலய பங்குத்தந்தையாக இருந்தபோது 1894 ஆம் ஆண்டு ஆலய நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. அப்போது ஆலயத்தில் இடநெருக்கடி தோன்றியது. பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப ஆலயம் விஸ்தரிக்கப்பட வேண்டிய தேவை உணரப்பட்டது.

யாழ்.ஆயராக ஹென்றி ஜீலன் பணியாற்றியபோது (1893-1919) நான்கு மணிகளைக் கொண்ட புதிய மணித்தொகுதியை ஐரோப்பாவிலிருந்து தருவித்து 1901-1904 காலப்பகுதியில் வழங்கினார். அவற்றிற்கு அமலமரித் தியாகிகள் சபையின் யாழ். ஆயர்களின் பெயர்கள் வைக்கப்பட்டன. ஸ்ரேபனா (செமாரியோ) கிறிஸ்தோபரா (பொன்ஜின்) அந்திரியா (மெலிசன்) ஹென்றிக்கா (ஜீலன்) என அழைக்கப்பட்டது. முன்னர் இங்கிருந்த பெரிய மணி மடுத் திருப்பதிக்கும் சிறியது நல்லூர்ப் பங்கிற்கும் வழங்கப்பட்டன. இந்த நான்கு மணிகளும் விசேட தினங்கள், சடங்குகளின் போது ஒலிக்க வைப்பது இன்று வரை வழமையாகப் பின்பற்றப்படுகிறது.

இயேசுவை இவ் உலகிற்கு அளித்த அன்னை மரியாள் வீற்றிருந்து வேண்டுவோர்க்கு வரமருளி வருகிறாள். கோயில்களுக்கெல்லாம் தாய்க்கோயிலாக விளங்குவதோடு பெரிய கோயில், ஆசனக் கோயில், கொஞ்சேஞ்சி மாதா கோயில் எனப் பலவாறு அழைக்கப்படுகிறது. அடியார்களின் துன்பவேளைகளில் துணைக்கரம் நீட்ட மரியாள் தவறுவதில்லை. 1815, 1855, 1877 ஆம் ஆண்டுகளில் வைசூரி,பேதி முதலிய கொள்ளை நோய்களால் மக்கள் வாடிய வேளை இங்குள்ள பெரிய திருச்சொரூபம் வீதிகளூடாக எடுத்துவரப்பட்டதையடுத்து நோய்கள் நீங்கியதாக வரலாறு கூறுகிறது.



இவ்வாலயம் 130 ஆண்டுகள் கடந்தபோது 1924 ஆம் ஆண்டு மேதகு அல்பிரட் கியோமார்(O.M.I) ஆண்டகை யாழ். ஆயராகப் பொறுப்பேற்றார். ஆலயங்கள், பாடசாலைகள், குருமனைகள், அநாதை இல்லங்களை நிறைய அமைத்ததினால் 'கட்டடம் கட்டும் ஆயர்' என இவர் அழைக்கப்பட்டார். பெருகிவரும் சனத்தொகையின் பொருட்டும் ஆலயம் சேதமடைந்து வருவதையடுத்தும் விசாலமான உறுதிமிக்க புதிய ஆலயத்தை அமைக்க எண்ணி 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 8 ஆம்திகதி அடித்தளமிட்டார். சிலுவை வடிவில் பிரமாண்டமான ஆலய வரைபடம் தயாரிக்கப்பட்டது.

1953இல் ஆயர் மேதகு எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகையின் காலத்தில் பேராலயத்தின் பெரும் பகுதி இடிக்கப்பட்டு நடுப்பகுதி மட்டும் இயங்கிவந்தது. 1973 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற ஆயர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆலயத்தின் இடநெருக்கடியை உணர்ந்து முழுவீச்சில் செயற்பட்டார். ஆயரின் நம்பிக்கைக் கனவை நனவாக்கிய பெருமையும் பங்குத்தந்தையாகப் பணியாற்றிய செயல்திறனும் விவேகமும் கொண்ட அருட்திரு. ஜே.பி.ஈ செல்வராஜா அடிகளையே சாரும். சர்வதேச மட்டத்திலும் தேசியமட்டத்திலும் நிதி சேகரிப்புகள் இடம்பெற்றன. கருதினால்மார்களான சைமன் லூர்து சாமி, ஆஞ்செலோ றொன்ஸி, சுவிற்சலாந்து மென்சிங்கன் திருச்சிலுவைக் கன்னியரான அருட்சகோதரி கிளாரா ஆகியோரின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கது.

சிறந்த ஆலயக் கட்டடக்கலை மற்றும் வரைபட நிபுணராகிய அருட்திரு. ஏ.எச் வேதநாயகம்(O.M.I) அடிகளாரின் சீரமைக்கப்பட்ட வரைபடத்தின்படி 1976 இல் மீள•ஆரம்பிக்கப்பட்ட கட்டடப்பணி 1982 இல் நிறைவு பெற்றது. மூன்று பக்கங்களிலும் 'பல்கனி' வசதிகளைக் கொண்டதும், உயர்ந்த நடுக்கோபுர அழகுடையதுமான இவ்வாலயம் இலங்கையில் மிகவும் விசாலமான 35000 சதுர அடி பரப்பைக் கொண்டு அதிகளவு மக்கள் பங்கு பற்றக் கூடிய சிலுவை வடிவிலான ஆலயம் என்னும் சிறப்பைக் கொண்டுள்ளது. (வளரும்)

# வளர்ச்சி - வீழ்ச்சி -மீளெழுகையுறும் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி

யாழ்.நகரை அண்மித்த பெரும் பிரதேசம் முஸ்லிம் மக்களின் வாழ்விடமாகப் பல நூற்றாண்டுகளாக விளங்கி வருகிறது. வர்த்தகத் துறையைப் பிரதான தொழிலாகக் கொண்ட பலநூறு குடும்பங்கள் தமக்கேயுரிய கலை, கலாசார விழுமியங்களுடன் தமிழ் பேசும் முஸ்லிம்களாகச் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றார்கள். சமூகச் செயற்பாடுகளிலும், கல்வி, அரசியல் துறைகளிலும் தமிழ் மக்களுடன் கைகோர்த்து தம்மை அடையாளப்படுத்தி உழைத்து வருகின்றார்கள்.



சமூகத்தின் உயர்வுக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் அடித்தளமிடுவது கல்வித்துறையே. இந்த வகையில் யாழ். முஸ்லிம் மக்களின் கல்வி, சமய, ஒழுக்க நெறிகளை வளர்த்தெடுப்பதில் முஸ்லிம் பகுதியில் உள்ள ஒரே ஒரு உயர்நிலை முஸ்லிம் பாடசாலையாக யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி திகழ்கிறது.

இப்பகுதி மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கென சில ஆரம்பப் பிரிவுப் பாடசாலைகள் அக்காலத்தில் இயங்கிவந்தன. இருந்தாலும் உயர் வகுப்புக் கல்வியை மேற்கொள்ள நகரின் இதர பாடசாலைகளுக்குச் செல்லவேண்டிய நிலை காணப்பட்டது. முஸ்லிம் மாணவர்களின் மத, கலாசார தனித்துவங்களைப் பாதுகாக்க தனியான உயர்வகுப்புக் கல்விக் கூடத்தின் தேவை அன்றைய சமூகப் பெரியார்களினால் உணரப்பட்டது.

தொகுப்பு:

**எஸ்.யேசுதாஸ்**

யாழ். கோட்டை முற்றவெளியில் 1931 ஆம் ஆண்டு மீலாதுன் நபி விழா நடைபெற்றது. அந்த மேடையில் உரையாற்றிய கொழும்பு ஸாகிராக் கல்லூரியின் அரபுமொழி விரிவுரையாளராகக் கடமையாற்றிய மௌலவி மர்ஹூம் றவூப் பாச்சா முஸ்லிம்களுக்கென உயர்தரக் கல்லூரி தேவையென வலியுறுத்தினார். அவர் இட்ட விதை யாழ்.முஸ்லிம் பிரமுகர்களின் செயலில் முளை விடத் தொடங்கியது. இப்பணியை முன்னெடுக்க அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் குவாஸி மர்ஹீம், ஏ.எம்.சுல்தான் தலைவராகவும், கிராமஅலுவலர் ஜனாப் எஸ்.ஏ.றஸீன் செயலாளராக வும், வர்த்தகப் பிரமுகர் அல்ஹாஸ் வீ.எம்.எம்.எஸ்.அப்துல் காதர் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுடன் எம்.அப்துல் மஜீத், எம்.மீரான் முஹிதீன், எஸ்.எம்.முஹிதீன், எம்.எஸ்.லெப்பை, எம்.எஸ்.மதார் ஆகியோரும் இடம்பெற்றனர்.

கல்லூரிக்கான நிலத்தைப் பெறுவதற்காக வெள்ளிக்கிழமைகள் தோறும் பள்ளிவாசல்களில் நடைபெறும் ஜும் ஆ தொழுகையின் பின்னர் மக்களிடமிருந்து பணம் திரட்டப்பட்டு வந்தது. சிறுதுளி பெருவெள்ளமென இறை நம்பிக்கை உணர்வுபூர்வ தியாகத்துடன் அனைவரும் பங்களித்தனர். இப்பணிகளில் எம்.ஐ.எம்.மீரா சாஹிப் ஹாஜியாரும் இணைந்து கொண்டார்.

வர்த்தக பெருமக்களின் தாராள உதவியும் மக்களின் பங்களிப்பும் காத்திரமானதாக அமைந்தன. பலரது தரிசு நிலங்களும் குடியிருப்புகளும், தென்னந்தோட்டங்களுமாக பல ஏக்கர் காணி பாடசாலைக்கென கொள்வனவு செய்யப்பட்டது.

முஸ்லிம் பகுதியில் முஸ்லிம் மாணவர்களுக்கென உயர்தரக் கல்லூரி இல்லையே என்னும் ஆதங்கத்தை போக்கும் வகையில் 1959 ஆம் ஆண்டு மே




மாதம் 3 ஆம் திகதி கனவு பலிக்கும் நாளானது. அல்ஹாஜ் டாக்கர் மர்ஹீம் ரீ.பீ. ஜாயா அவர்களால் ''அல்லாஹீ அக்பர்'' என்னும் இறைகோஷம் முழங்க அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. வைத்தியலிங்கம் கம்பனியினர் ஒப்பந்த அடிப்படையில் பாடசாலைக் கட்டடத்தை அமைத்தனர்.

நான்கு வருடங்களில் கல்லூரியின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தன. அப்போதைய கல்வி அமைச்சராக இருந்த அல்ஹாஜ் பதியுதீன் மஹ்றூத் ஒஸ்மானியாக் கல்லூரி எனும் நாமம் சூட்டடினார். 1963 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி சிறப்பாகத் திறந்து வைக்கப்பட்டது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேல் நீதிமன்றம் யாழ்ப்பாணம் கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தின் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக கேள்விப்பத்திரங்கள் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் தமது நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும் மேல் நீதிமன்ற ஆணையாளர், மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 22.12.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக சீலிடப்பட்ட உறையில் வைத்துக் கையளித்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் நீதிமன்ற வளாகச் சுத்திகரிப்புப் பணிக்கான கேள்விப் பத்திரம் என தவறாது குறிப்பிடுதல் வேண்டும். ஏனைய நிபந்தனைகள் பின்வருமாறு.

* சுத்திகரிப்புப் பணிக்காக ஒரு மேற்பார்வையாளர் உட்பட மொத்தம் 10 பேர் சேவையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். இதில் 4 பேர் பெண்களாக இருத்தல் வேண்டும்.
* 7.30 மணியிலிருந்து 3.30 மணிவரை பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும்.
* சுத்திகரிப்புக்குரிய உபகரணங்கள், ஏனைய மூலப் பொருள்கள் யாவும் தங்களால் விநியோகிக்கப்படல் வேண்டும்.
* ஞாயிறு, பொது விடுமுறை தவிர்ந்த ஏனைய நாள்கள் கடமை நாள்களாகக் கருதப்படும்.

இது தொடர்பாக மேலதிக விவரங்கள் தேவைப்படின் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப்பதிவாளருடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

கு. பரமராஜா, தலைவர்,
மேல் நீதிமன்ற கேள்விச்சபை,
மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

## திருவெம்பாவை உற்சவம்

யாழ்ப்பாணம், டிசெ. 13

வட்டுக்கோட்டை - தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலய திருவெம்பாவை உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 5 மணிக்கு கும்பப்பூசையுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் சுவாமி உலாவரும் காட்சியும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 4 மணிக்கு நடராஜப் பெருமானுக்கு அபிசேகம் நடைபெற்று ஆலய பித்தர் கேணியில் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ற)

## போரில் பாதிப்புற்ற...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

* பொருளாதார அபிவிருத்தியினதும் சுதந்திரத்தினதும் உண்மையான நன்மைகளை அனுபவிக்க, நிலையான சமாதானம் அவசியமாகும்.

மூன்று தசாப்தகாலமாக நடைபெற்ற நீண்ட யுத்தம் தற்போது நின்றுள்ளது. 2010 ஜனாதி பதி தேர்தலிலின் பின் நாடாளுமன்றத் தேர்தலில் நாடாளுமன்றின் 225 உறுப்பினர்களில் 144 ஆசனங்களைப் பெற்று வெற்றிபெற்ற நிலையில், தற்போது முஸ்லிம் காங்கிரசின் ஆதரவும் பெற்று மூன்றில் இரண்டு பெரும் பான்மையுடன் சர்வ வல்லமையுடன் நிற்கும் ஜனாதிபதிக்கு தமிழ்தேசியக் கூட்ட மைப்பினரும் பச்சை விளக்கு காட்டுகின்றனர். இச்சந்தர்ப்பம் மீண்டும் ஒரு முறைவரப்போவதில்லை. எனவே இனப்பிரச்சனைக்கான நல்ல தொரு நிரந்தரத் தீர்வை ஜனாதிபதி இப்போது முன்வைக்க வேண்டும். அவ்வாறு அவர் முன்வைப் பதற்கான மனப்பக்குவத்தையும் துணிவையும் வ்ழங்கி எல்லோரும் இன்புற்றிருக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டும்.

''மாற்றங்கள் வேண்டும்; மனமாற்றங்கள் வேண்டும்''

நேற்று என்பது உடைந்த பானை
நாளை என்பது மதில்மேல் பூனை
இன்று என்பது கையிலுள்ள வீணை''

எனவே விரைந்து செயற்படுவாரா ஜனாதிபதி? (முற்றும்)


## பிரத்தியேக கணித வகுப்பு

தனியாக அல்லது குழுவாக Gr. 09 - 10, O/L, A/L
K.S. காந்தன்
தொடர்பு: 0770878734

## கோழிக் குஞ்சு விநியோகம்

BAIRAHA No.1 புறொயிலர் குஞ்சுகள் 15.12.2010 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும்.
★ ராஜின் நவாலி வீதி,
ஆனைக்கோட்டை,
தொ.பே. 0776090926
0212222867

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No. 1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள் நியாயமான விலையில் 16.12.2010 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.
(பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்)
நல்லூர் பாம் சென்ரர்.
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6944

ஃபுபே செட்
வீட்டுக்கும்
மற்றும்
ஹோட்டலுக்கு

ரூபா 3950/-யிலிருந்து
[illegible]
2439422


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம்**

தோற்றம் 05.07.1945 மறைவு 05.12.2008

எம்மோடு நீங்கள் வாழ்ந்த பசுமை நினைவுகள்
என்றும் எமது உள்ளத்தில் நிலைகொள்ளும்
உமது ஆத்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

திக்கரை, களபூமி, காரைநகர்.
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2181 திகதி 11-12-2010

ஆங்கில எழுத்திற்கும் M
வெற்றி எண்கள் 03 12 49 55
போனஸ் இல: 52

ஜக்பொட் பரிசு ரூ. 26,092,550/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 178580 | 20/- | 3,571,600/- |
| 2 இல | 12820 | 100/- | 1,282,000/- |
| 3 இல | 264 | 1,000/- | 264,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7276 | 40/- | 291,040/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 512 | 1,000/- | 512,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 07 | 10,000/- | 70,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 26,092,550/- | - |
| 1 இல + போனஸ் இல | 8570 | 100/- | 857,000/- |
| 2 இல + போனஸ் இல | 398 | 500/- | 199,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 309 | 200/- | 61,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 24 | 1,500/- | 36,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| மொத்தம் | | | 8,794,440/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 208777 | | 9,394,440/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| நுவரேலியா | 302623093-0-39 |
| கொழும்பு | 302623918-6-02 |
| மொணராகலை | 302619321-8-10 |
| மாத்தளை | 302622543-4-43 |
| மாத்தறை | 302621346-3-15 |
| கொழும்பு | 302624020-0-01 |
| இரத்தினபுரி | 302624904-3-21 |
| பொலன்னறுவை | 302624537-7-23 |
| மட்டக்களப்பு | 302641573-2-29 |
| கம்பஹா | 302624492-4-20 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 26,580,600/-

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

## ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் - 81
திகதி - 11.12.2010
ஜாதிக சம்பத Jathika Sampatha
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: E
அதிர்ஷ்ட இலக்கம்: 02
வெற்றி இலக்கம்: 1 4 4 0 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | E 02 1 4 4 0 2 | ரூ. 24,365,426.00 | - |
| 1 பரிசு | 02 1 4 4 0 2 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 1 4 4 0 2 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | 4 4 0 2 | ரூ. 10,000.00 | 27 |
| 4 பரிசு | 4 0 2 | ரூ. 1,000.00 | 252 |
| 5 பரிசு | 0 2 | ரூ. 50.00 | 2443 |
| 6 பரிசு | 2 | ரூ. 20.00 | 23617 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசு | 1 4 4 0 | ரூ. 1,000.00 | 26 |
| 8 பரிசு | 1 4 4 | ரூ. 100.00 | 250 |
| 9 பரிசு | 1 4 | ரூ. 50.00 | 2478 |
| 10 பரிசு | E | ரூ. 20.00 | 9759 |
| 11 பரிசு | E 02 | ரூ. 100.00 | 1082 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,794,770.00

தேசிய லொத்தர் சபை
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ. 24,365,426.00


## இதயம் மறவா 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**இராசரத்தினம் பாக்கியம்**

மலர்வு: 07.08.1932
உதிர்வு: 08.12.2005

திதி: பூர்வபட்ச அட்டமி
(13.12.2010) திங்கட்கிழமை

அன்பின் திருவுருவே! பாசத்தின் பிறப்பிடமே!
பண்பின் சிகரமே! அணையா விளக்கே!
விரைந்தோடிச் சென்று ஐந்தாண்டு ஆனதம்மா
புன்னகை மாறாத உன் திருமுகம்
நெஞ்சம் நிறைந்து நிற்குதம்மா
பெருமை மிகும் நின் குணத்தை எம்
நெஞ்சமதில் நித்தமும் நினைத்திருப்போம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
மலர் வாசம்
மகாஜனக் கல்லூரி வீதி, தெல்லிப்பழை [illegible]

தற்காலிக முகவரி:
இல.43/, சிவப்பிரகாசம் வீதி,
[illegible] நாச்சிமார் கோவில், [illegible]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பூவுலகில் 23.11.1956
இறைவனடியில் 13.11.2010



### அமரர் கந்தையா வேல்முருகு

(பொது முகாமையாளர், புலோலி. ப.நோ.கூ.சங்கம்)

13.11.2010 இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தையா வேல்முருகு அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோர்களுக்கும், மலர்வளையம் வைத்தோருக்கும், தொலைபேசிமூலமாக அனுதாபம் தெரிவித்தோர்களுக்கும், அஞ்சலிப்பிரசுரங்கள் பிரசுரித்தவர்களுக்கும் அனைத்து உதவிகள் வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (13.12.2010) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

★ இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுகொள்ளவும்.

புற்றளை, புலோலி தெற்கு, புலோலி.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனையில் தூக்கில் தொங்கிய நிலையில் மின்அத்தியட்சகர் சடலமாக மீட்கப்பட்டார்

கல்முனை, டிசெ.13

கல்முனையில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையின் கட்டடத்திலிருந்து ஆணொருவரின் சடலம் கடந்த வெள்ளிக்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

குறித்தசடலம் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

கல்முனை பாண்டிருப்பைச் சேர்ந்த பிரேமதாச (வயது - 53) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் இலங்கை மின்சாரசபையின் கல்முனைப் பிரிவில் கடமையாற்றும் சிரேஷ்ட மின் அத்தியட்சகர் ஆவார். இவருக்கு 27 வயதில் ஒரு புதல்வரும், 24 வயதில் ஒரு புதல்வியும் உள்ளனர்.

பாண்டிருப்பு பொலிஸ் சோதனைச் சாவடிக்கு அருகிலுள்ள கட்டடமொன்றிலிருந்தே, தூக்கில் தொங்கிய நிலையில் மேற்படி நபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையினர் பாண்டிருப்பு பொலிஸ் சோதனைச் சாவடிக்கு அருகிலுள்ள மேற்படி கட்டடத்தைத் தமது கல்முனை அலுவலகத்துக்காக வாடகைக்குப் பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்தக் கட்டடத்தை இலங்கை மின்சார சபையினர் வாடகைக்குப் பெற்றிருந்த போதிலும், கல்முனை மின்சார சபைக் காரியாலயம் இந்தக் கட்டடத்தில் இன்னும் உத்தியோக பூர்வமாக இயங்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இது கொலையா அல்லது தற்கொலையா என்பது தொடர்பில் கல்முனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் தற்போது கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஶ)

## வெள்ளத்தில் மூழ்கும் வீதிகள்....




அவலம்:கிண்ணியாவில் தற்போது பெய்து வரும் அடைமழை காரணமாக பல வீதிகள், பாடசாலைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றதோடு அவர்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.கிண்ணியா பகுதி வெள்ளக்காடாகக் காட்சிதருகிறது.

# களுவாஞ்சிக்குடியில் படையினர் சோதனை

மட்டக்களப்பு, டிச.13

களுவாஞ்சிக்குடியில் கடந்த வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாகவும் விசேட அதிரடிப் படையினர் பயணிகள் மத்தியில் பரிசோதனைகளை மேற்கொண் டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தம் நடைபெற்று முடிவடைந்த பின்னர் இவ்வாறான சோதனைக் கெடுபிடிகள் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும்.

கடந்த யுத்தகாலத்தில் இது போன்ற சோதனை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்றுவந்தன. தற்போதைய சோதனைகளால் கடந்த காலங்களில் ஏற்பட்ட அச்ச நிலைக்கு மீண்டும் தள்ளப்பட்டுவிடுவோமோ என்ற பீதி களுவாஞ்சிக்குடி பகுதி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. (ஶ)




# சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதியுதவி

திருகோணமலை,டிசெ.13

மூதூர் பிரதேசத்தில் யுத்தம் மற்றும் சுனாமியினால் பாதிக்கப்பட்ட 50 வறிய குடும்பத்தினருக்கு சிறுகைத்தொழில் மற்றும் குடிநீர்வழங்கும் பொருட்டு கிணறு கட்டுவதற்கு தலா 50,000 ரூபா ஊக்குவிப்புத் தொகை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

மூதூர் பிரதேச செயலகத்தில் முதற்கட்டமாக இடம் பெற்ற வைபவத்தில் ஆரம்ப கட்ட நிதியாக ரூபா 25 ஆயிரத் துக்கான காசோலை வழங்கப்பட்டது. (204)

# ஏறாவூரில் ரயில் மோதி ஓட்டோ சாரதி பலி

மட்டக்களப்பு, டிசெ.13

ஏறாவூர் மிக் நகர் வீதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் ஓட்டோவொன்று ரயிலுடன் மோதியதால் ஓட்டோ சாரதி ஸ்தலத்திலேயே பலியானார்.

ஏறாவூரைச் சேர்ந்த எஸ்.எல். ரஷின் (வயது - 19) என்பவரே பலியானவராவார்.

இந்த ஓட்டோ, ரயிலால் 300 மீற்றர் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது. இறைச்சிக்கடை ஒன்றின் கழிவுப்பொருள்கள் ஏற்றப் பட்டிருந்த ஓட்டோவில் இரு பயணிகளும் பயணித்துள்ளனர். ஆனால் அவர்கள் பாய்ந்து தப்பியுள்ளனர் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பிலிருந்து மாஹோ நோக்கிச் சென்று கொண்டிருந்த சரக்கு ரயிலே கடந்த வெள்ளிக்கிழமை மு.ப 11.25 மணியளவில் ஓட்டோ மீது மோதியுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஶ)

# உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட விரும்புவோரிடம் விண்ணப்பங்களை எதிர்பார்க்கிறது ம.ம.முன்னணி

கொழும்பு, டிசெ.13

நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் மலையக மக்கள் முன்னணி சார்பில் போட்டியிட ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பங்களை அனுப்பலாம் என அதன் பொதுச் செயலாளர் அ.லோறன்ஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அனுப்பிய செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான ஆட்சிக்காலம் முடிவடைந்துள்ள நிலையில், மிக விரைவில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறலாம்.

எனவே, இதில் போட்டியிடுவதற்காக பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டுமென்று முன்னணியின் அரசியல் உயர்பீடம் தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் முன்னணி சார்பாகப் போட்டியிட விரும்புவோர், கட்சியின் தலைமையகமான ''இல.279, மல்லியப்பு பசார், ஹற்றன்'' என்ற விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

கட்சி அங்கத்தவர்கள், சமூக ஆர்வலர்கள், புத்திஜீவிகள், வர்த்தகர்கள் எனப் பலரும் விண்ணப்பங்களை அனுப்பலாம்.

விண்ணப்பதாரிகள் ம. ம. முன்னணியின் கொள்கைகளை ஏற்றுச் செயல்படக்கூடியவர்களாகவும், மலையக மக்களுக்கும், ஏனைய சமூகங்களுக்கும் சேவையாற்றுவதில் ஆர்வமுள்ளவர்களாகவும், கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.அதேவேளை, தேர்தலுக்கு முகம் கொடுக்கக் கூடிய பொருளாதார வலுஉள்ளவர்களாகவும் இருக்கவேண்டும் - இவ்வாறு லோறன்ஸ் குறிப்பிட்டுள்ளார். (ஶ)




# கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் தொழிலாளர்கள் மீது நுவரெலியாவில் தோட்ட நிர்வாகங்கள் கெடுபிடி

நுவரெலியா, டிசெ.13

நுவரெலியா மாநகர சபைக்குட்பட்ட தோட்டங்களில் கடந்த ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பண்ணையாளர்கள் நாளாந்தம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர் - என இ.தொ.கா நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் எம்.சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

நுவரெலியா தோட்டப்புறங்களில் கால்நடை வளர்ப்பாளர்கள் சாணத்தை வெளியேற்ற பொதுவான இடங்கள் ஒதுக்கப்பட்டதால் பசளைக்காக அதனை சேமிக்கின்றார்கள்.

ஆனால் தோட்ட நிர்வாகம் சாணம் சேமிப்பதற்கு ஆட்சேபனை தெரிவிக்கின்றது. அதனை மீறுவோர் பொலிஸாரால் கைது செய்யப்படுகின்றனர். இங்கு இவர்களுக்கு 3,000 தொடக்கம் 5,000 ரூபா வரை அபராதம் விதிக்கப்படுகின்றது.

இந்தப் போக்கை தோட்ட நிர்வாகம் உடனே கைவிட வேண்டும். இவ்விடயம் கால்நடை வள மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதையடுத்து இன்று திங்கட்கிழமை தோட்ட நிர்வாகங்களுடன் இது சம்பந்தமாக பேச்சு நடத்தப்படும் - இவ்வாறு சந்திரன் குறிப்பிட்டுள்ளார். (ஶ)

# நாவலப்பிட்டி நகரசபைத் தலைவரின் மனைவியிடம் 12 லட்சம் கொள்ளை

### சந்தேக நபருக்கு பொலிஸார் வலை வீச்சு

நாவலப்பிட்டி நகரசபைத் தலைவர் நிஷாந்த ரணசிங்கவின் மனைவியிடமிருந்து கடந்த வெள்ளிக்கிழமை சுமார் 12 லட்சம் ரூபா பணம் இனந்தெரியாத ஒருவரால் கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் ஓட்டோ ஒன்றின் மூலம் நாவலப்பிட்டி இலங்கை வங்கிக்கு வந்துள்ளார். வங்கியில் 12 லட்சம் ரூபா பணத்தை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தபோது இனந்தெரியாத நபர் ஒருவர் பணப்பையைப் பறித்துக்கொண்டு ஓடியுள்ளார். நாவலப்பிட்டி பொலிஸார் நகரெங்கும் தீவிர சோதனைகளில் ஈடுபட்டனர். எனினும் சந்தேக நபர் அகப்படவில்லை. சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார் என்றும் அவரைத் தேடிப்பிடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (ஶ)

# அம்புலுவாவ மலைக்குன்றில் நிலவும் கடும் குளிரால் கை,கால்கள் விறைத்து சுயநினைவிழந்த மாணவர்கள்

### 18 பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு

கம்பளை, டிசெ.13

கம்பளை,அம்புலுவாவ மலைக்குன்றினைப் பார்வையிடுவதற்காகச் சென்ற பாடசாலை மாணவர்களில் 18 பேர் கடும் குளிர் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு சுய நினைவை இழந்த நிலையில் கம்பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது. வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் உடல் நிலை தற்போது தேறி வருகின்றது என கம்பளை வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் சரத்வீரபண்டார தெரிவித்தார்.

எம்பிலிபிட்டிய பாடசாலையொன்றிலிருந்து கம்பளை நகருக்கு சுற்றுலா சென்ற மாணவர்கள் சிலர் அம்புலுவாவ மலைக் குன்றையும் பார்வையிடச் சென்றுள்ளனர்.

இவர்கள் மாலை வேளையில் சென்றுள்ளனர். அங்கு நிலவிய கடும்குளிர் காரணமாக 18 மாணவர்கள் சுய நினைவற்று கை, கால்கள் விறைத்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இம்மாணவர்களுக்கான தீவிர சிகிச்சைகள் வழங்கப்பட்டதையடுத்து அவர்களின் உடல் நிலை தற்போது தேறி வருகிறது என வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஶ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பொது அறிவுக்கு சில...

| | |
|---|---|
| நாட்டின் அண்ணளவான | |
| சனத்தொகை | - 1,98886000 |
| பொது வீதிகளின் நீளம் | - 11716 கி.மீ. |
| தபால் அலுவலகங்கள் | - 614 |
| உப தபாலகங்கள் | - 3934 |
| முகவர் நிலையங்கள் | - 879 |
| பிரதேச செயலகங்கள் | - 321 |
| மாநகரசபை | - 17 |
| நகரசபை | - 38 |
| பிரதேச சபை | - 256 |
| பாடசாலைகள் | - 10,460 |
| அரச பாடசாலைகள் | - 9,174 |
| தனியார் | - 93 |
| மாணவர் தொகை | - 3,999,323 |
| ஆசிரியர் தொகை | - 215,768 |
| தேர்தல் தொகுதி | - 160 |
| கிராம சேவை அலுவலர் | - 38,253 |

சிலையூர் தனம்

## பிரசித்தி பெற்ற ஏரிகளில்

ஜமுனா ஏரி




யாழ்ப்பாண வைபவமாலையின் கூற்றுப்படி நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி என்ற மன்னனே யமுனா ஏரியைத் தோற்றுவித்ததாக அறிய முடிகிறது. பகர வடிவான இவ்வேரி யாழ்ப்பாணப் பண்பாட்டு வரலாற்றில் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. தற்போதைய இவ்வேரியின் தோற்றமானது ஒல்லாந்தர் காலத்தில் வடிவமைக்கப்பட்டதாகும். கோட்டைக்குரிய சுவர் அமைப்பு முறையிலே இவ்வேரியின் இறுதிவடிவம் ஒல்லாந்தர் காலத்தில் கொடுக்கப்பட்டது. இவ்வேரியிலுள்ள சேறுதூர்வாரி வெளியே எடுக்கப்பட்டபோது இலுப்பை மரத்தினால் செதுக்கப்பட்ட ஓர் அழகிய அம்மன் சிலை வெளிவந்தது. இவ் அம்மன் சிலையானது தற்போது யாழ்ப்பாண அரும்பொருளகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. சங்கிலியன் தோப்பு மக்கள் மத்தியில் ஐதீகமொன்று நிலவுகின்றது. மந்திரிமனைக்கும் அந்த யமுனா ஏரிக்குமிடையே தரைக்குக் கீழாக அமைந்த சுரங்கப் பாதையொன்று புராதன காலத்தில் அமைந்திருந்தது என்ற ஐதீகச் செய்தி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. மந்திரிமனையின் பற்சுவர் ஒன்றுடன் அவ்வாறமைந்த சுரங்கப்பாதையொன்றின் வாயில் மிக அண்மைக்காலம் வரைக்கும் காணப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தங்கை




தங்கை என்தன் தங்கை
தள்ளாடி வரும் தங்கை
தங்க மான தங்கை
தவழ்ந்து வரும் தங்கை.

பட்டுச் சட்டை கேட்டு
புரளி செய்யும் தங்கை
வட்ட நிலவைக் காட்டி,
வாங்கச் சொல்லும் தங்கை.

பாட்டுச் சொல்லித் தந்தால்,
பாடி ஆடும் தங்கை
பாட்டி மடியில் சென்று,
படுத்துக் கொள்ளும் தங்கை.

கி.பிருந்து

# கோலம் தோன்றிய கதை



தண்ட காருண்யத்தில் முனிவர்களுடைய பத்தினிகள் மூலிகை மற்றும் மாவினால் கோலமிட்டுத் தங்கள் பர்ணசாலைகளை அழகுப்படுத்தினர், ஹோலி என்ற பெயருடைய முனிவரின் மனைவி தன் கணவர் இறந்ததும், அவருடைய உருவத்தை பல வகையான வண்ணத்தூள்களை கொண்டு கோலத்தினை வரைந்து நாற்பத்தெட்டு நாள்கள் அக்கோலத்திலேயே படுத்திருந்து தன் உயிரை விட்டாள். ஹோலியின் நினைவாகப் போட்ட கோலம் பல வண்ணங்களால் போடப்பட்டதால் ரங்கோலி (ஹிந்தியில் ரங் என்றால் வர்ணம்) எனப் பெயர் பெற்றது. இன்று முக்கியமான பண்டிகைக்களுக்கும் பரத நாட்டிய நிகழ்ச்சிகளிலும் ரங்கோலி அழகு சேர்க்கிறது. இசையிலுள்ள பலவித இராகங்களை போலவே, பலவித நிறங்களும் உள்ளத்தில் மகிழ்ச்சியை உண்டு பண்ணும் என்ற விஞ்ஞான உண்மையை ரங்கோலி வர்ணக் கோலற உணர்த்துகிறது.

## இரத்தம்பற்றிய சில தகவல்கள்...



* மாத்திரை சாப்பிட்டவுடன் தலைவலி அல்லது கால் வலியிலிருந்து நிவாரணம் கிடைப்பது எப்படி?
மாத்திரை சாப்பிட்டவுடன், அதில் உள்ள மருந்துப் பொருள் இரத்தம் மூலம் வலி உள்ள இடத்துக்குப் பயணம் செய்கிறது. வலியிலிருந்து நிவாரணம் கிடைக்கிறது.

* உடலில் இரத்தம் பயணம் செய்யும் போது எடுத்துச் செல்வது என்ன?
எல்லாத் திசுக்களுக்கும் ஆற்றலை எடுத்துச் செல்லும் முக்கியப் பணியை இரத்தம் செய்கிறது. கொழுப்புச் சத்து, மாவுச்சத்து, புரதம், தாதுப் பொருள்கள் வடிவத்தில் ஆற்றலை அது எடுத்துச் செல்கிறது. திசுக்கள் உயிர்வாழ ஒட்சிசனை எடுத்துச் செல்வதும் இரத்தம் தான்.

(வளரும்)




## சிறுவர் சுடர்

## சிந்தனைத் துளி

* பணமும், வசதி வாய்ப்புகளும் வந்து போகக்கூடியவை. ஆனால் மனித சமூகம் செல்வத்தை தேடி ஓடிக் கொண்டு இருக்கிறது. எனவே வாழ்க்கை பொருளுடைய தாக இருக்க வேண்டு மானால், பொருள் தேடுவதோடு அருளையும் தேட வேண்டும்.
* சுயநலமற்ற சேவை மட்டுமே மனச்சாந்தியைத் தரவல்லது. நமக்குள் இருக்கும் தெய்வீக சக்தியை வெளிக்கொணர்ந்து விடும் ஆற்றலை சேவை கொண்டது.
* தலைவனாக வேண்டும் என்ற எண்ணம் நமக்குள் இருக்குமானால், முதலில் தொண்டனாகச் சேவை செய்யும் அனுபவத்தைப் பெறவேண்டும்.
* எவன் ஒருவன் சுகம், துக்கம் எல்லாவற்றையும் சமமாக எண்ணுகிறானோ அவனே வாழ்வின் உண்மையை உணர்ந்தவன் ஆவான்.
* கடந்த காலம் திரும்புவதில்லை. வருங்காலம் எப்படி இருக்கும் என்று நமக்குத் தெரியாது. நிகழ்காலத்தை நல்ல முறையில் கழிப்பதே அறிவாளியின் செயல்.
* பிறக்கும்போது ஆபரணங்களுடன் பிறப்பதில்லை. ஆனால், முற்பிறவியில் செய்த செயல்களின் வினைப்பயனை அணிந்து கொண்டு வருகிறோம். யாராக இருந்தாலும் இதில் தப்ப முடியாது.

# வாழ்க இராமர்! வாழ்க சீதை!

(தொடர்ச்சி...)

''சாமிக்கு விடை கொடுத்து அனுப்ப வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டே ''வாழ்க இராமர்! வாழ்க சீதை! ஆஞ்சநேயருக்கு ஜே!'' என்று காட்டுக் கத்தலாகக் கத்தினார்கள்.

அவர்கள் கத்துவதைக் கண்ட திருடர்களுக்குப் பொறுமை போய் விட்டது.

''அடப் பாவிகளா! கடைசி நேரத்தில் சத்தம் போட்டு எங்கள் காரியத்தையே கெடுத்து விடுவீர்கள் போலிருக்கிறதே'' என்று திட்டினார்கள்.


''சத்தம் போட்டால் என்ன தப்பு?'' என்று கேட்டான் மடையன்.

குதிரை மீது ஏறிக் கொண்ட திருடர்கள், வண்டியை ஓட்டியபடியே, ''முட்டாள்களே! நாங்கள் இந்தச் சிலைகளைத் திருடிக் கொண்டு போகிறோம். இது கூட உங்களுக்குத் தெரியவில்லையே!'' என்று உண்மையைக் கூறினர்.

அதைக் கேட்டுப் பரமார்த்தருக்கும் சீடர்களுக்கும் ஆச்சரியமாக இருந்தது.

''என்ன? திருடிக் கொண்டு போகிறீர்களா?'' என்றபடி மயங்கி விழுந்தான், முட்டாள்.

''ஐயோ, திருடர்கள்! திருடர்கள்!'' என்று கத்தினான், மட்டி.



அவர்களைப் பிடிப்பதற்குக் குதிரை வண்டியின் பின்னே ஓடிப்போய், கீழே விழுந்து உருண்டான், மடையன்.

பரமார்த்தரோ, அதிர்ச்சியில் சாமிபோல் சிலையாகி நின்றார்.

பரமார்த்தரின் மடத்தருகே வந்ததும், திருடர்கள் வண்டியை நிறுத்தினர். சிலைகளுடன் மடத்துக்குள் சென்றனர்.

உள்ளே மண்டுவும், மூடனும் இருந்தனர்.

''அடேய்! நாங்கள் கொஞ்ச நேரம் இங்கே தூங்கப் போகிறோம். அதுவரை இந்தச் சிலைகளைப் பத்திரமாக வைத்திருங்கள். தூங்கி எழுந்ததும் சிலைகளை எங்களிடமே ஒப்படைத்து விட வேண்டும்'' என்று கட்டளை இட்டனர்.

அவர்களைப் பார்த்துப் பயந்து போன மண்டுவும், மூடனும், சரி என்று சம்மதித்தனர். சிறிது நேரத்தில் திருடர்கள் குறட்டை விட்டுத் தூங்கி விட்டனர்.

''சிலைகளைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டுமே? என்ன செய்வது?'' எனக் கேட்டான் மண்டு.

''நம்மால் காவல் காக்க முடியாது. தொலைத்து விடுவோம். இல்லாவிட்டால் நாமும் தூங்கி விடுவோம். அதனால் நேராக மன்னரிடமே போவோம்'' என்று அரண்மனைக்குப் போனார்கள்.

அரண்மனையில் பரமார்த்தரும் மற்ற சீடர்களும் அழுது கொண்டு இருந்தனர்.

மண்டுவும், மூடனும் சிலைகளுடன் வருவதைக் கண்டு, அரசன் உட்பட அனைவரும் வியப்படைந்தனர். நடந்தவற்றை கேள்விப்பட்ட அரசன், ''சிலைகள் திருட்டுப் போவதற்கு உதவியாக இருந்ததும் நீங்களே! அதனால் தண்டனையும் தராமல், பரிசும் தராமல் அனைவரையும் சும்மா விட்டு விடுகிறேன்'' என்றான். குருவும், சீடர்களும் தப்பித்தால் போதும் என்று அரண்மனையை விட்டு ஓடிவந்தனர்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் ஷியாபோவின் நோபல் பரிசு: அவருக்கு கதிரையில் வைத்து கௌரவிப்பு

## சிறையிலிருந்து அவரை சீனா விடுவிக்கவில்லை

ஆங்லோ,டிசெ.13

சீனாவில் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தி 1989 இல் மாணவர்கள் மிகப் பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். இதை சீனப் பேராசிரியர் லியூ ஷியாபோ (வயது - 54) தலைமை வகித்து நடத்தினார்.

அதை சீனா கம்யூனிஸ்ட் அரசு இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கியது. அவரை கைது செய்து அவருக்கு 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கியது. தற்போது அவர் வட கிழக்கு சீனாவிலுள்ள ஜின்ஷா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. இதற்கு சீன அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. அவருக்கு அறிவிக்கப்பட்ட நோபல் பரிசை வாபஸ் பெற வேண்டும் என வலியுறுத்தியது. இதற்கு நோபல் பரிசுக் குழு மறுத்துவிட்டது.

நோபல் பரிசு வழங்கும் விழா நோர்வேயிலுள்ள ஒஸ்லோ நகர் சிட்டி ஹாலில் வெள்ளிக்கிழமை நடந்தது. 2 மணிநேரம் நடந்த இந்த விழாவில் மற்ற துறைகளுக்கு நோபல் பரிசுகளை அறிவிக்கப்பட்டவர்கள் நேரில் வந்து பெற்றுக்கொண்டனர்.

ஆனால், சீன அரசு சிறையிலிருந்து விடுவிக்காததால் பேராசிரியர் லீயூ ஷியாபோவே விழாவில் பங்கேற்கவில்லை. அவரது ஆதரவாளர்களையும் சீன அரசு அனுமதிக்கவில்லை. பீஜிங்கிலுள்ள அவரது மனைவி லீயூ ஷியாவும் வீட்டுக்காவலில் சிறை வைக்கப்பட்டுள்ளமையால் வரவில்லை.

இந்த விழாவில் சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், ஈரான், வெனிசுலா உள்ளிட்ட 17 நாடுகளின் தூதர்கள், பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை.

அழைப்பிதழ் அனுப்பப்பட்ட 65 நாடுகளில் 46 நாடுகளின் தூதரக அதிகாரிகள் உள்ளிட்ட ஆயிரம் பேர் பங்கேற்றனர். விழா மேடையில் நோபல் பரிசு பெறுபவர்கள், விழா அழைப்பாளர் ஆகியோருக்கு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

இதில், சமாதானத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்ட லீயூஷியாபோவின் நாற்காலியில் அவர் பெயர் எழுதி வைக்கப்பட்டிருந்தது. விழா மேடையின் ஓரத்தில் அவரது உருவப்படம் மாட்டப்பட்டிருந்தது.

விழா ஆரம்பமாகியதும் நோபல் பரிசுக்குரியவர்கள் பெயர் அறிவிக்கப்பட்டது. அவர்கள் பரிசுகளைப் பெற்றுக்கொண்டனர். அப்போது விழாவில் பங்கேற்காத லீயூஷியாபோவின் பெயரை நோபல் பரிசுக் குழுத் தலைவர் தோர்ப் ஜோர்ன் ஜக்லேண்டு அறிவித்தார்.

இதைத்தொடர்ந்து அவருக்கு வழங்கப்படவிருந்த நோபல் பரிசு மெடல் சான்றிதழ், ரூ.5 கோடி பரிசு தொகை ஆகியன காலியாக இருந்த லீயூஷியாபோவின் நாற்காலியில் வைக்கப்பட்டன. அப்போது விழாவில் பங்கேற்ற அனைவரும் எழுந்து நின்று கைதட்டி ஆரவாரம் செய்து அவருக்கு மரியாதை செலுத்தினார்கள்.

விழாவுக்கு வரமுடியாத ஒருவருக்கு 74 ஆண்டுக்குப் பின்னர் இப்போதுதான் இது போன்ற நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1936ஆம் ஆண்டு ஜேர்மனியைச் சேர்ந்த போர் ஒழிப்பு கோட்பாட்டை ஆதரித்த கோர்ல்வன் ஒசியட்ஷ்கி என்பவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

அப்போது அங்கு ஆட்சியிலிருந்த சர்வாதிகாரி ஹிட்லர் அந்தப் பரிசை வாங்க அவருக்கு அனுமதி அளிக்கவில்லை. என்றாலும் அப்போது அவருக்கு இதுபோன்று நோபல் பரிசு வழங்கப்பட்டது.



ஆர்ஜென்டினா ஜனாதிபதி கிறிஸ்டினா பெர்னாண்டஸ் (வலது) வழங்கிய அசுசெனா வில்லாப்லோர் விருதை ஸ்பெயின் நீதிபதி பேல்டசார் கார்சோன்(இடது) பெற்றுக் கொண்டார். மாயோ மனித உரிமை அமைப்புக்காக இது வழங்கப்பட்டது.

# குரோஷிய முன்னாள் பிரதமர் ஆஸ்திரியாவில் கைது

வியன்னா,டிசெ.13

ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்ததை அடுத்து நாட்டை விட்டுத்தப்பியோடிய குரோஷியாவின் முன்னாள் பிரதமர் இவோ சனாடர், ஆஸ்திரியாவில் கைது செய்யப்பட்டார்.

குரோஷியாவின் பிரதமராக இருந்து வந்த சனாடர் (வயது -57) ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்தமையை அடுத்து 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

மேலும் இவர் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளும் உள்ளன. அவரிடம் விசாரணை நடத்த குரோஷிய அதிகாரிகள் முடிவு எடுத்திருந்தனர்.

இந்நிலையில் அவர் திடீரென வியாழக்கிழமை காலை நாட்டை விட்டுத் தப்பியோடிவிட்டார். அவர் அண்டை நாடுகளான ஸ்லோவேனியா அல்லது ஆஸ்திரியாவுக்கு ஓட்டம் பிடித்திருக்கலாம் எனச் சந்தேகம் எழுந்தது.

அவருக்குச் சொந்தமான தொழில் நிறுவனம் ஒன்று ஆஸ்திரியாவில் உள்ளது. எனவே, அவர் ஆஸ்திரியாவுக்குச் சென்று இருக்கலாம் என்றும் கூறப்பட்டது. இதையடுத்து அவருக்கு எதிராக இன்டர்போல் மூலம் சர்வதேச கைது பிடியாணை பிறப்பித்தது குரோஷிய அரசு.

இந்நிலையில் ஆஸ்திரியாவிலுள்ள சால்ஸ்பர்க் - கரீந்தியா நெடுஞ்சாலையில் சனாடர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டு சால்ஸ்பர்க் மாகாண நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார் என குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து குரோஷிய அரசுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் ஆஸ்திரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஆங்கில அறிவை நிரூபித்தால்தான் விசா வழங்கப்படும்: பிரி. அறிவிப்பு

லண்டன்,டிசெ.13

''பிரிட்டனில் குடியேறும் மக்கள், தங்களின் ஆங்கில அறிவை நிரூபித்தால்தான், அவர்களுக்கு விசா வழங்கப்படும்'' என பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

பிரிட்டனில் குடியேறும் மக்கள், பெரும்பாலும் ஆசியாவையும், இதர ஐரோப்பிய நாடுகளையும் சேர்ந்தவர்கள்தான். இவர்கள், ஆங்கிலம் தெரியாத பிற நாட்டு மக்களை திருமணம் செய்து கொள்வதோடு, அவர்களுக்கும் பிரிட்டன் குடியுரிமை பெறுகின்றனர்.

இப்படி பிரிட்டனில் குடியேறும் புதுமணத் தம்பதிகள், ''ஆங்கில பேச்சுத்திறன் இல்லாமல், உள்நாட்டு மக்களுடன் ஒருங்கிணைந்து வாழ முடிவதில்லை. அன்றாட சமூக நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கியே வாழ்கின்றனர். சமூக நல்லிணக்கத்திற்கு, இது பெரும் தடையாக உள்ளது'' என பிரிட்டிஷ் அரசு கருதுகிறது.

இதனால், ''பிரிட்டனில் குடியேறும் மக்களுக்கு ஆங்கில அறிவு அவசியம். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசினால் தான், விசா வழங்கப்படும்'' என பிரிட்டன் அறிவித்துள்ளது.

இதுகுறித்து பிரிட்டிஷ் குடியுரிமைத்துறை அமைச்சர் டாமியன் கிரீன் கூறுகையில், ''பிரிட்டிஷ் விசா கேட்டு விண்ணப்பம் செய்பவர்களுக்கு, ஆங்கில திறனாய்வுத் தேர்வு நடத்தப்படும். தேர்வில் கலந்துகொண்டு, தங்களது மொழி வளமை, பேசும் திறன் ஆகியவற்றை நிரூபித்தால் தான், விசா வழங்கப்படும்.

பிரிட்டனில் படிக்கும், ஆறாம் வகுப்பு மாணவர்களின் பாடத் திட்டத்திலுள்ள சாதாரண கேள்விகள்தான், தேர்வில் இடம்பெறும். இதற்காக, இரண்டு நாள்கள் பிரத்தியேகப் பயிற்சி வகுப்பு நடத்தப்படும்; பயிற்சி கட்டணமும் வசூலிக்கப்படும்'' என்றார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இடம்பெற்றுள்ள நாடுகளில் பிரிட்டனும் ஒன்று. ஐரோப்பிய ஒன்றிய விதிமுறைப்படி, ''உலகின் எந்த நாட்டு மக்களையும், ஐரோப்பியர்கள் திருமணம் செய்து கொள்ளலாம்; அவர்களின் வாழ்க்கைத் துணைக்கும், சம்பந்தப்பட்ட நாட்டின் குடியுரிமை பெற அனுமதி உண்டு. இதற்கு, மொழித் தேர்வு எதுவும் தேவையில்லை'' எனக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதிய அறிவிப்புக்குப் பிரிட்டனில் வசிக்கும் பல நாட்டவர்களும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இதனால், 40 ஆயிரத்துக்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் பாதிக்கப்படுவர். இதில், ஓரினச்சேர்க்கையாளர்களும் அடங்குவர்.



ஸ்பெயின் பிரதமர் ஜோஸ் லூயிஸ் ரொட்ரிக்ஸ் ஸெபட்டெரோ (வலது), ஐரோப்பாவிற்குத் தேவையான நிபுணத்துவம் என்ற பரிசை ஐரோப்பாவின் அதிபர் ஹெர்மன் வான் ரோம்பேக்கு(இடது) கொடுக்கிறார்.

## உலக அரங்கில்

### வெடிகுண்டுத் தாக்குதல் பொதுமக்கள் 15 பேர் பலி!

காந்தகார்,டிசெ.13

ஆப்கானிஸ்தானிலுள்ள காய்ராபாத்தில் வெள்ளிக்கிழமை இரவு வெடிகுண்டு வெடித்ததில் லொறியில் பயணம் செய்து கொண்டிருந்த குழந்தைகள் உட்பட 15 பொதுமக்கள் உயிரிழந்தனர். 4 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டு வழக்கமாக தலிபான்கள் பயன்படுத்துவது என்பதால் அவர்கள்தான் இந்த வன்செயலுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

தாக்குதலில் மாண்டவர்கள் ஹெல்மாண்ட் மாகாணத்தில் சாய்ராபாத் கிராமத்திலிருந்து காண்ஷீன் மாவட்ட மையத்திற்குச் சென்றுகொண்டிருந்தபோது தாக்குதலில் சிக்கியுள்ளனர்.

# 12 மாடிக் கட்டடத்திலிருந்து விழுந்த பெண் உயிர் பிழைப்பு

சிங்கப்பூரில் 12 மாடிக் கட்டடத்திலிருந்து நீச்சல் குளத்தில் விழுந்த சீனாவைச் சேர்ந்த இளம் பெண் அதிசயிக்கத்தக்க விதமாக உயிர்பிழைத்துள்ளார்.

சீனாவைச் சேர்ந்த ஷூ ஷி ஹூய் (வயது - 26) கடந்த ஒரு மாதத்துக்கு முன் பாரில் பணிபுரிவதற்காக சிங்கப்பூர் வந்தார். அங்கு அடுக்கு மாடிக் குடியிருப்பு ஒன்றில் அவர் தங்கியிருந்தார்.

இந்நிலையில் அவருக்கும் அவர் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளருக்குமிடையே சில நாள்களுக்கு முன் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது அவர் 12ஆவது மாடியிலிருந்து தவறிக் கீழே உள்ள நீச்சல் குளத்தில் விழுந்துள்ளார்.

சுமார் 40 மீற்றர் தூரத்திலிருந்து கீழே விழுந்த அவர் அதிசயிக்கத்தக்க வகையில் உயிர் பிழைத்துள்ளார். இந்நிலையில் அவர் தற்கொலைக்கு முயன்றார் எனக் கூறி சிங்கப்பூர் பொலிஸார் ஹூய்யை கைது செய்தனர். அந்நாட்டுச் சட்டப்படி தற்கொலைக்கு முயலுதல் குற்றமாகும்.

# பாகிஸ்தானில் வைத்தியசாலையில் குண்டுத் தாக்குதல்: 20 பேர் மரணம்

பெஷாவர்,டிசெ.13

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் பெஷாவர் அருகேயுள்ள ஹான்கு மாவட்டத்தில் பாஸ்காலே என்ற இடத்தில் புதிதாக வைத்தியசாலை உள்ளது.

இங்கு கட்டட பணியும் நடைபெறுகிறது. அதில் ஏராளமானவர்கள் ஈடுபட்டிருந்தனர். அப்போது தற்கொலைத் தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை ஏற்றி வந்த டிராக்டரை வேகமாக ஓட்டி வந்து கட்டடத்தின் மீது மோதினர்.

டமார் என்ற சத்தத்துடன் அது வெடித்துச் சிதறியது. இதனால் அப்பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்தது. கட்டடம் இடிந்து சேதமடைந்தது. இச்சம்பவத்தில் 20 பேர் பலியானார்கள். அவர்களில் 2 பேர் பெண்கள். 3 பேர் பொலிஸ்காரர்கள்.

இச்சம்பவத்தில் 16 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் ஹாங்கிலும், பெஷாவரிலுமுள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெறுகின்றனர்.

இந்த வைத்தியசாலை ஷியா பிரிவு முஸ்லிம் அறக்கட்டளையினரால் நடத்தப்படுகிறது. அதனருகே அந்தப் பிரிவினரின் மசூதியும் உள்ளது. எனவே இங்கு தீவிரவாதிகள் திட்டமிட்டுத் தாக்குதல் நடத்தியுள்ளனர் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளின் உயர்தரப் பெறுபறுகள்

யாழ்ப்பாணம், டிசெ.13

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சையின் முடிவுகள் அண்மையில் வெளியாகின.

இந்தவகையில் பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப்பட்ட சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை உதயன் தொடர்ச்சியாக வெளியிடவுள்ளது. ஒரு தொகுதி மாணவர் விவரம் வருமாறு:

**யா/வேலணை மத்திய கல்லூரி**

**கலை**

ஏ.நிரோஷன்-ஏபிசி, கே.வாகீசன்-ஏபிசி, எஸ்.லக்ஷனா-ஏபிசி, ஏ.மதன்-2பிசி, எஸ். சங்கீதா- 2பிசி, என். நிஷாந்தினி-ஏ2சி, ஆர்.சிந்துஷா- ஏ2சி, வி.தாட்சாயினி- 2பிஎஸ். பி.சுவிதா-2பிஎஸ், எஸ். அகலிகா- 2பிஎஸ், வி.நிரோஷன்- ஏசிஎஸ், எஸ்.நிரோஷா-ஏசிஎஸ், எஸ்.ரிசங்கா- பி2சி, பி.சர்மிளா-பி2சி,எல். வக்சலா-பிசிஎஸ், ஏ.ரொமென்ஷா -பிசிஎஸ், டி.கிரிஷ்ரினா- பிசிஎஸ், ஏ.சகிலா- பிசிஎஸ்.

**வர்த்தகம்** என்.தரனிதரன்-2பிசி, ரி. குகதாஸ்-பி2சி,

**உயிரியல்** எஸ்.சண்ஜா-3எஸ்

**சென்.ஜோன்ஸ் கல்லூரி**

**கணிதம்** கே.உபமன்யு-3ஏ, எஸ்.கௌசல் யன்- 3ஏ, ஆர்.நிருசன்- 3ஏ, ரி.கஜன்-3ஏ, ரி.சிறோஜன்-3ஏ, பி.அன்துஜன்-2ஏபி, எஸ்- கௌத மன்-ஏ2பி, எம்-அமில்தன்-ஏ2பி, எஸ். சுதர்ராமன்-ஏ2பி, பி.தீபாதரன்-3பி, கே. தனுசன்-ஏ2சி, எம்.துவாரகன்-ஏ2சி, எஸ். தெய்வமைந்தன்-பி2சி, ஜி.சுஜீவன்- ஏசிஏஸ், எஸ்.நிருபரன்-3சி, ரி.சீர் மாறன்-3சி, ரி.பேர்ட்றன் பெடே-3சி, ரி.ஜெய்பிரகாஸ்-3சி, பி.தர்சன்-3சி.

**உயிரியல்**

பி.துசியந்தன்-3ஏ, வி.சிந்துஜன்-2ஏபி, ரி.திவாகர்-ஏ2பி, வி.சித்திராங்கன்- ஏ2பி,வி.சுஜந்தன்-2பிசி, எஸ்.சஜீவன்- ஏபிசி, கே.அரசிளங்குமரன்-பி2சி, ஆர்.விதுசரன்-3சி, கே.பாலமுரளி-3சி, இ.கஜேந்திரா-பி2சி, ஆர்.தெஜஸ்வர்-பிசிஎஸ்.

**வர்த்தகம்**

எஸ்.பிரியதர்சன்-2ஏசி, ஜே.யஸ்ரின் சாந்தன்-ஏபிசி, ஆர்.அபிநயன்-2பிசி, ஏஸ் தனுசன்-2பிசி, கே.சாய்தேவதாஸ்-2பிசி, ஏ.பிரசன்னா-ஏ2சி, எம். ஜெயகாந்-2பிசி, ஆர்.கஜீபன்- 2பிஎஸ், பி.தனுசன்-2பிசி, கே.யோகேஸ்வரன்-2 பிஎஸ். எஸ்.சுதர்கரன்-பி2சி, எம்.சஜன்மாக்கி-பி2சி, எம். அஜந்தன்-2பிஎஸ்

**கலை**

ஏ.டிலக்சன்-3ஏ, வி.ரகுவர்மன்-2பிசி, என்.செந்தூரன்- ஏசிஎஸ், என்.தனரூபன்-பி2சி, ஏ.திவ்யன்-பி2சி, ஏ.டானியல்- பிசிஎஸ், எப்.ஜெகன்-3சி.

**யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி**

**உயிரியல்:** வீ.விஜித்தா-2ஏபி, பா.கிருஷாந்தி- ஏ2சி, கி.றேகா-3எஸ்.

**வர்த்தகம்** க.துஷாரா-பி2சி, ரு.பிரசாத்தி- சி2எஸ்.

**கணிதம்**-பா.மஞ்சுளா-பி2சி

**கலை** பா.பவித்திரா-ஏ2சி, வே.சதீஸ்கரன்-ஏ2சி, எஸ். நியோமி- ஏசிஎஸ், சிந்துஜன்-2பிசி, முகமட் பௌசான்-பி2சி, பியூலா- பி2சி. (201-311)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பாலசிங்கம்



கொக்குவில் கிழக்கு பிரம்படி லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பாலசிங்கம் நேற்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-றோசம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும் கோணேஸ்வரன் (பிரான்ஸ்), ஜீவாஜினி, குகாஜினி (பிரான்ஸ்), கிருபாகரன் (கிரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.12.2010) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*6/8, பிரம்படி லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(107264)

தகவல்:
குடும்பத்தினர்.


## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் - கொழும்பு சேவையில் ஈடுபடும் பேருந்து உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நாரஹேன்பிட்டி கிருள்ள வீதியில் இலங்கைப் போக்குவரத்துச் சபை அலுவலகத்துக்கு முன்பாக சென்வோ அரங்கில் நடைபெறும்.

சங்கம் அமைத்தல் தொடர்பான முக்கிய விடயமாகக் கலந்துரையாடவுள்ளதால் சம்பந்தப்பட்டவர்களை இதில் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (ஒ)

## 41ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 02 ★ 01 ★ 1957



ஆண்டவன் அடியில் 03 ★ 11 ★ 2010

### அமரர் செபஸ்ரியாம்பிள்ளை யோசவ் அரியநேசன்

அன்பின் சிகரமாய் அமைதியின் உருவமாய்
எல்லோருக்கும் நல்லவனாய்
என்றும் புன் சிரிப்புடன்
என்றும் உன் நலன்பாராது
எம் நல்வாழ்வுக்காக
எந் நாளும் வாழ்ந்த
எம் மகனே உன்னை எம்
இதயத்தில் எந்நாளும் நாம் நேசிப்போம்.


எமது அன்பு நேசனின் எதிர்பாராத மறைவால் நாம் கலங்கித் தவித்த வேளையில் பல்வேறு வழிகளிலும் எம்மை ஆறுதல்படுத்திய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக நாளை (14.12.2010) செவ்வாய்க்கிழமை மு.ப.10.30 மணிக்கு பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பற்றிமா கிரி,*
*பண்டத்தரிப்பு.*

(107265)

மனைவி, பிள்ளைகள்,
அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

செல்விவிளவு, இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டியைச் சேர்ந்த

### கணபதிப்பிள்ளை கார்த்திகேசு

அன்னையின் மடியில் 03.08.1928 — ஆண்டவன் அடியில் 13.11.2010

ஈன்றோரைச் சான்றோராக்கி
இல்லை என்ற தொல்லை நீக்கி
இமையாணன் பதிதனிலே
இலக்கணமாய் வாழ்ந்துவிட்டு
இமையளவும் எண்ணாது
எங்கே மறைந்தாயோ?
எங்கள் ஐயாவே!
சிறிமுருகன் அடிசேர
சித்தம் கலங்கியே
நித்தம் வணங்குகிறோம்.

கடந்த 13.11.2010 அன்று சிவபதம் எய்திய எங்கள் குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.12.2010) திங்கட்கிழமை காலை 6மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

★ அழைப்புக் கிடைக்கத் தவறியவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்விவிளவு,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்வர் ஓய்வெடுத்துக் கொள்ளட்டும்; புதிதாக நாங்கள் வந்து ஆளுகின்றோம்

## சிறை மீண்ட அக்கினிப்புயல் சீமான் ஆவேசம்



கொழும்பு, டிச. 13

கலைஞரும் அவர் குடும்பமும் ஆண்டதுபோதும், இனி கருணாநிதி ஓய்வெடுத்துக் கொள்ளட்டும். புதிதாக நாங்கள் வந்து ஆளுகிறோம். நல்ல ஆட்சி எதுவென்று காட்டுகிறோம்.

தேர்தல் நேரத்தில் நான் பேசக்கூடாது என்றுதானே சிறையில் அடைத்தீர்கள். இதோ வந்துவிட்டேன். இனி நான் பேசுவதை யாராலும் தடுக்க முடியாது - உங்களால் தாங்கவும் முடியாது.

- இவ்வாறு சிறையிலிருந்து வெளியே வந்த 'நாம் தமிழர்' கட்சியின் தலைவர் சீமான் ஆவேசமாகக் குமுறியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில், இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசினார் என தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான், நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டார். அவரை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்தது செல்லாது என்று உயர்நீதி மன்றம் கூறிவிட்டதால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

சிறையிலிருந்து வெளியில் வந்த அவர், சிறைக்கு வெளியே அமைக்கப்பட்ட மேடையில் ஏறிப் பேசியவை வருமாறு -

தமிழகத்திலேயே ஜெயலலிதாவும், கலைஞரும் ஒரே ஒரு விவகாரத்தில் மட்டுமே ஒற்றுமையாக உள்ளார்கள். அந்த ஒற்றுமை கொள்ளை அடிப்பதைப் பற்றிப் பேசுவதில்தான்.

வரும் சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸை இல்லாமல் அழிப்பதே எங்கள் நோக்கம். எந்தக் கூட்டணியில் இருந்தாலும் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், ஞானசேகரன் போன்றவர்கள் எங்கே நின்றாலும் தோற்கடிப்போம்.

கார்த்தி சிதம்பரம் சவால் விடுகிறார். கார்த்தி சிதம்பரமே! எங்களுடன் போட்டி போட கார்த்தியாக வா... சிதம்பரத்தை சேர்த்துக்கொண்டுவராதே. காங்கிரஸ் கட்சி என்பது வெள்ளைக்காரன் ஆரம்பித்து வைத்த கட்சி. அந்தக் கட்சியோடு இணைந்து வராதே.

நானோ, திருமாவளவனோ தமிழர்களுக்காக தனித்து ஒரு கட்சியை உருவாக்கினோம். உங்களைப்போல அடுத்தவன் முதுகில் சவாரி செய்யவில்லை.

இதோ வருகிறது தேர்தல். உங்கள் உலகத் தலைவனை ராகுல் காந்தியை அழைத்து வா. போட்டி போடட்டும். மண்ணை கவ்வ வைத்து துரத்தியடிப்போம்.

கலைஞர் குடும்பமே காங்கிரஸை தூக்கிச் சுமக்காதே. பீஹாரிலேயே 4 இடங்களில் மட்டுமே காங்கிரஸால் ஜெயிக்க முடிந்தது. தமிழகத்தில் அந்த இடம் கூட கங்கிரஸுக்குக் கிடைக்கக் கூடாது.

கலைஞரே, உங்கள் குடும்பம் ஆண்டது போதும். பாவம், உங்களது குடும்பம் ஒன்றே தமிழகத்திற்காக எவ்வளவு காலம்தான் உழைத்துக்கொண்டிருப்பது. தயவு செய்து ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள். புதிதாக நாங்கள் வந்து ஆளுகிறோம். நல்ல ஆட்சி எதுவென்று காட்டுகிறோம்.

தேர்தல் நேரத்தில் நான் பேசக்கூடாது என்றுதானே சிறையில் அடைத்தீர்கள். இதோ வந்துவிட்டேன்.

இனி நான் பேசுவதை யாராலும் தடுக்க முடியாது. உங்களால் தாங்கவும் முடியாது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

## ரஜினியின் 61 ஆவது பிறந்தநாள் நேற்று கோலாகலக் கொண்டாட்டம்



சென்னை, டிச. 13

இந்தியத் திரையுலகின் முன்னணி ஸ்டார்களில் ஒருவரான நடிகர் ரஜினி காந்த்துக்கு நேற்று 61 ஆவது பிறந்த நாள்.

இதையொட்டி சில நாட்களுக்கு முன் அவருக்கு அவரது பிள்ளைகள், குடும்பத்தினர் சேர்ந்து மணிவிழாவைக் கோலாகலமாக நடத்தி அழகுபார்த்தனர்.

இந்த நிலையில் நேற்று ரஜினியின் பிறந்த நாளை உலகெங்கும் உள்ள அவரது இரசிகர்கள் கோலாகலமாகக் கொண்டாடினர். இந்த ஆண்டு தனது இரசிகர்களுக்குப் பிறந்த நாள் பரிசாக மிகப் பெரிய பரிசாக 'எந்திரன்' படத்தைக் கொடுத்து குஷிப்படுத்தி விட்டார் ரஜினி.

இரத்ததானம், அன்னதானம், கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளுடன் தங்களது தலைவரின் பிறந்த நாளை ரஜினி ரசிகர்கள் பிரமாண்டமாக கொண்டாடினர்.

பிறந்த நாள் காணும் ரஜினி காந்த்துக்கு அரசியல் தலைவர்கள், பல்துறைப் பிரமுகர்கள், திரைஹ்யுலகினர் உட்பட பல்வேறு தரப்பினரும் தொலைபேசி மூலம் வாழ்த்து தெரிவித்தனர்.

# தூத்துக்குடி - கொழும்பு கப்பல் சேவை இன்னும் இரண்டு மாதங்களில்

சென்னை, டிச. 13

தூத்துக்குடி - கொழும்பு இடையேயான பயணிகள் கப்பல் போக்குவரத்து இன்னும் இரண்டு மாதங்களில் ஆரம்பமாகும் - என்று மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வுகளில் பங்கேற்ற பின்னர் அவர் மேலும் கூறியவை வருமாறு -

சென்னை - எண்ணூர் துறைமுகங்களின் இணைப்பு வீதித் திட்டத்தை விரைந்து முடிக்கும் வகையில் ஆய்வுக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் சென்னை, எண்ணூர் துறைமுகங்களின் பிரதிநிதிகள், தேசிய மற்றும் மாநில நெடுஞ் சாலைத் துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

திட்டத்தை 2013 ஆம் ஆண்டுக்குள் விரைந்து முடிக்க அனைத்துத் தரப்பினரும் உறுதியளித்துள்ளனர். இந்தத் திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபா 600 கோடி. அவற்றில் இதுவரை சென்னைத் துறை முகத்தின் சார்பில் ரூபா 48 கோடியும், எண்ணூர் துறை முகத்தின் சார்பில் ரூபா 8.75 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. இப்போது சென்னைத் துறை முகத்தின் சார்பில் ரூபா 19 கோடியும், எண்ணூர் துறை முகத்தின் சார்பில் ரூபா 5 கோடியும் சனிக்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி - இலங்கை இடையிலான பயணி கள் கப்பல் போக்குவரத்து திட் டத்துக்கு மத்திய அமைச்ச ரவை ஒப் புதல் அளித்துள்ளது. இது தொடர் பான எல்லாப் பணிகளும் முடிந்து அடுத்த 2 மாதங்களுக்குள் போக்குவரத்து தொடங்கப்படும் - என்றார்.

# ஆட்சி அதிகாரத்தை தக்கவைப்பதற்காக தமிழினத்தையே அழித்தார் கருணாநிதி

## ஜெயலலிதா குற்றச்சாட்டு



சென்னை, டிச. 13

காங்கிரஸைக்கண்டு முதல்வர் கருணாநிதி அஞ்சுகிறார். அவர் தனது ஆட்சி அழியப்போவதை நினைத்துப் பிதற்றுகிறார். ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக தமிழினத்தையே அவர் அழித்தார் - என்றுஅதிமுக.பொதுச்செயலாளர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

'கை'யும் கைநழுவிப் போய் விடுமோ என்ற அச்சத்தில், தி.மு.க. - காங்கிரஸ் இடையே சிண்டுமுடிய நான் முயற்சிக்கிறேன் என ஓர் அறிக்கையை முதல்வர் கருணாநிதி வெளியிட்டு இருப்பது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் செயல் ஆகும். அரசியல் பதவிகளை அடை வதற்காக அன்று ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட கருணாநிதிதான், இன்று ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக தமிழினத்தையே அழித்தார்.

ஆட்சி அதிகாரத்திற்காக, தன்னுடைய நிலையை காலத்திற்கேற்றாற்போல் மாற்றிக் கொள்ளும் தன்மையை உடையவர் கருணாநிதி. அவரின் எந்தப் போராட்டத்தையும் தமிழக மக்கள் நம்பத் தயாராக இல்லை.

தி.மு.கவிற்கும், காங்கிரஸுக்கும் இடையே கலக மூட்டும் முயற்சியில் நான் ஈடுபட்டுள்ளேன் எனத் தெரிவித்திருக்கிறார். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. கருணாநிதி தெரிவித்த கருத்தைத்தான் நான் குறிப்பிட்டிருந்தேன்.

மொத்தத்தில், காங்கிரஸை கருணாநிதி மிரட்டிய காலம் போய், காங்கிரஸைக் கண்டு அஞ்சுகின்ற காலம் வந்துவிட்டது என்பது அவரின் அறிக்கையிலிருந்து தெளிவாகிறது. தனது ஆட்சி அழியப்போவதை நினைத்துப் பிதற்றுகிறார்.

என்னதான் புலம்பினாலும், தி.மு.க. ஆட்சி வீழ்வது உறுதி.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியச் செய்திகள்

# மஹிந்தவை போர்க்குற்றவாளியாக இந்திய அரசு அறிவிக்க வேண்டும்!

## கம்யூ. செயலர் பாண்டியன் வலியுறுத்து



சென்னை, டிச. 13

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இந்தியா, போர் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் கூறியுள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இது குறித்துக் கூறுகையில் -

இலங்கையில் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களின் மறுவாழ்வுக்காக வீடு கட்டிக் கொடுக்க இந்திய அரசு இலங்கையிடம் ரூபா ஆயிரம் கோடி அளித்துள்ளது. போர் முடிந்து விட்டது எனக் கூறி 650 நாட்களுக்கு மேலாகியும் அவர்கள் மறுவாழ்வுக்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வீடுகள் கட்ட அடிக்கல் நடப்பட்டுள்ளது என்று இப்போது மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறுவது வேதனையளிக்கிறது.

இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வு குறித்துக் கவலைப்படாமல், மத்தியில் ஆளும் காங்கிரஸ் தலைமையிலான அரசில் முதல்வர் கருணாநிதி ஒட்டிக்கொண்டிருப்பது பச்சைத் துரோகமாகும்.

உலக நாடுகள் அனைத்தும் இலங்கை அரசை எதிர்த்து வருகிறது. இந்நிலையில் இந்திய அரசு மஹிந்த ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் - என்று தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

2 ஜி ஸ்பெக்டரம் ஊழல் விவகாரத்தால், கடந்த 21 நாள்களுக்கும் மேலாக நாடாளுமன்றம் செயற்படாமல் முடங்கியுள்ளது. இந்த ஊழல் விவகாரம் குறித்து விசாரிக்க நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைக்கப்பட வேண்டும் என்று எதிர்க் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன. ஆனால், இதற்கு செவிசாய்க்காமல் மத்திய அரசு பிடிவாதமாக இருந்து வருகிறது. எனவே, நாடாளுமன்றம் முடங்கியதற்கு மத்திய அரசின் பிடிவாதமே காரணமாகும்.

2 ஜி ஸ்பெக்ட்ரம் தொடர்பான அனைத்து ஒப்பந்தங்களையும் இரத்துச் செய்துவிட்டு மத்திய அரசு மறுஏலம் அறிவிக்க வேண்டும். அப்படிச் செய்தால் எவ்வளவு கொள்ளை நடந்துள்ளது என்பது வெளிச்சத்துக்கு வந்துவிடும். நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேறும் வரையில் எதிர்க்கட்சிகளின் போராட்டம் தொடரும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பல்கலை. அணி வீரர்களுக்கு பாராட்டுவிழா செவ்வாயன்று

யாழ்ப்பாணம், டிசெ.13

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 10ஆவது விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய யாழ். பல்கலைக்கழக வீர, வீராங்கனைகளுக்கான பாராட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள உடற்கல்வி அலகில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத்துணை வேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்து கொள்ளவுள்ளார்.

எனவே பல்கலைக்கழக விளையாட்டு அணிகளில் அங்கம் வகிக்கும் அனைத்து விளையாட்டு வீரர்களையும் இந்நிகழ்வில் தவறாது கலந்த கொள்ளுமாறு யாழ். பல்கலைக் கழக விளையாட்டு அவையின் செயலாளர் கேட்டுள்ளார்.

(எ-23)

## புதிய மலர்ச்சி....



ஆரம்பம்: யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால், உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான முழுநாள் பயிற்சிப்பட்டறை கடந்த வாரம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது யாழ்.மத்தியஸ்தர் சங்கத்தின் செயலாளர் மு.பிரான்சிஸ் மங்கள விளக்கேற்றுவதையும், பயிற்சிப்பட்டறையில் பங்குபற்றிய உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களையும் காணலாம்.

(எ-23)

# காயம் காரணமாக முக்கிய போட்டிகளிலிருந்து செரீனா விலகல்



ரெனிஸ் அரங்கில் நீண்ட நாள்களாக முதலிடத்தில் இருந்தவர் செரினா வில்லியம்ஸ் (29 வயது). கிராண்ட்ஸ்லாம் ரெனிஸ் அரங்கில் அசத்திய இவர் ஒற்றையரில் 13, இரட்டையரில் 12, கலப்பு இரட்டையரில் 2 என மொத்தம் 27 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார். கடந்த 2000 மற்றும் 2008ஆம் ஆண்டில் நடந்த ஒலிம்பிக் போட்டியின் இரட்டையர் பிரிவில் தங்கம் வென்று சாதித்துள்ளார்.

இந்த ஆண்டு நடந்த அவுஸ்திரேலியன் ஓபன் ரெனிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற செரினா, காயம் காரணமாக அடுத்து நடந்த 5 சர்வதேச தொடரில் பங்கேற்கவில்லை. மீண்டும் களமிறங்கிய இவர், பிரெஞ்ச் ஓபன் காலிறுதியில் அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசரிடம் தோல்வி கண்டார். இருப்பினும் இத்தொடரில் இரட்டையரில், தனது சகோதரி வீனஸ் வில்லியம்ஸ் உடன் இணைந்து சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

பின்னர் எழுச்சி கண்ட செரினா, லண்டனில் நடந்த விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் ரெனிஸ் தொடரில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி சம்பியன் பட்டம் வென்றார்.

ரெனிஸ் அரங்கில் கொடி கட்டிப் பறந்த இவருக்கு, கடந்த ஜூலை 7ஆம் திகதி அதிர்ச்சி காத்திருந்தது. அன்றைய தினம், முனிச் நகரில் உள்ள ஹோட்டலுக்குச் சென்ற செரினாவின், காலில் உடைந்த கண்ணாடித் துண்டு குத்தியது. இதற்கு சத்திரசிகிச்சை செய்து கொண்ட இவர் அடுத்து நடந்த யு.எஸ். ஓபன், உலக சம்பியன்ஷிப் உள்ளிட்ட முக்கிய தொடர்களில் பங்கேற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் இவரது முதலிடம் இடம் பறிபோனது.

தற்போது 4ஆவது இடத்தில் உள்ள இவர், காயம் காரணமாக அடுத்த ஆண்டு நடக்கவுள்ள ஹோப்மேன் கிண்ணம் மற்றும் அவுஸ்திரேலியன் ஓபன் உள்ளிட்ட முக்கிய தொடரில் இருந்து விலகியுள்ளார்.

(23)

# விசாரணைக்குழுவை மாற்றி அமைக்க வேண்டும்



## லலித் மோடியின் கோரிக்கை நிராகரிப்பு

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் முன்னாள் தலைவர் லலித் மோடி. ஐ.பி.எல். அணிகள் ஏலம், ஒளிபரப்பு உரிமை வழங்கியது உள்ளிட்டவற்றில் பலகோடி ரூபா ஊழல் செய்ததாக இவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது. இதனையடுத்து ஐ.பி.எல். தலைவர் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டார் லலித் மோடி. இதற்குப் பின், இவர் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க, 3 பேர் கொண்ட ஒழுங்கு நடவடிக்கைக் குழுவை பி.சி.சி.ஐ. அமைத்தது. இதில் சிரயு அமீன் (ஐ.பி.எல். தலைவர்) , அருண் ஜெட்லி (பி.சி.சி.ஐ. துணைத் தலைவர்) மற்றும் ஜோதிர் ஆதித்யா சிந்தியா (ம.பி. கிரிக்கெட் சங்கத் தலைவர்) ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இந்நிலையில், பி.சி.சி.ஐ. நிர்வாகத்தில் முக்கிய பொறுப்பில் உள்ள இவர்களை விசாரணைக் குழுவிலிருந்து நீக்க வேண்டும் என, மோடியின் வழக்கறிஞர் முகமது அப்தி தெரிவித்தார். இதற்கு பி.சி.சி.ஐ. நிர்வாகக் குழு மறுப்பு தெரிவித்து விட்டது. தவிர, ஒழுங்கு நடவடிக்கை நடவடிக்கைக் குழு தொடர்ந்து விசாரணை நடத்தும் எனவும் அறிவித்துள்ளது.

**வீரர்கள் ஏலம் ஒத்திவைப்பு**

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நான்காவது ஐ.பி.எல். 'ருவென்ரி-20' தொடர் தொடங்குகிறது. இதில், பங்கேற்கும் வீரர்களுக்கான ஏலம் வரும் ஜனவரியில்(8-9ஆம் திகதி) நடக்க உள்ளது. இம்முறை ஒவ்வொரு அணியும் 3 இந்திய வீரர்கள் மற்றும் ஒரு வெளிநாட்டு வீரர் உட்பட நான்கு பேரைத் தக்க வைத்துக் கொள்ளலாம். மற்றவர்கள் ஏலம் மூலம் தேர்வு செய்யப்படுவர். இதன்படி சென்னை சூப்பர் கிங்ஸ் அணி டோனி, முரளி விஜய், ரெய்னா, ஆல்ப மோர்கலை தக்க வைத்துக் கொண்டுள்ளது. மொத்தம் 12 வீரர்கள் அதே அணியில் நீடிக்க உள்ளனர்.

இந்நிலையில் ராஜஸ்தான் ரோயல்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் நீக்கப்பட்ட விவகாரம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால், வீரர்களுக்கான ஏலத்தை திட்டமிட்டபடி நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இது குறித்து பி.சி.சி.ஐ. அதிகாரி ஒருவர் கூறுகையில்,''சட்டப் பிரச்சினைகள் காரணமாக ஏலம் ஒத்தி வைக்கப்பட அதிக வாய்ப்பு உள்ளது'' - என்றார்.

(23)

# முதலிடத்தை இழந்தார் வூட்ஸ்



கோல்ப் தரவரிசைப்பட்டியலில் 5 ஆண்டுகளுக்குப் பின் முதலிடத்தை இழந்தார் அமெரிக்காவின் டைகர் வூட்ஸ்.

சர்வதேச கோல்ப் கூட்டமைப்பு, புதிய தரவரிசை பட்டியலை நேற்று வெளியிட்டது. இதில் அமெரிக்காவின் டைகர் வூட்ஸ் (8.13 புள்ளிகள்) 2ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். இவரை ஒரு சில புள்ளிகளில் பின்னுக்குத் தள்ளிய இங்கிலாந்தின் லீ வெஸ்ட் வூட் (8.29 புள்ளிகள்) முதலிடத்தைக் கைப்பற்றினார். இதன் மூலம் 5 ஆண்டுகளாக முதலிடத்தில் நீடித்து வந்த டைகர் வூட்சின் சாதனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.(23)

# டேவிஸ் கிண்ணத் தொடரில் அன்டி ரோடிக்



டேவிஸ் கிண்ண ரெனிஸ் தொடரில், அமெரிக்க நட்சத்திர வீரர் அன்டி ரோடிக் பங்கேற்க உள்ளார்.

டேவிஸ் கிண்ண ரெனிஸ் தொடரின், உலக சுற்றுக்கான முதல் சுற்று போட்டிகள் அடுத்த ஆண்டு மார்ச் 4-6ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இதில் இந்தியா உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்கின்றன. அமெரிக்கா தனது முதல் ஆட்டத்தில் சிலி அணியைச் சந்திக்கிறது. இந்த ஆட்டத்தில் நட்சத்திர வீரர் அன்டி ரோடிக் பங்கேற்க உள்ளார் என, அமெரிக்க ரெனிஸ் சங்கம் தெரிவித்துள்ளது. இவர் இந்த ஆண்டு நடந்த டேவிஸ் கிண்ணத் தொடரில் பங்கேற்கவில்லை.(23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி: யூசுப்பதான் - அஸ்வினுக்கு வாய்ப்பு



சென்னை, டிச. 13

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்று வருகின்றது. முதலாவது உலகக் கிண்ணப் போட்டி 1975ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடந்தது. இதில் மேற்கிந்தியத் தீவுகள் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது. 1979ஆம் ஆண்டு நடந்த 2ஆவது உலகக் கிண்ணப் போட்டியிலும் மேற்கிந்தியத் தீவுகள் அணியே சம்பியன் பட்டம் பெற்றது.

1983ஆம் ஆண்டு (இங்கிலாந்து) நடந்த 3ஆவது போட்டியில் இந்தியா உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. 4 ஆவது உலகக் கிண்ணப் போட்டியை 1987ஆம் ஆண்டு இந்தியாவும், பாகிஸ்தானும் இணைந்து நடத்தியது.

இதில் அவுஸ்திரேலியா முதல் முறையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. 1992ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடந்த உலகக் கிண்ணத்தை பாகிஸ்தான் அணி வென்றது. 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியை இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகியவை இணைந்து நடத்தின. இதில் இலங்கை அணி கிண்ணத்தை வென்றது.

1999, 2003, 2007 ஆகிய ஆண்டுகளில் நடந்த உலகக் கிண்ணத்தை அவுஸ்திரேலியா கைப்பற்றியது. அவுஸ்திரேலியா 4 முறையும், மேற்கிந்தியத் தீவுகள் 2 முறையும், இந்தியா, பாகிஸ்தான், இலங்கைஅணிகள் தலா ஒரு முறையும் உலக கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளன.

10ஆவது உலகக் கிண்ணப் போட்டியை இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் இணைந்து நடத்துகின்றன. இந்தப் போட்டி அடுத்த ஆண்டு (2011) பெப்ரவரி 19ஆம் திகதி முதல் ஏப்ரல் 2ஆம் திகதி வரை நடக்கின்றது.

3ஆவது முறையாக உலகக்




கிண்ணப் போட்டி இந்தியாவில் நடைபெறுவதால் ரசிகர்கள் மத்தியில் அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் நடைபெறுவதால் இந்த முறை உலக கிண்ணத்தை இந்தியா கைப்பற்ற வேண்டும் என்பது ரசிகர்களின் விருப்பமாகவுள்ளது.

1983ஆம் ஆண்டு கபில் தேவ் தலைமையில் இந்திய அணி உலகக் கிண்ணத்தை வென்றது. அதன் பின்னர் கிண்ணத்தை வெல்லாதது வேதனை அளிக்கிறது.

2003ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இந்திய அணி தோல்வியுற்றது. கடந்த முறை முதல் சுற்றிலேயே வெளியேறியது.

2ஆவது முறையாக உலகக் கிண்ணத்தை இந்தியா கைப்பற்ற சிறந்த வீரர்களைத் தேர்வுக் செய்ய வேண்டிய கட்டாயம் தேர்வு குழுவினருக்கு உள்ளது.

நியூஸிலாந்துக்கு எதிரான தொடரில் இந்தியா 5-0 என்ற கணக்கில் வென்றது. இந்த தொடரில் யூசுப்பதானின் துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது. இதேபோல பந்து வீச்சில் அஸ்வின் முத்திரை பதித்தார்.

இதனால் இந்த இருவரும் உலகக் கிண்ணப் போட்டியில் தேர்வுசெய்யப்பட வாய்ப்பு இருக்கிறது. தென்னாபிரிக்க தொடருக்குப் பின்னரே அணி வீரர்கள் முடிவுசெய்யப்படும்.

ஜடேஜா சகலதுறையிலும் சிறப்பாகச் செயற்படவில்லை. யூசூப்பதான் நியூசிலாந்து தொடரில் பந்துவீச்சு, துடுப்பாட்டம் இரண்டிலுமே முத்திரை பதித்தார். இதனால் சகல துறை முறையில் அவருக்கு வாய்ப்பு கிடைக்கலாம். உலகக் கிண்ணப் போட்டியில் முதன்மை சுழற்பந்து வீரர்கள் தேவை.

ஒருவர் ஹர்பஜன்சிங் மற்றொருவர் யார் என்பது முடிவு ஆகவில்லை. இதில் ஓஜாவுக்கும், அஸ்வினுக்கும் இடையே கடும் போட்டி நிலவலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகக் கிண்ணப் போட்டியில் டெண்டுல்கர், ஷேவாக் ஆரம்ப வீரர்களாக ஆடுவார்கள். 3ஆவது வீரராக கம்பீர் வருகிறார். அதற்கு அடுத்த வரிசையில் யுவராஜ்சிங், அணித் தலைவர் டோனி, சுரேஷ் ரெய்னா உள்ளனர்.

யூசுப்பதான் 7ஆவது வீரராக வரலாம். கம்பீர் சரியாக ஆடாவிட்டால் விராட்ஹோலி 3ஆவது வீரராக களமிறக்கப் படலாம். யூசுப்பதானுக்கு வாய்ப்பு இல்லை என்றால் அவரது இடத்துக்கு ஹோலி வரலாம்.

எந்த வரிசையிலும் தான் விளையாடத் தயார் என்று விராட் ஹோலிதெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து தொடரில் முனாப் பட்டேல் நன்றாக பந்து வீசினார். இதனால் அவருக்கும் வாய்ப்பு உள்ளது.

# சச்சின் சாதனைகளை யாரும் எட்ட முடியாது

## ரிச்சர்ட்ஸ் புகழாரம்



சர்வதேச கிரிக்கெட் அரங்கில் சச்சினின் சாதனைகளை, இனி யாரும் நெருங்க முடியாது - என்று ரிச்சர்ட்ஸ் புகழாரம் சூட்டியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் அணித்தலைவர் விலியன் ரிச்சர்ட்ஸ். இதுவரை 121 டெஸ்ட் (8540 ஓட்டங்கள்) மற்றும் 187 ஒரு நாள் (6721 ஓட்டங்கள்) போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இந்திய நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிரிக்கெட் அரங்கில் யாரும் எட்டமுடியாத சாதனைகளை படைத்துள்ளார் இந்திய வீரர் சச்சின். டெஸ்ட் கிரிக்கெட்டில் 50ஆவது சதத்தை எட்டவுள்ளார். அவுஸ்திரேலிய வீரர் பொண்டிங் மட்டுமே, சச்சினின் சாதனைகளை நெருங்கிக் கொண்டிருக்கிறார். ஆனால் தற்போது அவுஸ்திரேலிய அணியின் நிலைமை, பரிதா பமாக உள்ளது. பொண்டிங்கும் சிறப்பாக விளையாடுவதில்லை. இதனால் பொண்டிங் மீதான எதிர்பார்ப்பு, சந்தேகத்துக்கு இடமாகவுள்ளது.

கிரிக்கெட்டில் 20 ஆண்டுகளுக்கு மேலாக சச்சின் விளையாடி வருகிறார். 36 வயதானாலும், அவரது ஆட்டத்திறனில் தொய்வு ஏற்படவில்லை. இன்றும் திறமையாக விளையாடி வருவது ஆச்சரியம் அளிக்கிறது. கிரிக்கெட் மீதான அர்ப்பணிப்பு உணர்வுதான் இதற்கு முக்கிய காரணம். தன்னம்பிக்கையுடனும், விடா முயற்சியுடனும் செயற்பட்டால், எதையுமே சாதிக்கலாம் என்பதற்கு சச்சின் நல்ல உதாரணம்.

தற்போதைய காலகட்டத்தில், அதிரடி வீரராக அசத்தி வருபவர் செவாக் தான். இயல்பாகவே அதிரடியாக ஆடக் கூடிய திறமை அவரிடம் உள்ளது. எந்தச் சூழ்நிலையிலும் அவர் பயப்படுவது இல்லை. இது தான் அவரது வெற்றிக்கு காரணம்.

- இவ்வாறு ரிச்சர்ட்ஸ் தெரிவித்தார்.

# பட்டம் வென்றார் செய்னா



வான்சாய்: ஹொங்கொங் சூப்பர் சீரிஸ் பாட்மின்டன் தொடரின் ஒற்றையர் பரிவில், இந்திய நட்சத்திர வீராங்கனை செய்னா நேவல் சம்பியன் பட்டம் வென்று சாதித்தார். ஹொங்கொங்கில் உள்ள வான்சாய் நகரில், சூப்பர் சீரிஸ் பாட்மின்டன் தொடர் நடந்தது. இதில் பெண்கள் ஒற்றையர் இறுதியாட்டத்தில் செய்னா, சீனாவின் ஷிஜியன் வாங்கை எதிர்கொண்டார்.

விறுவிறுப்பான இறுதியாட்டத்தில் முதல் செற்றை ஷிஜியன் வாங் 21-15 எனக் கைப்பற்றினார். பின்னர் எழுச்சி கண்ட செய்னா, 2ஆவது செற்றை 21-16 என தன்வசப்படுத்தி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3ஆவது செற்றில் அபார ஆட்டத்தை தொடர்ந்த செய்னா, 21-17 என கைப்பற்றினார். இறுதியில் செய்னா 15-21, 21-16, 21-17 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, சம்பியன் பட்டம் வென்றார்.

இதன்மூலம் செய்னா, நான்காவது சூப்பர் சீரிஸ் பட்டம் வென்று சாதித்தார். முன்னதாக இவர், இந்தோனே ஷியா (2009, 10), சிங்கப்பூர் (2010) சூப்பர் சீரிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்றிருந்தார். இது, இந்த ஆண்டு இவர் கைப்பற்றிய மூன்றாவது சூப்பர் சீரிஸ் பட்டம்.

# லண்டன் செஸ் கிளாசிக் தொடர்; இந்திய வீரர் ஆனந்த் முன்னணியில்



லண்டன் செஸ் கிளாசிக் தொடரின் மூன்றாவது சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் வெற்றி பெற்றார்.

லண்டனில் உள்ள கென்சிங்டன் நகரில், கிளாசிக் செஸ் தொடர் நடக்கிறது. இதில், உலக சம்பியன் விஸ்வநாதன் ஆனந்த், முன்னாள் சம்பியன் விளாடிமிர் கிராம்னிக் உட்பட உலகின் முன்னணி வீரர்கள் எட்டு பேர் பங்கேற்றுள்ளனர்.

இதன் முதல் இரண்டு சுற்று போட்டிகளில் ஆனந்த், சமநிலை செய்து இருந்தார். மூன்றாவது சுற்றில் ஆனந்த், நோர்வே வீரர் மாக்னஸ் கார்ல்சனை சந்தித்தார்.

இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆனந்த், 77 வது நகர்த்தலில் கார்லசனை வீழ்த்தினார். இத்தொடரில் பட்டம் வெல்ல மாக்னஸ் கார்லசனுக்குத்தான் அதிக வாய்ப்பு இருப்பதாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஆனந்த் அவரை வீழ்த்தியுள்ளார். 3 சுற்று போட்டிகளில் இங்கிலாந்தின் மெக்ஷேன் (7) முதலிடத்தில் உள்ளார். அடுத்த இரு இடங்களில் தலா 5 புள்ளிகளுடன் அமெரிக்காவின் நகமுரா (2860), இந்தியாவின் ஆனந்த் (2843) உள்ளனர். நார்வேயின் கார்ல்சன் (3 புள்ளி) 6வது இடத்தில் உள்ளார்.

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து தற்போது ஓய்வுபெறும் எண்ணம் இல்லை - பொண்டிங்



சிட்னி, டிச. 13

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறும் எண்ணம் தற்போதைக்கு இல்லை - என்று அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா வந்துள்ள இங்கிலாந்து அணி, வரலாற்றுச் சிறப்பு மிக்க 5 போட்டிகள் கொண்ட 'ஆஷஸ்' டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. பிரிஸ்பேனில் நடந்த முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. அடிலெட்டில் நடந்த 2ஆவது டெஸ்டில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று 1-0 என தொடரில் முன்னிலை வகிக்கிறது. மூன்றாவது டெஸ்ட் எதிர்வரும் 16ஆம் திகதி பேர்த்தில் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 19ஆம் திகதி 36ஆவது பிறந்த நாள் கொண்டாடவுள்ள பொண்டிங், 'ஆஷஸ்' டெஸ்ட் தொடரை இழக்கும் பட்சத்தில், கடந்த 120 ஆண்டில் மூன்று முறை 'ஆஷஸ்' தொடரை இழந்த முதல் அணித்தலைவர் என்ற மோசமான வரலாறு படைக்கவுள்ளார்.

இதுகுறித்து பொண்டிங் தெரிவித்தவை வருமாறு:

அடிலேட் டெஸ்டில் தோல்வியடைந்தது பெரும் ஏமாற்றமளிக்கிறது. இப்போட்டியில் துடுப்பாட்டம், பந்துவீச்சு என அனைத்திலும் மோசமாக விளையாடியாதால் தோல்வியடைய நேரிட்டது. இந்தத் ஒரு தோல்வியை கொண்டு, ஆஸ்திரேலிய அணி ஆஷஸ் தொடரை இழந்துவிட்டது எனக் கருதிவிடக்கூடாது. இன்னும் மூன்று போட்டிகள் மீதமுள்ளன. இப்போட்டிகளில் எழுச்சி கண்டு தொடரை கைப்பற்ற அதிக வாய்ப்பு உள்ளது. தற்போது எனது கவனம் முழுவதும் பேர்த் டெஸ்ட் மீதுள்ளது. இப்போட்டியில் முழு திறமையை வெளிப்படுத்தி, வெற்றி பெறப் போராடுவோம்.

சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெறும் எண்ணம் தற்போது இல்லை. அணித் தலைவர் பொறுப்பு எனது தனிப்பட்ட முடிவு அல்ல. இது அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் முடிவு.

அணித்தலைவர் பதவியை விட, அவுஸ்திரேலிய அணிக்காக விளையா டுவதை பெரிதும் விரும் புகிறேன்.

சமீபகாலமாக எனது துடுப்பாட்டச் செயற்பாடு, திருப்தி அளிக்கவில்லை. தற்போது துடுப்பாட்டத்தில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறேன்.

எனவே அடுத்து வரும் போட்டி களில் அதிக ஓட்டங்களைக் குவித்து அணியின் வெற்றிக்குக் கைகொடுப்பேன்.

- இவ்வாறு பொண்டிங் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகள் விலைகள் உயர்வு

அச்சுவேலி, டிசெ.13

யாழ். மாவட்டத்தில் மரக்கறி வகைளின் விலைகள் மடங்கு கணக்கில் திடீரென உயர்ந்து இருப்பதோடு, சிலவகை மரக்கறிகளை உயர்விலை கொடுத்தும் தரமானவையாக பெற்றுக்கொள்ளமுடியவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை -

மரக்கறி வகைகளின் விலை கடந்த காலங்களில் அதிகரித்த போதிலும் இந்தமுறை போல விலை அதிகரிக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்த வகையில் பாவற்காய் ஒரு கிலோ 240 ரூபாவிற்கு மேல், பயிற்றங்காய் ஒரு கிலோ 260 ரூபாவிற்கு மேல், வெங்காயம் - உள்ளூர் கிலோ 200 ரூபாவிற்கு மேல், பழப்புளி கிலோ 300 ரூபாவிற்கு மேல் பெரிய வெங்காயம் 200 ரூபா, கத்தரிக்காய் கிலோ 240 ரூபா, பூசணி கிலோ 80, கரட் கிலோ 120 ரூபா, கீரைப் பிடி 50 ரூபா, பச்சைமிளகாய் 180 ரூபா, வாழைக்காய் கிலோ 80 ரூபா, கோவா கிலோ 80 ரூபா, வெண்டிக்காய் 120 ரூபா, லீக்ஸ் கிலோ 200 ரூபா, தேங்காய் பெரியது 55 ரூபாவுக்கு மேல்.

உள்ளூர் மரக்கறி வகைகளைவிட வெளிமாவட்டங்களில் இருந்து எடுத்துவரும் மரக்கறி வகைகளும் தரம் இல்லாமல் பழுதடைந்த நிலையிலேயே உள்ள போதிலும் அதிகரித்த விலையிலேயே விற்பனை செய்யப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்த மழையால் மரக்கறிகள் தோட்ட நிலங்களில் அழுகி சேதமடைந்திருப்பதோடு, யாழ். மாவட்டத்தில் பெருமளவில் மக்கள் மீள்குடியமர்ந்ததால் பாவனையாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. எனவே, மேற் கூறப்பட்ட காரணங்கள் மரக்கறிகளின் விலை ஏற்றத்துக்கு காரணமாக அமைந்துள்ளன.

இதேவேளை பிள்ளையார் கதை நிறைவு பெற்று, இன்று திருவெம்பாவை ஆரம்பமாகின்றது. சைவ உணவுப் பாவனை அதிகரித்த நிலையில் விலை அதிகரித்திருப்பது சாதாரண குடும்பங்களை, மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாக்கி இருப்பதாக மக்கள் மத்தியில் தெரிவிக்கப்படுகின்றது.

(201-11)

## சான்றிதழ் வழங்கலும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், டிசெ.13

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் மூன்றாண்டு பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவமும், உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள் கல்வியியலாளர்களை கௌரவிக்கும் விழாவும், தேசிய கல்வி நிறுவன கல்வி அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் திருமதி லிலானி அமரசிங்கவின் சேவை நலன்பாராட்டு விழாவும் இன்று முற்பகல் 10 மணிக்கு கல்லூரி கலையரங்கில் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளன. இதற்கு சிறப்பு விருந்தினராக தேசிய கல்வி நிறுவன கல்வி அபிவிருத்திப்பிரிவு பணிப்பாளர் திருமதி லிலானி அமரசிங்கவும், கௌரவ விருந்தினராக கோப்பாய் லயன் கழக தலைவர் லயன் வைத்திய கலாநிதி வை.தியாகராஜாவும் கலந்துகொள்வர். (ம)

## மரண அறிவித்தல்

### நாகமணி குமாரசாமி



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி குமாரசாமி நேற்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்தையாவின் அன்பு மருமகனும், மாணிக்கத்தின் அன்பு மருமகனும் நேசமலரின் அன்புக் கணவரும் குமுதா, சஞ்சீலன், சுஜிதா, கார்த்திகா ஆகியோரின் தந்தையும், குமார்ராஜா, பாலேந்திரன், நிவாஸ் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரஷ்சனா, தக்ஷயன், ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி லேன்,
கொக்குவில் மேற்கு.
0217903035.

தகவல்:
குடும்பத்தினர்.

(107271)

## தவறிவிட்டது

யாழ். சட்டநாதர் வீதி, இளம் கலைஞர் மன்ற வளாகத்துக்கு அருகில் I.PHONE - 3 G கமரா போன் ஒன்று நேற்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை தவறிவிட்டது. இதில் சிறு பிள்ளைகளின் நிகழ்ச்சிப் படங்கள் பதிவாகியுள்ளன. தயவுசெய்து இதனைக் கண்டெடுத்தவர்கள் 0773419052 or 0773823209 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (107269)

## நன்றி பகிர்கின்றோம்

கடந்த 06.12.2010 அன்று காலமான எமது அன்னை மிக்கேல் ஞானம்மா என்பவரின் பிரிவால் துயருற்று இருந்த வேளையில் எமது துயரை பகிர்ந்து கொள்வதற்காகவும் ஆறுதல் கூறுவதற்காகவும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசியின் ஊடாகவும் தந்திகளின் ஊடாகவும் தொடர்பினை ஏற்படுத்திய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்னும் இறந்த நாளில் இருந்து நல்லடக்க நாள்வரைக்கும் பல்வேறு இடங்களில் இருந்து எமது இல்லம் வருகை தந்து எமது துயரில் பங்குகொண்ட நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் மேலும் எமது அன்னையின் ஆன்ம ஈடேற்றத்திற்காக எமது இல்லம் வந்து அவருக்காக ஜெபித்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், எமது பங்கைச் சேர்ந்த பக்தி சபைகள் அனைவருக்கும் எமது அன்னையின் இறுதியாத்திரையிலும், திருப்பலியிலும் பங்குபற்றி செபித்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியை தெரிவிப்பதோடு 12/12/2010 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற அன்னாரின் ஆன்ம சாந்திக்கான விருந்து உபசாரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்.

(107270)


## வாகனம் தேவை

பொருள் விநியோகத்திற்கு DIMO Batta (Full Body) வாகனம் ஒன்று நாளாந்த வாடகைக்குத் தேவை.
தொடர்பு- 0777 222893.

G.C.E. (O/L) - 2010
Model English Paper with answer
எதிர்பார்ப்பு வினாக்கள் - விடைகளுடன்
By. K. Somasundaram - 0774041904.
கிடைக்கும் இடங்கள்
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
துர்க்கா போத்தகசோலை, சுன்னாகம்
அம்மா அச்சகம், மருதனார்மடம்.


## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயரத்தினம் திரவியம்

### (பருத்துறை அம்மா)



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜெயரத் தினம் திரவியம் நேற்று (12.12.2010) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ஜெயரத்தினத்தின் பாசமிகு துணைவியும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், தனபாலசிங்கம் மற்றும் பரஞ்சோதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் துரைரத்தினம், மீனலோஜினி, மங்கயர்க்கரசி, சண்முகசுந்தரம் ஆகியோரின் மைத்துனியும் செல்வரத்தினத்தின் உடன்பிறவாச் சகோதரியும் உதயகலா, சூரியகலா, சந்திரகலா, சசிகலா, பத்மகலா ஆகியோரின் சிறியதாயும் தீபன், சுதா ஆகி யோரின் பெரிய தாயும் குமுதினி, மாலினி, விருந்தினி, சிவஜினி, சுரேசன், தர்சினி, கலையரசி, பிரியா, சிவநாதன், றாயு, காலஞ்சென்ற சாந்தி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2010) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

49, மூத்த விநாயகர் வீதி,
முதலாம் ஒழுங்கை,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சண்முகசுந்தரம் (அத்தான்)
0212227098
கமலேஸ்வரி புடைவையகம்,
ஜெயலக்சன் அழகுமாடம்,
கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்.

(வி/573994)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தாயின் மடியில்
16
★
04
★
1921



இறைவன் அடியில்
13
★
11
★
2010

### திருமதி பொன்னுத்துரை தங்கமுத்து

அன்பின் திருவுருவாய், பாசத்தின் முகவரியாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய் எங்களை வழி நடத்தி
வாழவைத்த தெய்வமே!
அருட் பெரும் சோதியில் கலந்து 31 நாள்கள் ஓடி
மறைந்தனவே அம்மா உங்கள் நினைவுகள் நீங்காது
அம்மா! எங்கள் எல்லோருடைய கண்ணீரால் உங்கள்
பாதங்களை அர்ச்சித்து நிற்கின்றோம் அம்மா.

கடந்த 13.11.2010 அன்று இறைபதம் அடைந்த எம் குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.12.2010) திங்கள்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் இடம்பெறும். இந்நிகழ்வைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(107272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையின் பின்னர் சரத் பொன்சேகா ஐ.தே.க. உறுப்பினராகச் செயற்படுவார்

## உறுதியாகக் கூறுகிறார் சஜித்

கொழும்பு,டிசெ.13

அரசின் சூழ்ச்சி காரணமாக சிறைத்தண்டனை அனுபவித்து வரும் சரத் பொன்சேகா விடுதலையாகியதும் எமது கட்சியுடன் இணைந்தே செயற்படுவார். இவ்வாறு உறுதியாகக் கூறுகிறார் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ.


சிறிகொத்தாவில் நடைபெற்றுவரும் ஐ.தே.கட்சியின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

அரசின் சூழ்ச்சி காரணமாக சிறைத்தண்டனை அனுபவித்து வரும் சரத் பொன்சேகாவின் விடுதலைக்காக நாம் அனைவரும் ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும். அவர் விடுதலையானதும் ஐ.தே.கட்சியுடன் இணைந்து இக்கட்சியின் ஓர் உயரிய உறுப்பினராகவே செயற்படுவார் என்பதை இத்தருணத்தில் உங்களுக்கு உறுதியுடன் தெரிவிக்கின்றேன். விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்றிய சரத் பொன்சேகா, ஆளும் கட்சியின் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டையும் நிச்சயம் காப்பாற்றுவார்.

ஐக்கிய தேசிய கட்சியானது தற்போது வெற்றிச் சமூகத்தை உருவாக்கிக்கொண்டு வருகின்றது. இந்நிலையில் கடந்த காலத் தோல்விகள் எதிர்காலத்தின் வெற்றிப்படிக்கற்களாகத் தோற்றமளிக்கும். அதற்கான காலம் மிக நெருங்கிவிட்டது. அந்த வெற்றிப் பயணத்தை நோக்கி நாம் இன்று முதல் பயணிப்போம். அதற்காக கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட ஆதரவாளர்கள் , பொதுமக்கள் வரை அனைவரும் வெற்றி என்ற உறுதியினை மனதில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதனூடாக ஐக்கிய தேசிய கட்சியானது புதிய யுகத்தை நோக்கி பயணிக்கும் - என்றார் (ஓ)

நேற்றைய ஐ.தே.க. மாநாட்டில் ...







# சிறுபான்மைக் கட்சிகளுடன் இணைந்தே ஐ.தே. க. இனி தேர்தல்களில் போட்டியிடும்

## கட்சியின் வருடாந்த மாநாட்டில் கரு ஜயசூரிய

கொழும்பு,டிசெ.13

எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களின்போது தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்தே ஐ.தே.க. போட்டியிடும் என அக்கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக அக்கட்சிகளின் தலைமைகளுடன் கலந்தாலோசித்து தீர்மானம் ஒன்றை எட்டியுள்ளதாகவும் ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய உரையாற்றும்போது மேலும் தெரிவித்தார்.

**ரவி கருணாநாயக்க**

ஐ.தே.கட்சியின் அசமந்தப் போக்குக் காரணமாகவே இன்றைய அரசாங்கம் வலுப்பெற்று ஆட்சியில் அமர்ந்திருக்கிறது. ஐ.தே.கட்சியை வலுப்படுத்துவதன் மூலமாக அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கட்சியின் வருடாந்த மாநாட்டில் பல்லாயிரக் கணக்கான ஆதரவாளர்களின் முன் உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

நேற்றுக்காலை ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் ஆரம்பமாகிய அக்கட்சியின் வருடாந்த மாநாட்டில் ஆயிரக் கணக்கான ஆதரவாளர்கள் இதுவரை கலந்துகொண்டிருப்பதோடு மேலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.(ஒ)

# பருத்தித்துறையில் இரு கடைகளில் திருட்டு

வடமராட்சி, டிசெ.13

பருத்தித்துறையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இரு கடைகள் உடைக்கப்பட்டு திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகியுள்ளன.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மருதடிப் பகுதியில் உள்ள பலசரக்குக் கடையும் நகைக்கடையுமே சூறையாடப்பட்டுள்ளன.

பலசரக்குக் கடையில் இருந்து மின் தராசுகள், சிகரெட்டுக்கள் மற்றும் சில பொருள்களுடன் ஒரு தொகைப் பணமும் திருட்டுப் போயுள்ளன என்றும்-

இந்தக் கடைக்கு எதிர்ப்புறமாகவுள்ள நகைக் கடையிலும் மிச்சசொச்சத் தங்கமும் வேறு சில பொருள்களும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன - என்றும் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இரு கடைகளிலும் கூரை வழியாக "சீற்"றைப் பிரித்தே திருடர்கள் உட்புகுந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-236)

# மகோற்சவம்

சாவகச்சேரி,டிசெ.13

சரித்திரப் பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (ஓ-131)

# நல்லிணக்க ஆணைக்குழு முன் இன்று பிரதியமைச்சர் முரளிதரன் சாட்சியம்

கொழும்பு,டிசெ.13

ஜனாதிபதியினால் அமைக்கப்பட்டுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் இன்று சாட்சியமளிக்கவுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள், நல்லிணக்க அமர்வு கொழும்பில் இன்று நடைபெறவுள்ளது. இந்நிலையில் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் ஆணைக்குழு முன்பாக சாட்சியமளிக்கவுள்ளார்.

ஆயுதக்குழு உறுப்பினராகவும், அரசியல்வாதியாகவும் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கடந்த மூன்று தசாப்த காலமாக நடந்த யுத்தத்தில் மாறுபட்ட பங்களிப்புகளை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கண்டி-ஸ்ரீதலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதல் மற்றும் 60 பொலிஸார் படுகொலை செய்யப்பட்டமை உள்ளிட்ட விடயங்களுக்கு இவர் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டுமென்று கிழக்குமாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் நல்லிணக்க ஆணைக்குழு முன்பாக சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டிருந்தார். (ஓ)

# பருவப்பெயர்ச்சி மழை அடுத்த வாரம் ஆரம்பம்

கொழும்பு,டிசெ.13

வட கீழ் பருவப்பெயர்ச்சி மழை எதிர்வரும் 15 ஆம் திகதி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது - என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடகீழ் பருவப்பெயர்ச்சி காற்று உருவாகும் பட்சத்தில் நாட்டின் வடகிழக்குப் பிராந்தியத்தில் அதிக மழை பெய்யக்கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. ([illegible])

# இங்குள்ள அரசியல் தெரிவைப் புரிந்துகொண்டு புலம்பெயர்ந்த தமிழர்கள் செயற்படவேண்டும்

## விரிவுரையாளர் கீதபொன்கலன் கருத்து

யாழ்ப்பாணம்,டிசெ.13

இங்கிருக்கும் மக்களின் அரசியல் தெரிவு என்ன என்பதைப் புரிந்துகொண்டு அதற்கேற்ற விதத்தில் புலம்பெயர்ந்த தமிழர்கள் செயற்பட வேண்டும்-இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழக அரசியல்துறை விரிவுரையாளர் கீதபொன்கலன் தெரிவித்தார்.

யாழ்.சிந்தனைக் கூடத்தின் ஏற்பாட்டில் 'தமிழர் அரசியலும் சர்வதேசத்தின் இன்றைய நிலையும்' எனும் கருப்பொருளில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு :

1983 ஆம் ஆண்டுக்கு முன்னரான காலப்பகுதியில் தமிழர்களுக்கு பல நாடுகள் நண்பர்களாக இருந்தன. 1983 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் தமிழர்களுக்கு நண்பர்கள் இல்லாமல்போக இலங்கை அரசுக்கு நண்பர்கள் அதிகரித்துவிட்டனர்.

தமிழர்களாகிய நாம் எமது பிரதான நண்பன் இந்தியாவையும் இழந்துவிட்டோம். இந்தியா ஒருபோதும் தமிழர்களுக்கென்று தனியான நாடு என்பதை ஆதரிக்கவும் இல்லை; ஆதரிக்கப் போவதும் இல்லை.

செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் உலக அரசியலில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. உலக நாடுகள் வன்முறையை ஒழிப்பதற்காகக் குறிப்பாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் உலக நாடுகளுடன் கூட்டுச்சேர்ந்து செயற்பட்டன.

இந்த நடவடிக்கைகளை, மாற்றங்களைச் சரிவரப்புரிந்துகொண்ட இயக்கங்கள் சில அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொண்டன. எங்களுடைய போராட்டம் சாகா வரம் பெற்றது என நாம் கருதியது தவறு.

தனிநாடு கோரிக்கையையும், வன்முறையையும் உத்தியோக பூர்வமாகக் கைவிடுவதாக அறிவித்தால் எமக்கு 1983 ஆம் ஆண்டுக்கு முற்பட்டதைப் போன்று நிறைய நாடுகளின் நட்புக் கிடைக்கும்.

நாம் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் எமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். நாம் நினைப்பதைவிட இலங்கை அரசாங்கம் பலமாகவே உள்ளது. எந்த நிலையிலும் இலங்கையைப் பாதுகாக்க இந்தியா, சீனா தயாராகவே உள்ளன.

இப்போதைய அரசியல் சூழ்நிலையே தொடர்ந்தும் இருக்கப் போவதில்லை. மாற்றம் வரும். தற்போதைய நிலை மாறும் காலத்தில் இப்போதிருக்கும் இந்த அரசியலைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். மாற்றம் வரும்போது நாம் ஜனநாயக ரீதியில் எமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

இணக்க அரசியலில் எனக்கு உடன்பாடு இல்லை. இணக்க அரசியல் செய்பவர்கள் செய்யட்டும். அதற்காக எல்லோரும் இணக்க அரசியல் என மந்திரி சபையில் போய் அமரக்கூடாது. இணக்க அரசியல் மூலம் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்பவர்கள் செய்யட்டும். அவர்களை நாம் துரோகிகளாகப் பார்க்கக் கூடாது. இன்னொரு தரப்பினர் அரசில் இருந்து விலகியிருந்து அரசியல் செய்யட்டும்.

இந்த நிலை மாறும் காலத்தில் நாம் பொருளாதாரத்திலும் அபிவிருத்தியிலும் கவனம் செலுத்த வேண்டும். மென்மையான மட்டத்தில் அரசியலைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். எங்களுக்கு யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு செயற்படுகின்ற ஆளுமை இல்லை என்றார்.(ஓ-15)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நூலகவியல் பதிப்பகம் ...தகர சபை, யாழ்ப்பாணம்.

# பெருஞ் சத்தத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த அச்சுறுத்தும் இயற்கைச் சீற்றம் இடம்பெற்றது.

''நண்பகல் 12.50 மணியளவில், பெரும் உறிஞ்சு குழல் வைத்து உறிஞ்சுவது போன்ற சத்தம் கேட்டது. வழக்கையாற்றுப் படுக்கைக்கு அருகில் இருந்த வயல் நிலங்களில் இருந்த நீர் திடீரென வான் நோக்கி மின்னல் வேகத்தில் சுழன்று பெருஞ் சுழலாகப் பாய்ந்தது. இதனால் வானத்துக்கும் நிலத்துக்கும் இடையில் கரும்புகை வடிவிலான ஒரு நூல் தொடுப்பு ஏற்பட்டது'' என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

''வானில் றொக்கெட் சென்றால் ஏற்படும் அடையாளம் போன்று அது இருந்தது'' என்றார் ஒருவர்.

சுமார் அரை மணி நேரம் இவ்வாறு தண்ணீர் வான் நோக்கி உறிஞ்சப்பட்டது எனப் பிரதேசவாசிகள் கூறினர்.

சூறாவளி போன்று தண்ணீர் வான் நோக்கி இழுக்கப்பட்டதைக் கண்ட, வயல் நிலங்களில் வேலைசெய்து கொண்டிருந்தவர்கள் பதற்றமடைந்து ஓட்டம் எடுத்தனர். அப்பகுதி வீடுகளில் இருந்தவர்களும் பயத்தில் வீதிகளுக்கு விரைந்தனர். சுனாமி ஏற்பட்டு விட்டதோ என்ற அச்சத்தில் மக்கள் இடம்பெயர்வதற்கும் ஆயத்தமாகினர்.

எனினும் துணிச்சல் மிக்க இளைஞர்கள் சிலர் தண்ணீர் வான் நோக்கி இழுக்கப்படுவதை அருகில் சென்று தமது கமெரா மொபைல் போன்கள் மூலமாகப் பதிவு செய்தனர்.

விடயம் காட்டுத் தீ போலப் பரவியதில் சுனாமி அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், கல்லுண்டாய் பகுதியில் கடல் உள்வாங்கிக் கொண்டதாகவும் வதந்திகள் பரவ ஆரம்பித்தன. கொழும்பில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் இது குறித்த விசாரிப்புக்களும் வந்தன.

இதற்கு முன்னர் ஒரு போதும் இவ்வாறான இயற்கைச் சீற்றங்கள் இப்பகுதியில் இடம்பெற்றதில்லை என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த விநோத இயற்கைச் சீற்றம் குறித்து வளிமண்டலவியல் அவதான நிலையப் பொறுப்பதிகாரி புஸ்பநாதனுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் தெரிவித்ததாவது:-

இவ்வாறான சம்பவம் சாதாரணமாக இடம்பெறக் கூடியதே. இதனை மினி சூறாவளி என்று கூறலாம். கடலிலும் தரையிலும் இது ஏற்படலாம்.

வளிமண்டலத்திலுள்ள அமுக்க வேறுபாடு காரணமாக இவ்வாறான மினி சூறாவளிகள் ஏற்படுகின்றன. கடந்த இரு தினங்களாக அதிக வெப்பநிலை நிலவியது. அதனாலேயே இவ்வாறு ஏற்பட்டிருக்கலாம்.

சில சந்தர்ப்பங்களில் இவ்வாறான சூறாவளிகள் உயிர் மற்றும் உடைமைக்கும் சேதங்களை ஏற்படுத்தக் கூடும். எனவே மக்கள் அவதானமாகவும் விழிப்புடனும் இருக்க வேண்டும் - என்றார். (உ-14-302-100)

# வாக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டில் இருந்து 24 ஆயிரத்து 567 மாணவர்கள் தோற்றுகின்றனர். இவர்களில் 16 ஆயிரத்து 344 பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகள் 8 ஆயிரத்து 223 பேர் தனியார் பரீட்சார்த்திகளாவர்.

வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து 3 ஆயிரத்து 647 பேரும், 2 ஆயிரத்து 241 தனியார் பரீட்சார்த்திகளும், வடமராட்சிக் கல்வி வலயத்திலிருந்து 2 ஆயிரத்து 728 பேரும், ஆயிரத்து 336 தனியார் பரீட்சார்த்திகளும், கோப்பாய் பிரதேசத்திலிருந்து ஆயிரத்து 250 பேரும், 741 தனியார் பரீட் சார்த்திகளும், யாழ்ப்பாணக் கல்வி வலயத்திலிருந்து 6 ஆயிரத்து 188 பேரும், 2 ஆயிரத்து 970 தனியார் பரீட்சார்த்திகளும், தீவகக் கல்வி வலயத்திலிருந்து 970 பேரும், 305 தனியார் பரீட்சார்த்திகளும், தென்மராட்சி கல்வி வலயத்திலிருந்து ஆயிரத்து 561 பேரும், 680 தனியார் பரீட்சாத்திகளும் பரீட்சைக்குத் தோற்ற உள்ளனர்.

இவர்களுக்காக 70 பரீட்சை நிலையங்கள் செயற்பட உள்ளன. இதேவேளை -

நாடளாவிய ரீதியில் 5 லட்சத்து 4 ஆயிரத்து 416 மாணவர்கள் தோற்றுகின்றனர். இவர்களில் பாடசாலை பரீட்சார்த்திகள் 3 லட்சத்து 94 ஆயிரத்து 603 பேர். தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஒரு லட்சத்து 9 ஆயிரத்து 813 பேர். மாணவர்களுக்கு வசதியான 3,804 பரீட்சை நிலையங்கள் செயற்படுகின்றன.

ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சைக்கான பிரிவு இலங்கை முழுவதும் 33 பரீட்சை பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டம் இரண்டு பரீட்சைப் பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டு யாழ்ப்பாணம் I, யாழ்ப்பாணம் II என்ற வகையில் பரீட்சைகான ஏற்பாடுகளை இலங்கை பரீட்சைத் திணைக்களம் செய்துள்ளது. யாழ்.பிராந்தியம் I இல் 66 பரீட்சை நிலையங்களும் 13 இணைப்பு நிலையங்களும் யாழ். பிராந்தியம் II இல் 85 பரீட்சை நிலையங்களும் 13 இணைப்பு நிலையங்களும் செயற்படுகின்றன. பிராந்திய நிலையம் ஒவ்வொன்றிற்கும் தலா ஒவ்வொரு பிராந்திய ஒருங்கிணைப்பு நிலையம் நிறுவப்பட்டுள்ளன.

பரீட்சைகள் திட்டமிட்ட முறையில் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக இலங்கை பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (ஒ-15-11)

# அமைச்சர் சாலிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அண்மைக் காலங்களாக தமிழகத்தில் இலங்கை அமைச்சர்கள் கலந்துகொள்ளும் வைபவங் களில் அவர்களை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது. சமீபத்தில் நாடாளுமன்ற உறுப் பினர்பைசால் காசிம் கோவையில் நடைபெற்ற புடைவைக் கண்காட்சிக்குச் சென்று எதிர்ப்புப் போராட்டம் காரணமாக பின்வழியால் திரும்பி வந்தார். இப்போது இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஏனைய மாநிலங்களுக்கும் பரவி உள்ளது.

கர்நாடக மாநிலம் பெங்களூர் அரண்மனை மைதானத் தில் நடைபெற்றுவரும் ஆயுர் வேத இலவச மருத்துவ முகாமில் சுதேச வைத்திய அமைச்சர் சாலிந்த திசாநாயக்க கலந்து கொள்ளவிருந்தார். இதையறிந்த கர்நாடக தமிழ் அமைப்பினர் போராட்டம் நடத்துவோம் என அறிவித்தனர்.

இதன்படி கடந்த வெள்ளிக் கிழமை பெங்களூர் எம்.ஜீ. வீதி யிலுள்ள காந்தி சிலை முன்பு ஏராளமான தமிழர்கள் திரண்டு வந்து போராட்டம் நடத்தினர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் கொடும்பாவியையும் அவர்கள் தீயிட்டுக் கொளுத்தினர்.

இதையடுத்து, அமைச்சர் சாலிந்த திசாநாயக்க மருத்துவ முகாமுக்கு வராமல்திரும்பிச் சென்றார் என அங்குள்ள பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (சி)

# முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புனர்வாழ் வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுள் 360 பேர் தோற்றினர்.

இவர்களுள் 211 பேர் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர்.

அண்மையில் வெளியிடப்பட்ட உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நாடு முழுவதும் ஒரு லட்சத்து 40 ஆயிரம் தொடக்கம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் வரையானோர் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்கத் தகுதிப் பெற்றுள்ளனர். 22 ஆயிரம் பேர் மாத்திரமே பல்கலைக் கழகத் திற்கு இசட் புள்ளிகளின் அடிப்படையில் உள்வாங்கப்படுவர் என்று பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார் - என்றார். (உ-சி)


* IELTS- 3months
1. Academic Training Group
2. General Training Group
18.12.2010



* Spoken English - 3months
வார/ வார இறுதி வகுப்புகள் ஆரம்பம்..
★ அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
★ ஒவ்வொரு பிரிவிலும் 10 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி
★ கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தும் வசதி
★ இன்றிலிருந்து அனுமதி வழங்கப்படும்.
European College
தொடர்பு:
European College of Higher Studies,
315 1/2, Parameeswara Junction,
Palaly Road, Jaffna.
(யாழ்.பல்கலை கழகத்திற்கு அருகில்)
Tel: 0771882507, 0213734747

CHEMISTRY COURT
80, ARASADY ROAD, JAFFNA
இரசாயனவியல் - 2012 - A/L
சக்தியியல்
ஆரம்பம் :- 14.12.2010 (Tue)
Tue, Thu-(6.30-7.30) A.m
BY - RAJAH

A/L DAY CLASS

| | |
|---|---|
| Tam.- திரு.குழந்தை | Acc.- திரு.தவா |
| Log.- திரு.கமல் | Eco.- திரு.சண் |
| H.c.- திரு.ஜெயக்குமார் | B.st.- திரு.பிரதீபன் |
| P.sc.- திரு.செந்தூரன் | ஆரம்பம் : 13.12.2010 திங்கள் 7.30 a.m |
| Dra.- திரு.சுகந்தன் | |
| Geo.- திரு.கரன் | யூனிவேர்சல் |
| His.- திரு.ஸ்ரீ | யா/இந்துமகளிர் கல்லூரி அருகே |

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA

| 2011 - A/L மின்புலம் | A/L - DAY CLASS |
|---|---|
| PHYSICS ⇨ K.SELVAN B.Sc (Hons) | |
| ஆரம்பம் :- 14.12.2010 (Tue) | |
| Tue, Thu-(6.30-7.30) A.m | Tue,Wed, Thu-(5.30-6.30) P.m<br>Sat, Sun - (2.00-3.30) P.m |

IIS உங்களை மனமார வாழ்த்துகின்றது
கல்வி எனும் கடலில்
முயற்சி எனும் படகேற்றி
வெற்றி எனும் கரையை அடைய
2010 O/L பரீட்சைக்குத் தோற்றும்
மாணவர்கள் அனைவருக்கும் IIS
தனது மனமார்ந்த வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கின்றது.
Institute of Informatics Studies
# 100 Clock Tower Road,Jaffna
T.P. : 021 2222831, 0214922741
E-mail : iis@iis.edu.lk

After A/L >>Be a Degree Holder in Medical Field
Learn Sri Lanka Medical Council Approved
HND in Pharmacy
Higher National Diploma in Pharmacy
Get a Government Job
Or Work in UK ?
Be a world Recognized Degree Holder !



Quality Assured
மருத்துவக்கல்வியின் முன்னோடிகளிடமிருந்து
யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக...
■Lectures by Medical Doctors
■Guidance from Qualified Pharmacists
■Internship Arrangements Free of Charge
Starting Soon
Book your seat now !
Duration - 2 Years
Mode of Study : Part Time/Weekend Classes
Entry Requirements: Pass in Chemistry in G.C.E A/L
Free Counseling Available now !
Visit us for details
Call for appointments only :0777302882
Knowledge Universe®
Malaysian College of Business and IT
Tel: 0777302882 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info
இல 75.கோவில் வீதி.யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை முன்பாக)


# மரண அறிவித்தல்

## திருமதி தங்கம்மா தம்பிஐயா



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா தம்பிஐயா நேற்று (12.12.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயாவின் அன்பு மனைவியும் கனகராஜா (கனடா), காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் நவமணி (கனடா), தியாகராஜா, புஸ்பராணி, இரத்தினபூபதி, இந்திரபூபதி ஆகியோரின் அன்புத் தாயும் குணபாக்கியம் (கனடா), சற்குணலீலாவதி, காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் மங்கையர்க்கரசி, செல்வராசா, காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியும் ரவிசங்கர் (அமெரிக்கா), காலஞ்சென்றவர்களான தேவதா, மணிவண்ணன் மற்றும் உதயணன் (கனடா), மன்மதன் (கனடா), வினோதன் (கனடா), சுகிர்தா (கனடா), தமிழ்ச்செல்வி, அன்பரசி (கனடா), தயாநிதி, இராஜசேகரன் (கனடா), திருக்குமரன் (கனடா), சுகந்தன், சுகன்யா (லண்டன்), சுரேகா, கார்த்திகா (கனடா), கார்த்தீபன் (கனடா), கார்த்திகேயன், ஸ்ரீஸ்கந்தராசா, கிரிஜா, காலஞ்சென்ற சுதந்திரன் மற்றும் ஜெயகௌரி (சுவிஸ்), அகிலகௌரி, துவாரகி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, செல்லமுத்து, கனகம்மா மற்றும் இராசம்மா, பொன்னுச்சாமி ஆகியோரின் சகோதரியும் யோகம்மாவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2010) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாவற்குழி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்தி விநாயகர் வீதி,
நாவற்குழி,
கைதடி.

தகவல் :
மகன் - த.தியாகராசா.

(107284)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.